ரிஜிஸ்டர் நெ: 2041

தனிப்பிரதி விலை ஒரு அணா

# தமிழ்நாடு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன்பணம் | — ரூ. | 3—0 |
| 6-மாத சந்தா ,, | — ,, | 1–12 |
| வேளி நாட்டிற்கு ,, | — ,, | 4—0 |

ஞாயிறுதோறும் வெளிவருவது.

ஆசிரியர் ச. வெ. இராமலிங்கம்

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு கு. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு கு. 2,
நீடித்த விளம்பரத்துக்கு தனி விசிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தியூ ஆடிமீ 18உ ( 2—8—1931) | மலர் 14

அரசாங்க இரசாயன பரிசோதகர்களாலும், ஆங்கில வைத்திய நிபுணர்களாலும், ஐக்கோர்ட்டு ஜட்ஜுகளாலும், அரசர்களாலும், அநுபவித்துக்கொண்டாடப்படுகிறதும், வைத்திய மகாநாடுகளில் நற்சாட்சி, பரிசு முதலியன பெற்றவைகளுமான

வைத்திய பாஸ்கர பண்டிட் எஸ். எஸ். ஆனந்தரின்

புகழ்பெற்ற சித்த மருந்துகள்.

## மகாசந்தனதித்தைலம்

வெட்டைச்சூடு, மேகச்சூடு, மூலச்சூடு, மூளைச்சோர்வு, நரம்பு பலவீனம், தலைவழுக்கை, இளமையில் நரைத்தல், மயிர் உதிர்தல், கண்ணோய், காதுநோய், மூக்கைப்பற்றிய பீநச நோய் முதலான வற்றை நீக்குவதில் இது சிகரற்றது. மூளையை அதிகமாக உபயோகிப் பவர்களுக்கு ஞாபக சக்தியை அதிகப்படுத்திக்குளிர்ச்சி தருவதில் இன்றியமையாதது. தலைமுழுகுவதற்கும், தலைமயிரை வாரிக்கொள்வதற்கும் மனோகரமானது. பொதுவாக கழுத்திற்கு மேற்பட்ட எல்லாப்பிணிகளையும் கண்டிக்கவல்லது. ஒரு முறை பரீட்சித்துப் பார்த்தால் உண்மை விளங்கும்.

6 அவுன்சு ரூ. 1— 0—0. 24 அவுன்சு 3—12—0.
12 ,, ரூ. 1—14—0. மாதிரி புட்டி 0—3—0.

## மேக நோய் மருந்து

இது கருப்பத்தில் உண்டான நோய்கள், நடுவில் தனது செய்கைத்தவறுல் வந்த மேக நோய்களாகிய கிரந்திகன், கல் அடைப்பு, சதை யடைப்பு, தொண்டையிற் சதை வளர்ச்சி, கருமேகம் செம்மேகம், வெண்மேகம், வெடிமேகம், தோல் தடித்து தினவெடுத்தல் முதலிய மேக நோய்களைப் போக்கும் அருமருந்தாகும். இதைஉபயோகிக்கும் விதத்தை நமது கேட்லாக்கில் காண்க.

40 நாள் மருந்து ரூ. 3—8—0.
20 ,, ரூ. 2—0—0.

## அமுத சுரபி

[மகாகாய கற்பம்]

இது ஆண் பெண் இருபாலர்க்கும் எற்பட்டுள்ள இருதய பல வீனம், மூளை பலவீனம், சோம்பல், வெட்டைச்சூடு, மூலச்சூடு, உடம்பு மெலிவு, கை கால் அசதி, அகாலமூப்பு, கண் மங்கல், மலட்டு நோய் முதலியவைகளை நீக்கி உடம்பின் உள்ளுறப்பு, வெளி புறப்புகளை வலிவடையச் செய்யும், கஞ்சா அபின் முதலிய மயக்கப் பொருள்களைச் சேர்த்துச்செய்யும் லேகியங்களைப் போல் இது ஒன்றும் கெடுதிகளைச்செய்யாது.

1 பவுண்டு விலை ரூ. 3—8—0.
1/2 ,, ரூ. 1—14—0.

## ஜீரணி லேகியம்

இக்காலத்தில் வரும் நோய்களுக்கு அடிப்படையாகவுள்ளது மலச்சிக்கலே யாகும். இதுவே பிணிகளுக்கெல்லாம் மூலகாரணமாகயிருக்கிறது. எனவே, அவ்வித மலச்சிக்கலை யொழித்து நோய் வரவொட்டாது செய்வதற்கு நமது ஜீரணி லேகியம் முதன்மையானதாகும். மற்றும் பசியின்மை, பித்தவாயு, புளியேப்பம், சூலை யெரிச்சல், வயிற்று நோய், குன்மம், மார்பு நோய், மயக்கம், வாந்தி, நாவிற் சுவையின்மை முதலிய நோய்களை நீக்கும். வாய்க்குமதுரமானது.

பெரிய டப்பி ரூ. 2—0—0.
சிறிய டப்பி ரூ. 1—2—0.

## முக்கிய அறிவிப்பு.

எமது முன்னோர்கள் சாஸ்திர விதி தவறாது, பரம்பரையாய்க்கையாண்டுவந்த நமது மகாசந்தனதித் தைலம் ஒன்றே சுமார் 24 வருஷங்களுக்குமுன் வியாபார முறையில் முதன் முதல் வெளிவந்தது. நமது தைலத்தின் பெருமை இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் பரவி மிகுதியாய் வியாபாரம் கட்பெற்று வருவதைக்கண்டு பலர் தற்காலம் மகா சந்தனதித்தைலம் என்ற பெயரால் விளம்பரம் மிகுதியாகச் செய்கின்றார்கள். இதனைக்கண்ணுறும் அன்பர்கள் நமது பெயரையும் "பாதுமாதா" (டிரேட் மார்க்) வியாபாரக்குறியையும் கவனித்து வாங்கும்படியாக எச்சரிக்கை செய்கின்றோம்.

நோயைப்பற்றி விரிவாக ஒரு கடிதம் எழுதினால் அதற்குச் செய்யவேண்டிய பக்குவங்களையுடனே தெரிவிக்கப்படும். எல்லா இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

இலவம் விலாசம் தெரிவிப்போர்க்குச் "சுகவழி" என்னுஞ் சிறு புத்தகமும், கேட்லாக்கும் இலவசமாக அனுப்பப்படும்.

தமிழ் வைத்தியசாலை, 221, தங்கசாலைத்தெரு, சென்னை.

அரசாங்க இஞ்சினியர்களில் 14 பேர்களாலும், மற்ற பிறபலர்களாலும் மதிக்கப்பெற்ற

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்".

50 படங்களுடன் 200 பக்கங்களடங்கிய புஸ்தகம் விலை ரூ. 2. தபால் செலவு வேறு. வெளிநாட்டு ஆடர்களுக்கு முன்பணம் அனுப்ப வேண்டும். ஏஜண்டுகள் தேவை.

மோட்டார் ஸ்கூல் 1916ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிசம் கற்றுக்கொடுத்து லர்ன்மென்ட் கூசென்ஸும், பாடசாலை சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்சினீரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர், சென்னை

வேளிவந்து விட்டது! வாங்கத்தவராதீர்கள்!!

மூந்துங்கள்!!!

நாளது ஆகஸ்டுமீ த்திற்குள் நடக்கும் பொது எலெக்ஷனுக்கு முன் வாங்குங்கள்!

புதிய பஞ்சாயத்துகளுக்கும், தாலூகா போர்டுகளுக்கும், டிஸ்டிரிக்ட்டு போர்டுகளுக்கும், இவைகளின் மெம்பர்களுக்கும், ஆங்கிலமறியாத பொது ஜனங்களுக்கும் வெகு முக்கியமான

சென்னை லோக்கல் போர்டு ஆக்ட்.

(1930ம்வரை வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

மிகவும் தல்லியமானதும் எளிதில் புரியும் படியான அழகிய தமிழில்

M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,

(வக்கீல், அகில இந்தியா லா ஜர்னல் பத்திராசிரியர் திருவள்ளூர்) அவாகளால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சொற்பகாப்பிகளே எம்மிடம் உள்ளன.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—6—0

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

நிமிஷக்கணக்கில் தணமடைவதைவிட்டு ஏன் கவலைப்படுகிறாய்?

சுலபசுக நிவாரணி.

ஆயிரகணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சலாசகாச ரோகத்தினால் தூரைபீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கஷ்டசுவாசம், மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், தடைப்பு, கரகரப்பு, எரிச்சல் வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடரை உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், சாராளமாய்ப் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் ராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. 48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக் கூடியதின் 1க்கு 1-4-0. தபால் கூலி அணா. 4.

புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S. I.

சோல் ஏஜண்டுகள்:—

தாதா & Co., 52 நைனியப்ப நாயகன் தெரு மதராஸ்.
K. S. மேதர & Co., 234, சைனபஜார் ரோட் மதராஸ்.
வெள்ளச்சாமி, No. 300, சிராங்கூன் ரோட், சிங்கப்பூர்

குணமில்லாவிடில் பணம்
வாப்பீஸ் செய்யப்படும்

சித்தரசம்

சகல வியாதிகளுக்கும் உள்ளுக்கும், வெளியிலும் உபயோகிக்க நிமிஷகணக்கில்குணமாகும்

புட்டி 1-க்கு ரூ. 1—0—0

சி. பி. சாமி, சித்தமருந்து செய்சாலை பழநி S. I.

"சன்மார்க்கன்"

உயரிய தமிழ்
மாதப்பத்திரிகை.

ஆண்டுசந்தா.

உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர் (நாவலூற்று)
சி. சுவாமி சிவநேசம்,
"சன்மார்க்கன்" பழனி

அகத்தியர் ஆராய்ச்சி.

இதுசென்னை இராஜதானி கலாசாலை தமிழ் ஆசிரியரும் கலாவல்லவருமான பண்டிதர் உயர்திரு. சா. நமச்சிவாய முதலியார் அவர்களால் அனேக நூல்களை ஆராய்ச்சி செய்து பல ஆதாரங்களைகொண்டு எழுதப்பட்டதாகும்.

விலை அணு 0—2—0 தான். வேண்டுவோர் 3 அணு ஸ்டாம்பு அனுப்பவும்.

பகுத்தறிவு விடுதலை.

அல்லது ஜீவாத்மா இல்லை, என்னும், இப்புத்தகம் சிறந்த ஆராய்ச்சி நூலாகும். முன், பின், ஜென்மம், முடப்பழக்கவழக்கங்கள் முதலியன ஆராயப்பட்டிருக்கின்றன. சடங்குகள், அதன் நிலவு, கடவுள் ஆராதனை விக்ரக வணக்கம் முதலியன கண்டிக்கப்பட்டிருப்பதோடு பல ஆதாரங்களினாலும், மேற்கோள்களாலும் விளக்கப்பட்டிருக்கின்றது. சித்திரப்படங்களுடன் 100 பக்கங்கள் கொண்டது.

விலை அணு 6, 7 அணு ஸ்டாம்பு அனுப்புவோருக்கு அனுப்பப்படும்.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புஸ்தகசாலை, ஈரோடு.

கடந்த 12 வருஷங்களாக இந்திய ஏழைமக்களின் கல்வி விஷயமாய் தபால் மூலமும், நேரிலும் உழைத்துவரும் ஸ்தாபனம் இதுவே!

மூந்துங்கள்! 2000 மாணவர்கள்.

தமிழ்நாட்டு பெற்றோர்களே!

மூந்துங்கள்!! 2000 மாணவர்கள்.

மெட்ரிக்குலேஷனுக்குரிய அறிவை

உங்கள் பிள்ளைகள் ஹைஸ்கூலில் படித்துப் பெற சந்தர்ப்பமில்லாவிடில், தபால்மூலம் வீட்டிலிருந்தபடியே, தொழில் செய்துகொண்டு சவகாச நேரங்களில் கற்றுக் கொள்ளலாம். கவர்ன்மண்ட் பரீக்ஷைக்கு போக இஷ்டப்படின் போகலாம். S. S. L. C. படித்து தவறியவர்கள் நமது கோர்ஸ்களை முடித்து சீனியர் பாஸ்செய்து காலேஜில் சேரலாம். தமிழ் (or) இங்கிலீஷ் பிராஸ்பக்டசுக்கு 1-அணு ஸ்டாம்பு உடன் அனுப்பவும்.

டைரக்டர்,
அன்பையன்ஸ் கேம்பிரிட்ஜ்
இன்ஸ்டிடியூட், ஆறுமுகநேரி. S. I. R.

பார்ப்பானும், படித்தவனும், பணக்காரனும் பாமரமக்களின் பரம விரோதிகளேயாவார்கள்.

(ரஷிய ஞானி—லெனின்.

# கனம் நாடார்களுக்கு எனது விண்ணப்பம்.

(கைவல்யம்)

பூர்வகாலந்தொட்டு தமிழ்நாட்டுக் குடையவர்களாய், தமிழ்நாட்டுப் பெருங்குடி மக்களாய், தனித் தமிழர்களாய் வாழ்ந்துவரும் உங்களுக்கு எனது வணக்கத்துடன் சில விஷயங்களையும் தெரிவுப்படுத்திக் கொள்ளுகிறேன்.

முதிர்ச்சியால் விளையும் நன்மை பிக்கையின்பலத்தைக்கொண்டு பெருமைபெற்ற விளங்கும் விருதுநகரில் ஆகஸ்டு 8, 9 தேதிகளில் சுயமரியாதை மாகாண மகாநாடு கூடப்போவது உங்களுக்குத் தெரியும். அம்மகாநாட்டின் நிர்வாகஸ்தர்களும், உபசரணைத் தலைவர்களும்நீங்களே. உங்கள் உபசரிப்பையும், பழந்தமிழர்களின் கம்பீரமான உங்கள் முகதேஜோற்றத்தையும், எல்லாவற்றிலும் தோன்றும் லோகப்பொதுவிதியின் அழகு உங்கள் மதிக்குள்ளே பாய்ந்து விட்ட தென்பதையும், அது உங்கள் மனதிலும் புகுந்து தலை, நாடிகளில் சென்று கலைகள், சாஸ்திரியங்கள் இவைகளுக்குப் புதியதழைகளும், மலர்களும் காட்டுவதையும், இருதய ஒற்றுமை என்ற சூரியனுடைய ஒளியையும், உயிருள்ள வளர்சிலையும், உண்மையையும், அதனால் உண்டாகும் அழகையும் மேலாக எண்ணி தேவலம் காரியலாபத்தைத் தாழ்வாக நினைக்கும் உங்கள் தன்மைகளையும் நாங்களெல்லோரும் பார்த்து திருப்தியடைவதுமல்லாமல் பாகத்தில், பக்குவத்தில், உருசியில், பரிமாறுவதில் பழக்கப்பட்ட உங்கள் சமபந்தக்காரர்களாலேயார் செய்யப்பட்ட சாப்பாட்டை உண்டு சந்தோஷமும் அடைவோம்.

பழையதைப் புதியதாகவும் பல மற்றதைப் பலமுடையதாகவும் அவமானத்தை மாடசியுடைய வெற்றியாகவும் மாற்றுவதற்கு ஆத்மசக்தியோ அதை அளிப்பதாகச் சொல்லும் தேவசக்தியிலோ உண்மையில் பயபக்தியுடையவர்களைச் சுயமரியாதை இயக்கம் பலசாலியாக்கவல்லதல்ல வென்பதும், தம்மிடம் மற்றவர்களைத் தாழ்மையாக வைத்துக்கொள்ள வேறு தைரியாலே மதப்பிரசாரம்செய்து இடதுகையாலே கொள்ளையடித்துக் கொடுமை செய்வது கூடாதென்று சொல்லாலே வந்திருக்கிற தென்பதையும் நீங்கள் தெரிந்தது போலவே மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துவீர்கள்.

இந்த சுயமரியாதை இயக்கம் சரித்திரத்திலே ஒரு விஞ்ஞதமல்ல, காலத்தால் ஏற்பட்ட பிள்ளை விளையாட்டுமல்ல. ஆழ்ந்த இருளினின்றும் வீசுண்டு மறுகூறணம் சூனியக்கடலில் மோதப்படும் ஓர் பொய்ப் பொருளன்று. மழைகாலத்தில் உண்டாகும் சுயிழியைப்போல் கோளத்திலும் வர்ணத்திலும் குறைவில்லை. ஆனால் உள்ளே ஆலயதமில்லாதது என்றுசிலர் நினைப்பது போல குறுகிய எண்ணமுடையதுமல்ல. உடன்வாழும் மனிதருக்கு நாம் எண்ணற்ற கடமைகளை செலுத்தவேண்டுமென்ற கொள்கையை ஆதாரமாகக்கொண்டு வருணாச்சிரமதருமத்தின் கொடுமையால் முதுகெலும்பில்லாமல் இடக்கும் கோடிக் கீங்களும் ஒன்றல்லவோ? மனிதர் கணக்கான ஜனங்களின் துன்பங்களுக்கு உள்ளது போலவே இலட்சகணக்கான ஜீவராசிகளைக் குறித்த சச்சரவுகளையெல்லாம் போக்கி சமத்துவத்தை நிலைநாட்டவந்த சன்மார்க்கமேயாகும்.

தெய்வத்தினிடம் யாருக்கும் பகைவில்லை. தெய்வமும் நம்மைத்தள்ளாது. தெய்வத்திற்கு எல்லோரும் பொது. உலகம் அருருடையதானால் உலகப்பொது விதியும் அருருடையதேயாகும். ஆனதால் கடவுளிடம் நட்புக்கொள்ள வேண்டியவன் உலகப்பொது விதியை உல்லங்கணம் செய்யலாமோ? கடவுளைப்பற்றிய கவலை உலகப்பொது விதிக்குத் தடையாக விருந்தால் கடவுள் நட்பு எப்படி உண்டாகும்? உலகப்பொது விதியை அங்கீகரிக்காத கடவுள் கவலையை விட்டு உண்மைக்கும் நியாயத்திற்கும் சமத்துவத்திற்கும் ஒத்திருக்கும் உலகப் பொது விதியை உல்லங்கனம் செய்யாமல் அங்கீகரித்தால் கடவுளுக்கும் நமக்கும் கடவுள் சம்பந்தமுண்டாய் விடுமென்று சுயமரியாதைச் சங்கம் சொல்லுவதில் குற்றமென்ன? நமக்கென்று ஒரு தனிக்கடவுளிருக்கிறதா? உலகமெல்லாம் ஒத்துக்கொளும் பொதுக்கடவுள் எனது கடவுளாக மாட்டாரா? சிவபெருமான் நமது கடவுள். எல்லாருக்கும் பொதுவில் கடனமிடுகின்ற சிவமே என்றல்லவோ நாம் நமது சிவத்தைக் கூப்பிடுவது. அப்படியிருக்க அந்த சிவத்திற்குத் தள்ளப்பட்டவர்களும் ஒதுக்கப்பட்டவர்களுமுண்டோ? இல்லை, என்று சொல்லுகிறவர்கள் கடவுள் நிந்தையர்களா? உலகப்பொதுக் கடவுளை நினைக்காமல் உலகப்பொது விதியை அங்கீகரிக்காமல் இருப்பவர்கள் கடவுள் நிந்தையர்களா? என்பவைகளையெல்லாம் விபரப்படுத்தி மகாநாட்டில் சொல்லக்கூடியவர்கள் அநேகர் உங்களில் இருக்கிறார்கள் என்பதை உங்கள் நாடார்குலமித்திரனும் அதில் காணும் விசாரங்களுமே தெரியப்படுத்துகின்றன.

உங்களில் சிலர் சுயமரியாதைச்சங்கத்தை கோபிக்கிறார்கள். அது என்? அச்சங்கத்தால் அவர்களுக்கு வரும் கஷ்டமென்ன? வந்த கஷ்டமென்ன? எதனால் குற்றம் சொல்லுகிறார்கள்? எதற்காகப் பகைக்கிறார்கள்? முன்காலத்தில் உற்பனையால் உயர்ந்தமனதைக்கெடுத்துக் கொண்டதினால் நமது விரோதிகள் உலகத்தில் நம்மைத்தாழ்வாக நினைத்தார்கள் என்பது பொய்யா? தமிழ்நாட்டில் ஆரிய காரீகத்தை அங்கீகரிக்காத சமூகத்தில் இவர்கள்யார்? தென் தேசக்காங்கிரஸ் தலைவர்களின் சித்தப்பன் பெரியப்பன் பிள்ளைகள்தானே? பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுத்ததற்கு உங்கள் மண்டையை உடைத்தது யார்? தென்தேசத்துக் காங்கிரஸ் தலைவர்களின் மாமன் மைத்துனன் அல்லவா? இதை எந்தக்காங்கிரஸ் மேடையில் காங்கிரஸ் தலைவர்கள் எடுத்துப்பேசினார்கள்? எந்தப்பாப்பாரத்தேசியப்பத்திரிகை விபரமாகக் கண்டித்தது? எழுதாததற்கும்கண்டிக்காததற்கும் காரணமென்ன? ஆலோசித்துப்பார்த்தால் சுயமரியாதை இயக்கம் குற்றமுடையதாகுமா? மாமூல்கிழவியின் தூக்கத்திலிருக்கும் அவர்கள் கையில் நாலு காசைமுடிந்து போய் அந்தக்கிழவியின் மடியிலிருந்த படியே நமக்குச்சுயராஜ்யச்செங்கோலும் வந்துவிட்டால் மாமூல் கிழவியின் மணியம் வந்துவிடுமே என்றுதான் சுயமரியாதை இயக்கம் படைப்படுகிறது.

சாம்ராஜ்யம் சபைகளில் சமத்துவம் வேண்டுமென்கிறோம் வீதியில் ஊர்கோலம் போனாலும், பொதுக்கிணற்றைத்தொட்டாலும் மண்டையையுடைப்போ மென்கிறோம். இதற்குப்பெயர் சனாதனதருமமென்று சொல்லுகிறோம். ஒரு கண்ணால் உறங்கி மற்றொரு கண்ணால் விழித்திருக்குப்படியான ஆசத்திய உத்தரவு போடுவது போலவல்லவோ இருக்கிறது. இதை சுயமரியாதை இயக்கம் எப்படி அங்கீகரிக்கமுடியும்? இதைச் சங்கம் ஒத்துக்கொள்ளாவிட்டால் உங்களில் சிலருக்குவந்த கஷ்டமென்ன?

ராஜாங்கத்தாரிடம் பெரிய விஷயங்கள் கேட்கிறோம். ஜனங்களும் பெரியவரங்கள் தர வேண்டாமோ? வீதியில் வந்தால் அடித்து அடிப்பதும் பொதுக்கிணற்றைத்தொட்டால் மண்டையையுடைப்பதுந்தான் தேசிபமா? ஜனங்களுக்குக் கொடுக்கும் பெரியவரங்களும் அதுதானே? எல்லாவரங்களும் காங்கிரசிலிருக்கிற தென்னிராசன். எதுதான் எட்டிலில்லை. பொதுக்கிணற்றை, யாரும் உபயோகிக்கலாமென்றுதான் லோக்கல்பண்டு எட்டிலும் ராஜாங்க எடுகளிலுமிருக்கிறது. தண்ணீர் கொடுக்காதவன் தடுத்தவன் இவர்கள்ராசத்திற்குப்போவார்களென்ற சமய எடுகளிலிருப்பதுமல்லாமல் கொடுத்தவனுக்கு சொர்க்கத்தில் அருவிகளாக உபயோகப்படுமென்றும் சமய எடுகள் சொல்லுகின்றன. கிணற்றைத்தொட்டால் மண்டையை உடை என்ற எந்த எட்டிலுமில்லை. உயர்ந்தஜாதி பெண்ணும் மமதையின் பெருமையான எண்ணத்தினால்தானே தடியடி இருக்கிறது. இந்த நியாய விரோதமான அக்கிரமத்தை சட்டமென்ற சல்லடையால் வடிகட்டி எல்லாவிதமான கோபம், பகைமை, பகுபாதம், அநியாயமை இவைகளில்லாதபடி செய்தல் மாபு. இல்லாவிட்டால் சுயராஜிய நியாயாதிபதியின்கோலுக்கும்

தொடர்ச்சி 22ம் பக்கம் பார்க்க.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# ஆசியாக்கண்டத்தாரது சோம்பற்றனம்.

(சாமவேதனுர்.)

நமது நாட்டு "முற்றுந்துறந்த முனிவர்" ஒருவர் அமெரிக்காவுக்குப் போனுர். சென்ற நூற்றாண்டின் இறுதியில் அங்காடி சென்று 'இந்து' சமயத்தின் மேன்மையை மேனாட்டுக்கு எடுத்துரைத்துப் பெரும்புகழடைந்த சுவாமி விவேகானந்தரைப்போலத்தானும் சிறப்படைய அவர் எண்ணினுரோ, என்னவோ சொல்ல முடியாது. அவர் ஒரு நாட்காலையில் அட்சன் நதிக்கரையோரத்தில் படுத்து 'யோகம்' செய்து கொண்டிருந்தார். அதைக்காலையிலெழுந்து வேலை செய்து திரும்பிய ஒரு அமெரிக்கத் தொழிலாளிகண்டான். உடனே ஆத்திரங்கொண்டான். அவன் அம் 'முனிவரை' அணுகித்தோளில் தட்டி 'சோம்பனே எழும்பி உன் வேலையைச் செய. கதிரோன் உதித்து வெயில் எரிக்கின்றதே! உனக்கு இன்னும் சோம்பல் ஒழியவில்லையோ?' என்று கடுகடுத்து மொழிந்தான்.

நமது "முனிவர்" சிறிச் சினந்தெழும்பினர். கொட்டாவி விட்டார். தொழிலாளியை விரைக்க முறைத்துப் பார்த்தார். கொக்கை யெரித்தக் கொங்கணவனுக்கும் வெகுண்ட பொழுதெல்லாம் தமக்கெதிர்ப் பட்டோரைச் சபிக்கும் துருவாசனுக்கு இருந்த ஆற்றல் தமக்கில்லையே யென்றேங்கினர். பிறகு சமாளித்து எழுந்து உட்கார்ந்து கொண்டு "ஓய்! மனிதனே! யாம் எம் மனத்தை யடக்கி யோகம் புரிந்து கொண்டிருக்கையில் உன் அறிவீனத்தின் திமிரால் எம்மை எழுப்பி உல்லங்கனம் செய்து விட்டாய். ஆயினும், சிறியோனும் அற்பனுமாகிய உன்னை நாம் கண்டியாது பொருத்து ஆசீர்வதித்தனுப்ப வேண்டியதே தருமமாகும். எளிய வாழ்க்கையும், உயரியநோக்கமுங்கொண்ட எம்மனோரது சிறப்பு நிலைமையை உலோகாயுத்தத்தில் உழலும் நீ அறியாய். பேதாய்! உன்வழியே செல். என்னையேன் அலட்சிக்கின்றாய்?" என்று தத்துவம ததும்ப மொழிந்தார்.

அதைக் கேட்டதும் அமரிக்கன் பெருஞ்சத்தமிட்டு; கைத்துக் கொண்டே "சோம்பனே உனது சோம்பலை நீக்கி வெய்யில் காய்ந்து கொண்டிருந்த நீ "யோகம்" புரிகின்றேனென்கின்றாய். கல்வி யறிவும், பகுத்தறிவும் அற்ற இந்தியாவில் உனது "யோகம்" விலைப்படும். ஆனால் இந்நாட்டில் உன்னை யாரும் கவனியார். நீ தயவு செய்து எழுந்து ஏதாவதொரு வேலை தேடிச்செய்ய முற்படு. ஆசியாக் கண்டத்தாரது சோம்பற்றனத்தை தயவு செய்து இந்நாட்டில் புகுத்திவிடாதே. இதுவே என் வேண்டுகோள்" என்று கூறிவிட்டுத் தன் வழியே சென்றான். அதன் பின்னர் நமது "முனிவர்" எக்கதி யடைந்தாரோ தெரியாது. அதைப்பற்றி நாம் கவலைப்படத் தேவையுமில்லை. கவனிக்க வேண்டியது மதுவல்ல.

மேற்குறிப்பிட்ட செய்தி சில ஆண்டுகட்கு முன் பத்திரிகைகளில் வெளியாயிற்று. அக்காலத்தில் நம் நாட்டில் "தேச பக்தர்"கள் இல்லாதிருந்தமையால் அதைப்பற்றி எவருங்கவனித்தாரில்லர். இக்காலத்தில் அம்மாதிரிச் சம்பவமொன்று நிகழ்ந்ததாயின் நமது 'தேசபக்தர்'கள் அமெரிக்காவுக்கும் அட்சன் நதிக்கும் எதிராய் 'சத்தியாக்கிரகம்' தொடங்கி விடுவர்! நிற்க, குறித்த சம்பவத்திலிருந்து நமக்கு விளங்குவதென்ன? ஆசியாக் கண்டத்தாராகிய நாம் சோம் பேரிகளென்பது மிக, மிகத் தெளிவாய்த்தெரிகின்றதன்றோ? அதிலும் இந்தியராகிய நாம் தடிச்சோம்பேரிகள் என்பது மறுக்க முடியாத உண்மை. இச் சோம்பலுக்கு மூலகாரணம் யாது? இம்மியேனும் ஆசங்கையின்றி நமது சமயமே நமது சோம்பலுக்குக் காரணம் என்றும் எட்டுணையும் தடையின்றிக் கூறலாகும்.

ஆசியாக் கண்டத்துத் தேசங்களில் முக்கியமானவை மூன்றே யாகும். அவை சீனு; ஜப்பான், இந்தியா. அவற்றுடன் பௌத்த சமயத்தை அணுசரித்து வந்த ஜப்பான் அச்சமயத்தின் மூலாதாரக் கொள்கைக் கெதிராய் புலால் உணவை யருந்தி, போர்த் தொழிலை மேற்கொண்டு பல நூற்றாண்டுகளாய்த் தன்னைக் கீழ்ப்படுத்தி வைத்திருந்த மதப்பிரமையை ஒழித்துவிட்டபடியால் முன்னேறி விட்டது. அதேதாற்போல சீனுவும் சமயப் பிடிப்பினின்றும் தன்னை விடுவித்துக்கொண்டு வருகிறது. என்றும் அத்தேசம் மதக்கட்டிலிருந்து விடுபடுகிறதோ அன்றே அதன் விடுதலை முற்றுபெறும்.

ஆனால் பாழும் இந்தியாவில் சமயக்கட்டுப் பாட்டிற்கு அளவு கடந்த மதிப்பு இன்னும் அளிக்கப்பட்டு வருகிறது. உடலை வளைத்து உழைப்பதற்குமாறாக சமயம் வீண் தத்துவம் பேசுகின்றது. சோம்பலை வளர்ப்பதற்குச் சாம்பலைப் போற்றும் சமயம் உதவி புரிகின்றது. கீழ் நாட்டின் நாகரீகத்தைக் கறைப்படுத்தியது சமயங்களே. ஆசியாக் கண்டத்தார் ஐரோப்பாக் கண்டத்தாருக்கு அடிமையாயிருப்பதற்கு மூலகாரணம் நமது போலிச் சமய உணர்ச்சியேயாம்.

நம்மனோர் கோழைகளாய் விட்டதற்கும் மதமே காரணம்.

'யோகம்,' 'நிட்டை,' 'தவம்,' 'தபசு' முதலிய போலி அப்பியாசங்களால் சோம்பல் வளர்க்கப்பட்டு வருகின்றது. "சும்மா விருப்பதுவே சுகம்" என்ற மூட்டாள் தனமான போலித் தத்துவ உணர்ச்சி இந்தியாவிலிருந்து வெறுட்டி யடிக்கப்படல் வேண்டும். சோம்பற்றனத்தை சமயம் "உயர்ந்த நிலை" யெனப்போற்றுவதை உழைப்பாளிகள் என்னி நகை யாடிக் கைகொட்டி இழிவுப்படுத்தல் வேண்டும். "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற பாட்டைப்பாடிக் கொண்டு உடலை வளையாமல், உழையாமல் உலகுக்குப் பாரமாயிருக்கும் போலிச் சமயக் குரவர்களை அடித்து உழைக்கும்படி வற்புறுத்த வேண்டும்.

"சமயம் அபினி போன்றது" என்றசொல் எவ்வளவு உண்மையானது! கட்குடியனும், சமய வெறியனும் ஒன்றே, ஒரே நிலையினரே. வேலை செய்யும் நேரத்தில் அருத்தமற்ற பாடல்களைப் பாடிக்கொண்டு "கடவுளை" அகக்கண் கொண்டு பார்க்க எண்ணும் சோம்பலான "சாமி"களைத் தடி கொண்டுதாக்கி, இடுப்பொடிய அடித்துத் துரத்த வேண்டும். பாடுபட்டவரே பலன் அனுபவிக்க அருகதை யுடையவர். வாய் பொத்தி, கை கட்டி, கால் கூட்டி, மூக்கைப் பிடித்துக் கொண்டு நின்று "கடவுள் உணர்ச்சியில் "ஆனந்தப்பரவசம்" அடைய விரும்பும் மனிதன் இவ்வுலகிலிருக்கத்தகுதியற்றவன். அவன் உடனே மறுவுலகம் போய் விடல் நன்று. ஏனெனில் அவன் சோம்பலுய்க்கெட்டுப்போவ தன்றிப்பிறரையும் தீயவழிக்குட் படுத்திவிடுகிறான்.

திருவாளர் திரு வி. கலியாணசுந்தரன் எழுதிய 'இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்' என்ற நூலை அண்மையில் வாசித்தேன். அதனை வாசித்தபின் அவருக்கு 'அழுகனிச்சித்தர்' என்ற சிறப்புப்பெயரைச் சூட்ட முடிவு கட்டினேன். அவர் அந்நூலில் கண்ணீர்விட்டுக்கதறியழுதிருக்கிறார். பிறரையும் அழச்சொல்லுகிறார். 'மனங்குழைந்து அழுங்கள் கண்ணீர் விடுங்கள்' என்பதே அவர்தமிழ் காட்டு வாலிபருக்குக்கூறும் 'இதோபதேசம்'. இத்தகையநூல்கள் நம்மைச்சோம்பலில் உரமுறையச்செய்யுந்தன்மையன. எற்கனவே யுள்ள ஆயிரக்கணக்கான 'சமயநூல்'களால் இந்தியரே சோம்பித்திரியும் பேதையராகிவிட்டனர். இன்னும் அதே தொனியில் அழுகுரலில் நூல்கள் எழுதப்படுமாயின் நாம் அடிமைகளாய் அழியவேண்டியதே.

ஐரோப்பியர் 'உனது ஒரு கன்னத்தில் அடிப்பவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு' என்றதமது 'கடவுளி'ன் 'இதோபதேச'த்தைமாற்றி 'மறு கன்னத்தில் திருப்பிக்கொடு' என்று எழுதி, அதையே அநுசரித்து வந்தமையால் அவர்கள் சிறப்புடன் வாழ்வதன்றி உலகையே கட்டியாள்கின்றார்கள். அவ்வாறே ஜப்பானியரும் பௌத்த சமயத்தின் தண்ணளி (ஜீவகாருண்யம்) கொல்லாமை, தன்புறத்தாமை முதலிய கொள்கைகளை ஏட்டில்கட்டி வைத்துவிட்டு, தோள் தட்டி, தமது வலிமையைப் பிரயோகித்து வந்தமையால் வெள்ளையரை யுந்தோற்கடித்து வல்லரசுக்காரராக உயர்ந்தனர். ஆனால் 'இந்துக்களோ' வெனில் தமது 'கடவுள்' களது செயல்களையே மறந்தவராய் 'இருப்பது பொய் போவது மெய்' என்று வீண் வேதாந்தம் பேசுகின்றனர். இராமன், கந்தன், விஷ்ணு, சிவன், கிருஷ்ணன் முதலாய 'கடவுள்'கள்போர் புரிந்து தமது புயவலிமையைக்காட்டினதாய்ப் புராணங்கள் எழுதிவைத்துக்கொண்டு நாம பேடியாய்ப் பேதைகளாய்க் காலங்கழிக்கின்றோம்.

மேலும் சமயத்திற்கு அடிமைப்பட்டிருந்த காலத்தில் மிகத்தாழ்ந்த நிலைமையிலேதானிருந்தது. மேனாட்டில் சமயம் மக்களின் இரத்தத்தையே உறிஞ்சிக்கொண்டிருந்தது. சமயக்குரவர் திருட்டுக் குறவராய் மக்கள் உழைப்பில் உண்டுடுத்து உறங்கி உலகை அநுபவித்து வந்தனர். தடிச் சோம்பரான அவர்கள் தம்மை வணங்கினோரையும் சோம்பராக்கினர். பிறகு மேனாட்டு மாந்தர் கண்விழித்து சமயத்தைக்கைவிட்டு உழைப்பில் ஊக்கஞ் செலுத்தினர். அதன் பயனுய் உலகம் அவர்கள் வசமாயிற்று.

நமது இளைஞர்கள் இம்முக்கிய பிரச்சினையில் ஊக்கங்கொள்ளுதல் வேண்டும். சமயத்திற்கு முக்கியமும் முதன்மையும் நம்மனோர் கொடுத்து வந்தமையால் நமது நாடு பாழடைந்தது. நம்மைச்செயலற்ற சோம்பராக்கிய சமயத்தை நாமேன் கவனிக்கவேண்டும்? நமது முன்னோரும், நாமும் பல நூற்றாண்டுகளாய்ச் சமயத்திற்கும் 'கடவுளு'க்கும் தொண்டு செய்தும் நாமடைந்தபலன் யாதோ? நன்றிகெட்ட சமயமும் 'கடவுளும்' உண்மையில் நம்மைக்கிஞ்சித்தும் கவனிக்கவில்லை. நம்மைக்கவனியாத ஒரு மனிதனை நாம் கவனிக்கின்றோமா? இல்லையே! அங்ஙனமிருக்க ஏனை நாம் மூட்டான்தனமாக நம்மைக்கவனியாத சமயத்தையும் 'கடவுளை'யும் கட்டிக்கொண்டழுது கொண்டு இடர்ப்படவேண்டும். மேனாட்டினர் மட்டுமன்றி சமீபத்தில் முற்போக்கடைந்த ஜப்பானியர், சீனரான கீழ்நாட்டினரும் நம்மனோரது சோம்பற்தனம், கோழைத்தனம், வீரமின்மையைக்கண்டு கைதட்டிச் சிரிக்கின்றனர். நாம் வெட்கித்தலைகவிழுமாறு நமது சமயமும், 'கடவுளும்' நம்மைத் தாழ்த்திவிட்டனவே!!

இந்திய இளைஞரே! கீழ் நாட்டைச் சேர்ந்த ஜப்பானியரும், சீனரும் சம

தொடர்ச்சி 22ம் பக்கம் பார்க்க]

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# கோவிலையும், சாமிகளையும், பூஜை திருவிழாக்களையும் ஏன் சுயமரியாதையுள்ளவர்கள் குறை சொல்லுகிறார்கள்?

(சி. சு. சுப்பையா.)

சகல அண்டங்களையும், இவை களிலுள்ள சராசரங்களையும் உண்டு பண்ணி எல்லாவற்றையும் பாது காத்து வருவதற்கு கர்த்தா ஒருவர் இருக்க வேண்டும் என்றும். இப்படிக் கானவர் எங்கும் எப்பொழுதும் நிறைந்திருக்கக்கூடும் என்றும், இப் படிக்காதவர்தான் கடவுள் என்றும், இவரை சகலரும் தங்களுடைய மன வாக்குக்காயங்களால் பகதி செய்தும் மனிதர்களில் எளியவர்களுக்கும், நோயாளிகளுக்கும், கஷ்டப்பட்டவர் களுக்கும் கூடுமான ஒத்தாசையும், உபகாரங்களுஞ் செய்யவேண்டுமென் றும் சொல்லப்பட்டிருக்கிறது.

கடவுளும், கடவுட பக்தியும் மனி தர்கள் மனிதர்களுக்குச செய்யவேண் டியகைகளும் இப்படியாயிருக்கை யில் ஜனங்களுக்குள்ள பொருள் களில் பெரும பாகத்தைக்கொண்டு எல்லாஊர்களிலும் முக்கியமானவீதி களிலும் கோவில்கள் என்று கட்டி யும் சுவாமிகள் என்று உண்டு பண் ணியும், இவைகளுடைய போகபோக் கியதிற்காக பெண்சாதிகளென்றும், வைப்பாட்டிகளென்றும், ஆடை ஆப ரணங்களென்றும், கட்டில் மெதை தலையணைகளென்றும், வாகனங்க ளென்றும், கலியாணங்களென்றும், தேர், திருவிழாக்களென்றும் சதிர் ஆட்டங்கள் என்றும், கைங்கரியங் களென்றும், அபிஷேகங்களென்றும், காணிக்கைகளென்றும், வேதபாட சாலைகளென்றும் இன்னும் அனேக வகைகளாகச் செய்யப்பட்டு வருகிற தோடு இவைகளில் ஒரு சாதியார் மட்டும் பாத்தியஸ்தர்களாக இருந்து சகலத்தையும் அடைந்து வரப்படு கிறது.

இதனாலேயேதான் நாட்டில் வைத் தியசாலைகளும், கல்விச்சாலைகளும், தொழிற்சாலைகளும் அதிகமாக ஏற் படாமல் சனங்கள் அதிகமாய் நோயு ற்றும், அனேகர் வறுமையை அடை ந்தும், அன்னியநாடுகளுக்குப் போய் மிருகங்களுக்கு கேவலமாய் நடத் தவும் படுகிறார்கள்.

முன்னாளில் சனங்கள் விவசாய த்தை நல்ல முய்ச்செய்துதங்களுக்குரிய வரும்படிக்கேற்பகஞ்சியாக வைத்துக் குடித்து வந்திருப்பதோடு கட்டியிருக் கும் வேஷ்டியைத்தவிர வேறொன்று மண்ணானிடம் போட்டிருக்கக்கூடும். மண்ணானிடமிருந்து வந்தவுடன் அதைக்கட்டிக்கொண்டு முன் கட்டி யிருந்ததை மண்ணானிடங்கொடுத் தும் வேறு செலவுகளும், ஆடம்பரங் களும் இல்லாமல் மனத்திருப்தியாய் வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.

இப்பொழுது மேல் நாட்டு வைப வத்தால் சோக்குக்குடுமிகள், சோப்பு கள், வாசனை யெண்ணைகள், வாச னைப்பௌடர்கள், பூட்சுகள், காலுக்கு ளோஸ்கள், கால் சட்டைகள் பெல்ட் கள், பனியன்கள், கழுசுகோட்டு முத லான சட்டைகள், பட்டுத்தினுசுகள் நெக்டைகள், கைக்குளோஸ்கள், கை க்குட்டைகள், தலைப்பாக்கள், சவரத் தினாலைகள், கட்டில்கள், சோபாக் கள், பெஞ்சுகள், நாற்காலிகள் டீரோக்கள், படங்கள், கண்ணாடிகள், கடிகாரங்கள், சோடா, ஆரஞ்சு ஜல், காப்பி, டீ, கோக்கோ, முத லான பானங்கள் பலவிதமான பகூ ணங்கள், சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், மோட்டார்கள், டிராம், ரயில், கப்பல், ஆகாயக்கப்பல், தந்தி, டெலிபோன், கம்பியில்லாதகந்தி, மின்சாரவிளக்கு, மின்சாரவிசிறி, மின்சாரஎணி, பீடி சிகரட்டுகள், பந்தாட்டங்கள், சமாச்சாரப்பேப்பர் கள், மெத்தை, தலையணை, பெட்சீட், முதலானதுகள், போட்டோக்கள், திராமபோன், மூக்குக்கண்ணாடிகள், ஆகாய லாணி சினிமா, சர்க்கஸ், டிராமா இன்னும் மற்ற வைகளால் செலவுகள் அதிகப்பட்டும், இத்தி யாதி வைபவத்தாலும் விவசாயத்தை யும், மற்றத் தொழில்களையும் நன் றாய்க் கவனியாமல் விடப்பட்டும் ஜன ங்கள் பெரும்பாலும் வறுமையையு, கஷ்டங்களையும் அடையக்கூடியதா யிருக்கிறது.

ஜனங்கள் முன்னுளில் அனுபவித் தவாறிருப்படியே யில்லாமல் காலத் திற்கேற்ற நூதனங்களை யெல்லாம கைப்பற்றி அனுபவிக்கிறார்களே யொ ழிய காலத்திற்கேற்ற தொழில்களில் பிரவேசிக்கக்கூடியதாயில்லை.

முன்னுளில் இருந்ததற்கு விரோ தமாக உண்டாகியிருக்கும் வகைகளை யெல்லாம் வழக்கத்திற்கு விரோதம் என்று பகிஷ்காரஞ் செய்யாமல் சக லத்தையும் எற்றுகொண்டு கோவி ல்கள், சுவாமிகள், பூஜை தேர்த்திரு விழாக்கள் முதலான காரியங்களில் மட்டும் வழக்கத்திற்கு விரோதஞ் செய்யக்கூடாதென்று சொல்லுகிறார் கள்.

செலவுகளை அதிகப்படுத்திக்கொ ண்ட நிலைமையில் வரும்படிகளையும் அதிகப்படுத்துவதற்கு மார்க்கங்களை த்தேட வேண்டியது நியாயமான கா ரியம். இப்படிக்கில்லாவிட்டால் ப ழையபடி வருமானத்திற்குத் தகுந்த படி கஞ்சியாகவும் வைத்துக் குடித் துக்கொண்டு கட்டிய வேஷ்டியும், மண்ணானிடங் கெடுத்த வேஷ்டியு மொன்றுமாகத்தானிருக்கவேண்டும்.

காலதிற்கேற்ற செலவுகள் அதி கப்பட்டு ஜனங்கள் கஷ்டப்படும் நிலை மையில் ஜனங்களுடைய பெரும்பா ன்மையான பணங்களைக் கொண்டு கோவில்களைக் கட்டியும், சுவாமிகள் உண்டுபண்ணியும் இவைகளு க்கு ஆதாரமாக பூசை, நைவேத்தி யங்கள் செய்தும், போக போக்கியங் களுக்காக ஆடை, ஆபரணங்களும் வாகனங்களும், கலியாணங்களும், தேர்த்திருவிழாக்களும். வேதபாடசா லைகளு முண்டுபண்ணிவரப்படுவது ஏதற்கு?

எங்கும் நிறைந்து சகலத்திற்கும் கர்த்தாவாக இருக்கும் கடவுளுக்கு கோவில்கள் என்று கட்டுவதும், உரு வங்கள் என்று செய்வதும் பூசை, நைவேத்தியங்கள், திருக்கலியாணங் கள், தேர்த்திருவிழாக்கள் என்று செய்யவேண்டியதுமில்லை யென்றும், கோவில்கள் என்றும், சுவாமிகள் என் றும், திருக்கலியாணங்கள் என்றும், தேர்த்திருவிழாக்கள் என்றும், வேத பாடசாலைகள் என்றும் கடைபெறக் கூடியவைகள் சில சுயநலக்காரர்களு டைய ஏமாற்றமே யொழிய ஜனங் களுடைய மேன்மைக்கான காரியமா யில்லை யென்றுதான் சுயமரியாதை யுள்ளவர்கள் சொல்லுகிறார்கள்.

ஜனங்களில் அனேகருக்கு குடியி ருப்பதற்கு வீடுகளும், புசிப்பதற்கு ஆகாரங்களும், உடுப்பதற்கு ஆடை களும், கலியாணஞ் செய்து கொள்ளு வதற்கு பணங்களும் இல்லாதிருக் கும் நிலைமையில் சுவாமிகளின் பெய ரைவைத்துச் செலவு செய்கிற காரி யமானது கெட்டுப்போவதற்கு பத்த யம் போடுகிற மாதிரியாகத்தானிருக் கிறது.

சர்வ வல்லமையுள்ள கடவுளுக்கு நாம் தான ஆடை, ஆபரணங்களும், ஆகாரங்களுங்கொடுத்து கலியாண ங்களுஞ் செய்துவைக்க வேண்டும்? இத்தியாதி கைங்கரியங்களால் கட வுள் திருப்தி அடைந்த மாதிரியாக வாவது இதன்மூலம் யாருக்கும் பிர திபிரயோசனத்தைக் கொடுத்தமா திரியாகவாவது தெரியவில்லையே!

சில சுயநலக்காரர்கள் தங்களு டைய பிழைப்புக்காகவே குரங்காட்டி கள் குரங்குகளை ஆட்டுவதுபோல் ஜனங்களை ஆட்டி எமாற்றி இழுத்து வைத்து தாங்கள் சுகமாகவும் மேன் மையாகவும் வாழ்த்துவரக் கூடியநில் யாராவது குறை சொல்லும்போது "சுவாமிகளையும், கோவில்களையும் குறை சொல்லுகிறார்கள். இனியெ ன்ன ஆகுமோ"வென்று சொல்லி இவர்களுடைய ஆட்டங்களுக் கிசைந் தவர்களைக் கிளப்பி விடுகிறார்கள். இப்படிச் சொல்லிக் கிளப்பிவிடக் கூடியதுதான் அவர்களுடைய பிழை ப்புக்கு மூலதனமாக இருந்து கொ ண்டிருக்கிறது. கோவில்கள் யாரால் கட்டப்பட்டதென்றும், இவைகளுக் குயாரால் மானியங்கள் விடப்பட்ட தென்றும், காணிக்கைகளை என்ன நோக்கத்தோடு உண்டியல்களில் போ டுகிறார்கள் என்றும், கோவில்களில் என்னென்ன அக்கிரமங்கள் நடக்கிற தென்பதையும், உண்டியல்களில் போ ட்ட பணங்கள் அப்படியே சுவாமி களுடைய உபயோகத்திற்குப் போகி றதா? அல்லது அங்குள்ளவர்கள் எடு த்து ஒருவரோ அல்லதுபலரோபாகஞ் செய்து அவரவர்கள் உபயோகத்திற்கு க்கொண்டுபோய்விடுகிறார்களாவென் பதையும் கவனித்துப் பார்ப்பார்களா னால் அவர்களுடைய இரத்தம் கொதி ப்படையாமலிருக்க முடியாது.

மதுரையில் பாண்டிய மன்னர்க ளாலும், நாய்க்கர் மன்னர்களாலும் கோவில் மண்டபம் முதலானவைகள் கட்டியும், ஏராளமான சொத்துக் களை விடப்பட்டும் இருப்பதில் பெரு ம்பாலும் ஒரு வகுப்பாருடைய ஆதிக் கத்திற்கும், அனுபவித்தலுக்குமாகவே யிருந்து வருகிறது சில உற்சவங் களில் கோவில் செலவில் ஒரு வகுப்பா ருக்கு மட்டும் மேலான விதமாய் சா ப்பாடு செய்யப்படுகிறது. அந்த உற் சவத்திலேயே சர்பா ந்தாங்குகிறவர் களும், மேளக்காரர்களும், சண்டாப் பிடிப்பவர்களும், தோ இழுப்பவர்க ளும் இன்னும் மற்றவர்களும் ஆசார ங்களை அநேகமாய் அவர்கள் வீட்டிலி ருந்து எடுத்துத் தணிகளில் கட்டிக் கொண்டுவந்து சமயம் ஏற்பட்ட போ து அவைகளைப் புசித்துக் கொள்ளு கிறார்கள். இப்படிப் பலவிதமான வேலைகளைச் செய்யக்கூடியவர்கள் ஆகாரங்களை அவர்கள் வீடுகளிலிரு ந்து எடுத்துக் கொண்டுவந்து வைத் துப் புசிக்கவும் ஒரு ஜாதியாரில் ஊ ரில் கடைவைத்திருப்பவர்களும், வக் கீல் வேலை பார்ப்பவர்களும், இன் னும் வேடிக்கைப் பார்க்கவந்த வெளி யூர்காரர்களும் யாதொரு பிரயாசை யில்லாமல் தங்களுடைய பிரிவார்ஜி தச் சொத்துக்களை அனுபவிப்பது போல் ஓய்யாரமாகப் போய்ச் சாப்பி ட்டு வருகிறார்களே! மற்றவகுப்பார் களுக்கு பசி உண்டாக மாட்டாதா? எல்லா வகுப்பாருக்கும் சாப்பாடுபோ டுவதனால் கோவில் இடிந்து விழுந்து விடக்கூடுமா? அல்லது அங்குள்ள சாமிகள் எழுந்து எங்காவது ஓடிப் போய் விடக்கூடுமா? ஏன் இப்படிக் கான வஞ்சனைகள் கடக்கவேண்டும்? இந்தக் கோவிலில் எல்லாப் பொருள் களும் அதிகமாக இருப்பதினால்தான் இந்தக் கோவிலைப்பற்றி அநேகமாய் எப்பொழுதும்கோர்ட்டுகளில்வியகார ங்கள் இருந்து கொண்டே வரப்படுகி றது.

கோவில்கள் என்றும் சுவாமிகள் நடை பெறக்கூடிய காரியங்களில் பெரும்பாலும் தகாத காரியங்களாக வும், ஒரு வகுப்பாருடைய மேன்மைகளுக்காகவுமே நடைபெறக் கூடியதைப்பற்றி சுயமரியாதையுள்ள

(தொடர்ச்சி 20ம பாகம் பார்க்க.)

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# விவாகரத்தின் அவசியம்.

(S. V. தோந்தி)

இக்காலத்தில் நாகரீகம், நாகரீகமெனப்பேசியும், எழுதியும், அனுஷ்டித்தும்வருபவைகள் அநேகமாயினும் அவைகளிலெல்லாம் உண்மை நாகரீகம் குறைந்தும், போலி நாகரீகம் மிகுந்தும் இருப்பதாகவே கண்கூடு. ஆனால், இதுபோது மக்களுக்கு உண்மை நாகரீகம் தேவையா? போலி நாகரீகம் தேவையா? எனில் உண்மை நாகரீகமே தேவை என்பதை யாரும் மறுக்க முடியாது. அவ்வுண்மை நாகரீகத்தைக்கெல்லாம் தலைசிறந்த நாகரீகம் "விவாகரத்து" என்பதை நடுநிலைமையினின்றுராய்வோர் நன்குணர்வர். ஆம்! இன்றி, "கண்டதே காக்ஷி, கொண்டதே கோல்"எனப்பிதற்றியும், எழுதியும் வரும் அநேக ஆஸ்திக சிலர்கள், அதை எதிர்க்கவும், வசை பாடவும், கண்டனத் தீர்மானங்கள் செய்வதும், பத்திரிகையில் பத்தி, பத்தியாக மறுப்பும் எழுதுவதோடு,நம்மையும்அச்சுறுத்துவார்களென்பதை நாமறிவோம். உலகில் எந்தப் புனிதமான கொள்கை கட்டும் ஆரம்பத்தில் எதிர்ப்பும், வசை மொழியும், உண்டென்பதை வாசகர்களும் அறிவார்கள். அவ்விதமே இப்புனிதமான கொள்கையாம் "விவாகரத்திற்கும்" அவைகள் ஏற்படும் என்பதை மறைக்கவோ, அதற்குப் பயப்படவோ முயலவில்லை. எத்தவிதமான எதிர்ப்பு ஏற்பட்டாலும் உண்மையே நிண்ணமாய் வெற்றி அடையும்என்ற கொள்கையைக்கொண்டவர்கள்பயப்படமாட்டார்கள்.

"விவாகரத்தானது" நம் நாட்டிற்கு புதியதல்ல.பழைமையேயாலும் நாளடைவில் அது புதுமையாகவே பாவிக்கப்பட்டு வருகின்றது. இதுபோது அநேக சமூகங்கள் "விவாகரத்தை" அனுஷ்டிப்பதில்லை என்றும் அது நம்நாட்டில் இல்லை என்று சொல்வதற்குமில்லாது சில சமூகங்களேனும் அஃதை இன்று வரையும் அனுஷ்டித்து கொண்டுதான்வருகின்றன. அதனால் அந்த சமூகங்களடைந்த கஷ்ட நஷ்டங்களென்ன? எதுவுமில்லையே! அன்றியும், இதுவரையும் அந்தச் செயலை யாரும் கண்டித்ததுமில்லையே! அவைவெறுக்கத்தக்கச் செயலாக இருக்குமானால் உலக மக்கள் வெறுத்தே இருபபார்கள். இல்லாவிடில் 'விவாகரத்தை' அனுஷ்டிக்காதவர்கள் அதைக் கண்டித்தே இருப்பார்கள். இவை இரண்டும் இல்லாததினால் அவை ஒப்புக்கொள்ளப்பட்டன என்பது வெளிப்படை. மேலும் இதுபோது இவ்'விவாகரத்தை' அனுஷ்டிக்காதவர்களும், அனுஷ்டிப்பார்களேயானால் அவர்களது சமூகத்திற்கோ, நாட்டிற்கோ, சமயத்திற்கோ, சாஸ்திரக்கட்கோ, சாமிகட்கோ, பொதுவாக மனித தர்மத்திற்கோ எந்தவிதமான கஷ்ட நஷ்டங்களும் ஏற்படாது என்று சொல்லுவதோடு, பகுத்தறிவிற்கும், சமதர்மத்திற்கும், சுயமரியாதைக்கும் அவை சரியாக இருக்குமென்றும் சொல்லுவோம்,

ஏனெனில், நம் நாட்டில் நடை பெற்றுவரும் விவாகங்களில் பெரும்பாலும் மண மக்களின் சம்மதம் பெறுமலே நடைபெறுவதாலும், பெண்கள் ஆண்களையும், ஆண்கள் பெண்களையும் தேர்ந்தெடுக்க உரிமை இல்லாததாலும், பெற்றோர்களின் குரவுக்குப் பிடியானதும், குருட்டு நம்பிக்கையானதுமான பழக்க வழக்கமெனும் சம்பிரதாயக்கட்டினைக்கி மணம் செய்து கொள்வதும், பின் ஒருவர் கொள்கை ஒருவர்க்குப் பிடிக்காது, "புலியையும், பசுவையும்" ஓரிடத்தில் கட்டிவைத்தால் போல வாழ்க்கை நடத்தி அநேக தொல்லைகளையும் துக்கங்களையும் அநுபவித்துவாழ்நாள் முழுதும் இன்பமென்பது சிறிதுமில்லாது, துன்பத்திலாழ்த்து வருந்துவது கொஞ்ச நஞ்சமல்லவே? மணமக்களின் சம்மதம் பெற்று மண மக்களின் சமமான வயது, சமமான அழகு, சமமான அறிவு, சமமான ஒழுக்கம், சமமான கொள்கை, சமமான நாகரீகம் முதலியவற்றை கொண்டே கல்யாணம் செய்யவேண்டும். அதுவே நியாயமுமாகும். அப்படிச்செய்வதிலும் பின்னால் சிற்சில காரணங்களைக்கொண்டு "விவாகரத்து" செய்து கொள்ளவேண்டிய அவசியம் வந்தாலும் வரலாம். அதற்கே, அக்காதி வருமானால் மணமக்களின் சம்மதம் பெறுமலும் மணமக்களின் சமமான வயது, சமமான அழகு சமமான அறிவு, சமமான ஒழுக்கம், சமமான கொள்கை, சமமான நாகரீகம், முதலியவையாவும் இல்லாமல் செய்துவைக்கப்படும் விவாகங்கட்கு "விவாகரத்து" அவசியமா? அவசியமில்லையா? என்பதை வாசகர்களே முடிவுகட்ட வேண்டுமென விட்டு விடுகிறோம்.

மேலும் புருஷன் மாத்திரம் தனது பெண்சாதி இருக்கும்போதே சோரத்தனம் செய்யலாம். கேள்வி இல்லை. பெண்கள் அவ்வாறு செய்தால் உடனே கொலைபோன்ற கொடிய விஷயங்கள் நடப்பதும், புருஷன் சோரத்தனம் செய்யாத பெண்கள் மட்டும் சோரத்தனம் செய்தால் அதை கண்டு சகிக்கமுடியாது புருஷன் தற்கொலை செய்து கொள்வதும், புருஷன் பெண்சாதிமீது விருப்பமில்லாமலோ வேறு காரணத்தாலோ அநேக பெண்களை மணந்து சுகபோகமனுபவிக்கவும், பெண்கள் அதைக்கண்டு மனம் பொறுமல் துன்பமும், துக்கமும் அடைவதும், புருஷன் குடிகாரனாகவோ, சூதாட்டக்காரனாகவோ, இசில்லாத சாதாரணமானவர்களோ, சதாவும் பெண்சாதியை அடித்துத் தொந்திரவு செய்வதும், பெண்சாதி சிறமமாக இருக்கவேண்டிய ஒழுக்கு மீறி நடந்து புருஷனுக்கு சதாவும் துன்பத்தைக்கொடுத்துக் கொண்டிருப்பதும், புருஷன் கல்யாணம் செய்துவிட்டு வேறு பெண்களை கூட்டிக்கொண்டோ வேறு காரணமாகவோ வெளியேறிவிடுவதும் பெண்சாதி தானே சம்பாதித்துச் சாப்பிட வேண்டியதும், அல்லது வீட்டில் ஏதேனும் சொத்திருந்தால் அதை வைத்து சாப்பிட்டுக்கொண்டு சும்மா இருந்துவிட வேண்டியதும், காதலுணர்ச்சி ஏற்பட்டால் அதை அடக்கி ஆளவேண்டியதும் அதின்றி தன் காதலுணர்ச்சியை வேறு புருஷனுடன் தீர்த்துக்கொண்டால் அதனால் ஏற்படும் [ஒரு உற்பத்தி யாகிவிட்டால், கருவை அழித்துவிடவேண்டியதும் இல்லாவிடில் சாந்திப்பிரஸ்டம், சமயப்பிரஸ்டம்செய்து ஊரிலும் இல்லாதபடி செய்து விடுவதுமான கருவை அளித்துவிடில் ஒன்றுமில்லை] கஷ்டங்கள் சொல்லத்தரமல்ல. இதேபோல் பெண்கள் வெளியேறிவிடில் ஆண்களுக்கு உடனே கல்யாணம் செய்து வைப்பதும் பெண்களை மட்டும் என்செய்வது "ஆடுப்பில்லைத்த கொள்ளி" எரிந்து தானே கவேண்டுமென்றும், இது உன் "தலைவிதி" என்றும் சொல்வதையும், யாரும் அறிந்ததே யாகும். பூரூவும் எழுதுவதானால் அருமை 'குடிஅரசு' இடமளிக்காது என விட்டோம்.

இவ்வாறு துன்பங்களையும், துக்கங்களையும் கொடுமைகளையும், கொலைகளையும், ஊட்டி, உரக்காட்டி, வளர்த்து, வாலிப, மாக்குவது, ஆக்கியறு எது? அஃதுதான் "விவாகரத்து" என்னும் ஒரு சிறு சட்டமில்லாதது என்று சொல்லுவது மிகையாகாது. அந்த விதமான ஒரு சட்டமிருக்குமானால், இந்தவிதமான கொடுமை, கொலை, துன்பம், முதலிய வற்றிற்கு ஆளாக வேண்டியதில்லாததோடு அநேக நன்மைகளையும் அடையலாம்.

அதென்னவெனில், பெண்களை ஆண்கள்கொடுமைப்படுத்த முடியாது. ஆண்களும் பெண்களும் சமமென்னும் எண்ணம் அனைவருக்கும் உண்டாகும். பெண்களின் கற்பை ஆண்கள் வேலிபோட்டு காப்பாற்ற வேண்டிய அவசியமில்லை, ஆண்களும் பெண்களும எவ்வளவு ஒழுக்காக நடந்து கொள்ளவேண்டுமோ அவ்வழவு ஒழுக்காக ஆரவரர்களே நடந்து கொள்வார்கள், பெற்றோர்களும் மணவிஷயமாய் இதுவரையும் நடத்திவந்த அதிகாரங்களை மாற்றிகொள்ளவேண்டியதாகியும், மணமக்கள் தங்கள் இஷ்டம்போல் தங்களுக்கு சரியான ஆண் பெண்களை தேர்ந்தெடுக்க உரிமை உண்டாகும், 7-வயது ஆணுக்கு 20 வயது பெண்ணும், 7வயது பெண்ணிற்கு 70வயது ஆணுமாக கல்யாணம் செய்டவும் கண்டிப்பாய் முடியாது போய்விடும்.

வரதட்சணை, சாந்திமுகூர்த்தப்பீல்,முதலியவைகளின் தொல்லை ஒழியும்"கல்லாலுலும்கணவன், புல்லாலும் புருஷன் அவன் என்ன சொன்னாலும் செய்தாலும் அதற்கெல்லாம் இணங்கி நடக்கவேண்டு"மென்றவைகளும், கலிவிதி, கர்மம், நல்வினை, தீவினை, இப்படி இருந்தால் போட்டும், அப்படி இருந்தால்நரகம் என்று பேசிக்கொள்வதுமெல்லாம் இவ்விஷயத்தில் தலைகாட்ட முடியாததோடு, இதுவரையும் அதைப்பேசிவந்தவர்களும், அதைக்கொண்டு ஏமாற்றி வந்தவர்களும், வெட்கப்பட வேண்டியதாகும். மேலும் அவர்களின் பொய்கூற்றையும் ஏமாற்றும் தன்மையையும் பொது மக்கள் உணர்ந்துவிடுவார்கள். இவைகளும் இவை போன்ற இன்னும் அநேகமுமாகும்.

இதற்குச் சான்றாக, இதுபோது நமக்கு ஒருஞாபகம் வருகின்றது. அதனால் வாசகர்களுக்கு அதே நன்மைகளும் உண்மைகளும், உண்டாகுமென நினைத்து அதைக் கீழேதருகின்றோம்.

அதாவது 31-3-29ல் ஐக்கிய மாகாண சமூக மகாநாட்டில் திரு பண்டித கிருஷ்ண பிரசாத் அவர்கள் "ஒரு புருஷன் தன்மனைவியை விட்டுப்பிரிந்து விட்டாலும், அல்லது கொடுமை செய்தாலும் தம்விவாகத்தைதாத்து செய்து கொள்ள அனுமதிக்கத்தக்கபடி சட்டத்தை திருத்தியமைக்க வேண்டுமென இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது' என்ற தீர்மானத்தைப் பிரேரேபிக்குமபோது பேசியதாவது எந்தப்புதிய இயக்கம் தோன்றினாலும் ஆரம்பத்தில் பல இடையூறுகளும் மூட எதிர்ப்புகளும் குறுக்கிடுகின்றன. இத்தத்தீர்மானம் விதவாவிவாகத்தைச்சார்ந்திருக்கிறது ஒருபெண் தன் கணவன் இறந்த பிறகு வேறொரு கணவனை மணந்து கொள்ளலாமென இந்த மகாநாடு அனுமதிக்குமானால் கணவனைவிட்டுப் பிரிக்கப்பட்ட பெண்களும், கணவனால் கொடுமைப்படுத்தப்பட்ட பெண்களும், என் வேறொரு கணவனை மணந்துகொள்ளக்கூடாது? இந்து கல்யாணம் தெய்வீகமானது என்று சிலரால் சொல்லப்படுகிறது. அது தெய்வீகமானதானால் ஆண், பெண் இருதிறத்தாருக்கும் ஒரேகட்டுப்பாடு இருக்கவேண்டும். ஆனால் நடைமுறையில் அது ஆண்களுமட்டும் கட்டுப்படுத்துவதிலுலை. வேதத்திலும் ஒப்பந்த கல்யாணம் உண்டென்பதாகத் தெரிகிறது. மனுதர்மசாஸ்திரத்தில் 5 காரணங்கள் சொல்லி அவற்றுள் ஒரு காரணத்திற்காக ஒருபெண்தன் புருஷனல்லாத வேறொரு புருஷனை கல்யாணம் செய்து கொள்ளலாம்என்று சொல்லப்பட்டிருக்கிறது. கார்த்தியாயனரும், வசிஸ்டரும், 6 காரணங்கள் சொல்லி அவற்றுள் ஒருகார

(தொடர்ச்சி 19ம் பக்கம் பார்க்க)

ரோஜா முத்தையா
ஆய்வு நூலக அறக்கட்டளை

# கடவுளைப் படைத்தவர் யார்?

[இவ்வியாசமானது உயர்திரு. மாணிக்கால் ஹெச். வக்கீல் அவர்களால் "இந்தியா பகுத்தறிவுச் சங்கத்'தாரால் வெளியிடப் பட்ட "ரீசன்" என்னும் ஜூலை மாத சஞ்சிகையில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டதாகும். ]

மக்களைக்கடவுள் படைத்தா ரென்று மனிதர்கள் சொல்லுகி றார்கள். ஆனால் கடவுளை யார் படைத்தாரென்று ஒருவரும் சொல்லுவதில்லை. கிறிஸ்து பிற ப்பதற்கு 4004 வருடங்களுக்கு முன்பாக அக்டோபர் மாதம் 23ந் தேதி திங்கள்கிழமைக்கும், அக்டோபர் மாதம் 28ந் தேதி வெள்ளிக்கிழமைக்கு மிடையில் கடவுளினுடைய ஒரு தனி சக்தி யினால், இந்த பூமியும், பூமியிலு ள்ள சராசர வஸ்துக்களும உண் டாக்கப்பட்டதென்று அமரிக் கா, ஐரோப்பா முதலிய தேசங் களின் 50 வருடங்களுக்கு முன் னிருந்த சரித்திர புஸ்தகங்களும், தற்காலம் வேறு சில இடங்களி லுமுள்ள சரித்திர புஸ்தகங்களி லும் காணப்படுகின்றன. ஆனால், இது கிறிஸ்து மார்க்கத்துக்கு முன்னிட்டே ஒரு உண்மையாக விளங்கி வந்தது. என்றாலும், கிறிஸ்துவர்களுமிதை மறுக்க முடியாத உண்மை யென்றே நம்பி வந்திருந்தார்கள். ஆனால், இப்பொழுதுவரவர இந்தக்கொள் கைவிஞ்ஞானசாஸ்திரிகளால்மறு க்கப்படடு, நிராகரிக்கப்பட்டுவிட் டது. அப்படியிருந்தும், அநேக கோடியூதர்களும், கிறிஸ்துவர்க ளும், முகம்மதியர்களும்தங்களறி யாமையின்பயனாய் கடவுளேஇப் பிரபஞ்சத்தைப் படைத்தாரென இன்னும நம்பிக்கொண்டிருக்கின் றார்கள். யூதர்களாலும், கிறிஸ் ஸ்துவர்களாலும், முகமதியர்களா லும், பொதுவான தீர்க்கதரிசி யெனக்கருதப்படும் மோசஸ்என் பவரே முதல் முதல் கடவுள்என் பதாக ஒன்றை யேற்படுத்தி, அக்கடவுள்தான் இப்பிர பஞ்சத் தைப்படைத்தாரென சித்தாந்த ப்படுத்தினவராவார். அதைஇயே நாதர்அவர்களும், முகமதுநபி அவர்களும் அப்படியே ஒப்புக் கொண்டிருக்கின்றார்கள்.

ஜொளாஸ்டர, பௌத்த, ஹிந் து ஆகிய மதக்கொள்கைகளைக் கொண்ட தத்துவ சாஸ்திரங்கள் இப்பிரபஞ்சங்களேகமென்றும், அவைகள் காலம், எல்லை முதலிய வைகளொன்றும் குறிக்கப்பட முடியாதனவென்றும், அடிக்கடி மாறுதலடையக்கூடியதென்றும், எந்தக்காலத்தில், எப்படிப்படைக் கப்பட்டதெனச்சொல்ல முடியா ததென்றும், அவைகள் மனிதனுல றிந்து கொள்ள சாத்தியப்படாத வைகளெனவும் கூறுகின்றன. எப்படியிருந்த போதிலும், அவர் களும் ஒரு கடவுளையோ பல கடவுள்களையோ கற்பித்துக்கொண்டு, அந்தக்கடவு ள்சர்வசக்தியும், சர்வவல்லமையும், சர்வ வியாபகமும் பொருந்தியவ ரென்றும், அவர் தானேகவே உண் டானவரென்றும், சாதாரணமனி தனுலறிந்து கொள்ள முடியாதவ ரென்றும், ஞானிகளால்தான் அறிந்துகொள்ள முடியுமெனவும் சொல்லுகின்றார்கள். இவ்வி ர ண்டு கொள்கைக்காரர்களும்தங் கள் தங்கள் மக்கள் ஜனசமூகத் தில் ஒழுக்கத்துடனும், நியாயத் துடனுமிருக்கவேண்டுமென்றும், அதற்குக் கடவுள் பயமிருக்க வேண்டியதவசியமென்றும், மற் றும் மனிதன் ஆசையிலிருந்து விலகி, திருப்தியும், சாந்தமுமடை யும் பொருட்டும், தனக்குவரும கஷ்டங்களுக்கு ஒரு சாந்தி ஏற் படுத்தவும் கருதி தங்கள் தங்கள் கடவுள்களை சிருஷ்டித்திருக்கின் றார்கள்.

இவ்விரண்டு கொள்கைக்காரர் களிலும் முதல் கொள்கைக்காரர் அதாவது யூதர், கிறிஸ்துவர், முகமதியர் உலகமானது சர்வ சக்தியுள்ள கடவுளால் படைக் கப்பட்டதெனவும், இரண்டா வது கொள்கைக்காரர்களான ஜொளராஷ்டர, பௌத்த, இந்து மதக்காரர்கள் ஆதியந்தமில்லாத தும், நிலையாததுமாயுள்ள இந்த உலகம் யாராலும் படைப்பிக்கப் படாமல் இருந்துவருகின்றதென வும் சொல்லப்பட்டு வருகின்றன. ஆனால், விஞ்ஞான சாஸ்திரிகள் இந்தஉலகம் கடவுள்களால்படை க்கப்பட்டதென்கின்ற மூடநெ ண்ணத்தையும், பொய்யான அபிப் பிராயங்களையும் பாமரமக்களிடத் திலிருந்துவிலக்கி, அவர்களுக்கு சிருஷ்டித் தன்மையினுண்மை யை யெடுத்துரைத்து, அறிவாளி களாகச் செய்ய வேண்டுமென்று கருதி, கடவுள் அல்லது கடவுள் கள் என்பது மனிதனுடைய கற் பனை யென்பதை வலியுறுத்த முயற்சி செய்துகொண்டு வரு கின்றார்கள்.

அப்படி முயற்சிப்பதில், மனி தர்களுக்குக் கொஞ்சம் நடுநிலை மை புத்தியும், ஆராய்ச்சித் தன் மையும் மிக்க அவசியமானதா கும். சாதாரணமாக, பகற்காலத் தில் நாம் சூரியனையும், இருண்ட மேகங்களில்லா இராக்காலங்க ளில் நக்ஷத்திரங்களையும் பார்க் கின்றோம். ஒரு நல்ல சக்தியு ள்ள, தூரதிருஷ்டியுள்ள கண் ணாடியின் மூலம் வானத்தைப்பா ர்ப்போமானால், கண்ணாடியின்சக் திக்குத்தகுந்தபடி இன்னும்அதிக மான நக்ஷத்திரங்களை நாம் காண லாம். அவைகளில் சில நக்ஷத் திரங்கள் சூரியனைவிடப் பெரிய தாகவும் அதிக உக்கிரமுடைய தாகவும் கூட இருக்கின்றது. ஆ னால், அவை நம்மிடமிருந்து 93,00,0000, மைல் தூரத்துக்கப் பாலிருப்பதாகக் கணக்கிடப்பட் ட சூரியனைவிட அதிக தூரத்தி லிருப்பதால், நமது கண்களுக்குச் சிரிய நக்ஷத்திரங்கள் போலவே அவைகள் காணப்படுகின்றன. சூரியனும், இந்த நக்ஷத்திரங்க ளும் ஒரேவிதமான இராசாயனப் பொருள்களையே கொண்டதாயி ருந்துகொண்டு, அதிகப்பிரகாச மாகவுமிருந்து வருகின்றது.

காலம் குறிப்பிடப்பட முடி யாத ஒரு காலத்தில் நமது பூமி யென்னும் கிரஹமானது சூரிய னிடத்திலிருந்து ஒரு ஆவி பின் டமாய்ப் பிரிந்துவந்து, பிறகு கி ர ஹ மண்டலத்தில் ஒரு கண்ட மாகி, மத்தியை நாடுகிற ஒருவித சக்தியாலும், மத்தியிலிருந்து வி லகுகிற ஒருவித சக்தியாலும் சுற் றப்பட்டுவந்தது. சுக்கிரன், செவ் வாய், வியாழன், சனி முதலான இதர கிரஹங்களும், நமது பூமி யைப்போலுள்ள சிறு கண்டு, துணுக்குகளேயாகும். நமது பூமிக்கொரு சந்திரனிருப்பது போலவே, அவைகளுக்கு மொவ் வொரு சந்திரனுண்டு. நமது சந் திரன் நமது பூமியைப் பிரதி சந் திர மாதத்திலும் சுற்றிவருவது போலவே, அவைகளையும் அவை களின் சந்திரன்களும் பிரதி சந் திர மாதங்களிலும் சுற்றி வரு கின்றன.

பூமியானது ஆவிபிண்டத்தி லிருந்து மாறி, அதன் மேற்பாப் பில் தற்போது காணப்படும் வை ஸம் பொருந்திய நிலைமையை அ டைய வேண்டுமானால் சுமார் 800,000,000 வருடங்கள் சென் றிருக்கவேண்டுமென பூகோள உறுப்பிலக்கண சாஸ்திரிகள் ணை க்கிடுகின்றார்கள். பல கோடி வருஷங்களுக்கு முன் சிருஷ்டியா யிருக்கக்கூடிய பிரமாண்டமான கல்மலைகள் யா வும், இப்பொழுது பலவிடங்க ளில் மனிதர்களுக்குப் புலனின் றன. சூரியனிடத்திலிருந்தமது பூமியானது பிரிந்துஇப்பொழுது 12,000,000,000 வருடங்களாகி ன்றன என நாம் வைத்துக்கொ ண்டு, இவ்வருஷங்களை 12 மணி வீதம் பிரிக்கப்பட்டுள்ள நமது சாதாரணகடிகார அளவுப்படிபங் கிடுவோமானால், அப்பொழுது பூ கோள உறுப்பிலக்கணக்காலமென் று கூறப்பட்ட 800,000,000 வருடங்களும் 4 $\left\{\frac{8 \times 60}{120}\right\}$ நிமிட ங்களுக்குத்தான் சமமாகவிருக் கும்.

இந்த 800,000,000 வருடங் களிலும், ஜீவாசிகள் இவ்வுலகில் தோன்றுவதற்கு முன்னமேயே 470,000,000 வருடங்கள் வரை யிலும் கழிந்திருக்கவே ண்டுமென்றும், பாக்கியுள்ள 330,000,000 வருஷங்களின் போதுதான் ஜீவாசிகள் இவ்வுல கில் உண்டாயிருக்க வேண்டுமெ ன்றும், பூகோள உறுப்பிலக்கண சாஸ்திரிகளும், தாவரவர்க்க-ஜீவ வர்க்க சாஸ்திரிகளும் கணக்கெ டுத்திருக்கின்றார்கள்.

இந்த 330,000,000 வருடத் திலும், ஊர்வன, பதப்பனவாகிய ஜந்துக்களும், மூலப்பாலுண்டு வளரக்கூடிய ஜந்துக்களும் இந்த நமது பூமியில் தோன்றுவதற்கு 225,000,000 வருடங்களுக்கு முன்னமாகவே முதுகெலும்பில் லாத ஜீவாசிகளும், மீன்களும், நீரிலும் நிலத்திலுமாகிய இரண் டிலும் வாசஞ்செய்யக்கூடிய தன் மையுள்ள ஜீவாசிகளும் பூமியில் உற்பத்தியாயிருக்க வேண்டு மெனவுமவர்கள் கருதுகின்றார் கள். மூலப்பாலுண்டு வளரக் கூடிய ஜீவாசிகள் தோன்றி 25,000,000 வருடங்களுக்கப் பால்தான், அதாவது இன்றைக் குச்சுமார் 1,200,000 வருடங் களுக்கு முன்பாகத்தான் மனி தன் முதன் முதலாக இவ்வுல கில் தோன்றியிருக்கவேண்டும். உலகத்தில் தோன்றி, கடமாடிக்

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க]

# மூன்றுவது மாகாண சுயமரியாதை மகாநாடு.

## மகாநாட்டுப்பந்தலில் போஸ்டாபீசு.

## தலைவருக்கு ஐந்து யானைகள் கட்டியரதம்.

## 10,000 டெலிகேட்டுகள் எதிர்பார்க்கப் படுகிறது.

—:0:—

மூன்றுவது சுயமரியாதை மகாநாட்டிற்கு விஜயம் செய்யும் டெலிகேட்டுகள் சௌகரியத்தை உத்தேசித்து மகாநாட்டுப் பந்தலில் ஒரு போஸ்டாபீசு வைக்குபடி ஏற்பாடு செய்திருக்கிறது. மதுரையிலிருந்து மட்டும் 1,000, டெலிகேட்டுகள் வருவார்கள். திரு. குற்றாலலிங்கம், திரு. வெள்ளையப்பன் இருவரும் மகாநாட்டு டிக்கட்டுகளை விற்பதற்காகத் திருநெல்வேலி ஜில்லாவில் சுற்றுப் பிரயாணஞ் செய்கிறார்கள். அவர்கள் திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம், பாளையங்கோட்டை, சால், நாஜரத், சாத்தன்குளம், காயாமெழி, திருச்செந்தூர், நாகர்கோவில், திருவனந்தபுரம், செங்கோடடை, தென்காசி, சுற்றாலம், அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, கோவில்பட்டி முதலிய பல இடங்களுக்குச் செல்லுவார்கள். இயக்கத்தில அபிமானமுள்ளவர்கள் டிக்கட்டுகளை விற்பதில் அவர்களுக்கு உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

திரு. வி. வி தனுஷ்கோடிக்குப் பதிலாக இளைஞர் மகாநாட்டு வரவேற்புக் கமிட்டித் தலைவராகத் திரு. ஜெயராம் செட்டியார் பி.எ. அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். திரு. ஈ. வி. இராமசாமியார் 27-7-31-ந்தேதி இங்கு வந்து சேர்ந்தவர் 28-7-31-ந்தேதி திருநெல்வேலிக்குப் புறப்பட்டுப் போகிறார். மகாநாட்டின் மற்றைய வேலைகள் தீவிரமாக நடைபெறுகின்றன. மகாநாட்டின் தலைவர் திரு. ஆர். கே. ஷண்முகத்தை ஒரு அழகான வண்டியில் வைத்து ஐந்து யானைகள் கட்டி இழுத்து ஊர்வலமாகக் கொண்டு போக வேண்டுமென்ற அபிப்பிராயம் இருக்கிறதென்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## சுயமரியாதை மகாநாட்டுத் தலைவர் வரவேற்பு.

### முனிசிபாலிட்டியார் தீர்மானம்.

### வேளியூர் வியாபாரிகளுக்கு வேண்டுகோள்.

மூன்றுவது மாகாண சுயமரியாதை மகாநாட்டிற்கு ஆகஸ்டு மாதம் 8, 9 தேதிகளில் தலைமை வகிக்க வரும்போது திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்கட்கு விருதுநகர் முனிசிபாலிட்டியார் ஒரு வரவேற்புப்பத்திரம் வாசித்துக் கொடுப்பார்கள். நேற்றைய கூட்டத்தில் இது விஷயமாக ஓர் தீர்மானம்நிறைவேற்றப்பட்டது. ஏகமனதாக அச்செலவிற்காக ரூ. 50 அநுமதிக்கப்பட்டது. திரு. கே. வி. அழகர்சாமியும், திரு. எஸ். வி. லிங்கமும் கோயமுத்தூர், சேலம், வடஆற்காடு, தென்ஞற்காடு, செங்கற்பட்டு ஜில்லாக்களில் மகாநாட்டு டிக்கட்டுகளை விற்பதற்காகச் சுற்றுப்பிரயாணம் செய்கிறார்கள். சுயமரியாதைக்காரர்கள் அவர்களுக்கு உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பந்தல் வேலை ஆகேகமாய் முடிந்துவிட்டது. மகாநாட்டு நாட்களில் அங்கு கடைகள் வைக்க விரும்பும் வெளியூர் வியாபாரிகள் ஆகஸ்டு மாகம் 2 தேதி பொதுக் காரியதரிசியை நேரில் சந்திக்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பர அதிகாரி.

---

## வேலூரில் கலகம்.

முகமது நபி பிறந்த நாள் கொண்டாட்ட சம்பந்தமாய் வேலூர் முஸ்லீம் கனவான்கள் வேலூர் மைதானத்தில் ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்திருந்தார்கள். அதே மைதானத்தில் காங்கிரசின் பெயரால் ஒரு கூட்டம் நடத்த சென்னையிலிருந்து திரு. கே. பாஷியமய்யங்கார் திருவாளர்கள் முக்துரங்கமுதலியாருடனும், கண்ணப்பருடனும் வாவழைக்கப்பட்டு ஊர்வலமாக முகமது நபிபிறந்த நாள் சம்பந்தமான கூட்டம் கூட்டப்பட்டிருக்கு மிடத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டார்கள். இதன் பயனுய் அங்குள்ள முஸ்லீம்களுக் கும், இந்துக்களுக்கும் சச்சரவே றப்பட்டு அடிதடியில் வந்து முடிந்து விட்டது.

கடைசியாக காங்கிரசின் ஊர்வலம் கலைக்கப்பட்டும் காங்கிரஸ் பொதுக்கூட்டம் நடைபெறுமலும் போய் விட்டது.

இந்துக்களில் சிலரும் முஸ்லீம்களில் சிலரும் இதை இந்து முஸ்லீம்கலகமாகத் திருப்பமுயற்சித்து வருவதாகத்தெரியவருகின்றது. அதற்குவேண்டிய சௌகரியம் செய்து கொடுக்கும் பொருட்டு காங்கிரஸ்காரர்களும் ஹர்த்தால் நடத்த ஏற்பாடு செய்வதாகவும் தெரிகின்றதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## ஒரு இரகசியம்.

இந்தியாவில் சென்னை மாகாணத்தின் உள் பிரதேசங்களில் பஞ்சு வாங்கி சென்னை துறைமுகத்திற்கும், பம்பாய் துறைமுகத்திற்கும் தாரு, கட்டை வண்டிச்சத்தம், ரயில் சத்தம் ஆகியவை கொடுத்து கப்பலேற்றி கப்பல் சத்தமும் கொடுத்து இங்கிலாந்துக்கும், ஜப்பானுக்கும் கொண்டுபோய் அங்கு அதிகக் கூலி கொடுத்து அதாவது இந்தியாவில் ஆள் ஒன்றுக்கு தினவருமானம் 0—1—9 என்ற ரூல் இங்கிலாந்தில் ஆள் 1க்கு தினவருமானம் 2ரூபாய் வீதம் வரும்படி உள்ள ஊரில் அதிகக் கூலி கொடுத்து நூலாக்கி நெய்து மறுபடியும் இந்தியாவுக்கே வண்டிச்சத்தம், கப்பல்சத்தம், ரயில் சத்தம் ஆகியவை கொடுத்து இந்திய அரசாங்கத்திற்கு சுங்கமும் இந்திய வியாபாரிகளுக்கு லாபமும் கொடுத்து இந்தியாவில் சென்னை மாகாணத்தில் பஞ்சும் நூல் மில்லும், நெசவுமில்லும் இருக்கின்ற ஊர்களுக்குக் கொண்டு வந்து உள் நாடடுத்துணிகளை விட சரசமான விலைக்கு எப்படி விற்கப்படுகின்றது?

குறிப்பு:—இங்கிலாந்துதுணியும், ஜப்பான் துணியும் இந்திய மில்துணிகளைவிட நல்ல சரசமாகவும் இருக்கின்றது என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு பொருளாதார நிபுணர்களோ நெசவு நிபுணர்களோ பதில்சொன்னால் மிகவும் நன்றியறிதலுடையவனாயிருப்பேன்.

ஒரு உண்மையான சந்தேகி.

---

## கடம்பங்குளம்.

25-7-31 ல் சுயமரியாதைத் தொண்டரும் சுயமரியாதைத்துவகீதத்தின் ஆசிரியருமான ப. நாராயணன் அவர்கள் தகப்பனார் காலமாகி விட்டபடியால் அன்றையத்தினமே பலர் மனஸ்தாபங்களுக்கிடையே யாதொரு விதமான கிரிகைகளுமின்றி பிரேதத்தை எடுத்தடக்கம் செய்யப்பட்டதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## கொழும்பு வாலிப நாடார் சமஉரிமை சங்கம்.

கொழும்பு வாலிப சங்கத்தின் திறப்பு விழா 24-7-31 இரவு 8 30 மணிக்கு கொழும்பு புறக்கோட்டை 4 ம் குறுக்குத்தெரு 57 ம் நெம்பர் வீட்டில் திரு. ஆ. பாக்கியனாதை நாடாரவர்களால் திறந்துவைத்த ஒரு அரிய சொற்பொழிவாற்றியபின் நிர்மாணங்கள் நிறைவேற்றியபின் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## ஜில்லா ஜட்ஜ் சுடப்பட்டார்.

வங்காள மாகாணம் 24 பர்காணஜில்லா டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் திரு. கார்லிக் அவர்கள் ஒரு வங்காளி மாணவனால் 2உ சுட்டுக் கொல்லப்பட்டார். மாணவனையும் உடனே போலீஸ் சார்ஜெண்ட சுட்டுக்கொன்று விட்டார். இதன் மத்தியில் மற்றொரு போலீசுக்காரனும் அதே வாலிபனால் சுடப்பட்டு விட்டான்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# விருதுநகர் மகாநாடும் வீரர்கள் கடமையும்.

[திருமதி S. நீலாவதி.]

நமது புனித இயக்கமாம் சுயமரியாதை இயக்கம் தோன்றி சுமார் ஐந்தாறு ஆண்டுகளே யின்றன. இதற்குள் அது செய்திருக்கும் வேலை சிறிது அபாரமென்றே சொல்லவேண்டும். ஏனெனில், ஐந்தாறு ஆண்டுகளுக்குமுன், நாடு இருந்த நிலைமையும், இன்றிருக்கும் நிலைமையும் சீர்தூக்கிப்பார்த்தால் எல்லா உண்மையும் விளங்கும். சுயமரியாதை இயக்கம் தோன்றுதற்குமுன், நம் மக்களுக்குப் பகுத்தறிவு என்பதும் இடையாதென்பது உறுதி. இப்போது மக்களனைவரும், பகுத்தறிவு மிக்குடையார்களாய் இல்லாவிடினும், எறக்குறைய நூற்றுக்கு எழுபதுபேருக்கு அவ்வுணர்ச்சி உண்டாகியிருக்கிறது. இனிஞர் தம் எழுச்சியும், பெண்ணுலகக் கண்விழிப்பும் தக்க சான்றுகளாயிருக்கின்றன. தாழ்த்தப்பட்டார் ஒதுக்கப்பட்டார் ஆதியோர்களின் உணர்ச்சியும், ஊன்றி நோக்கத்தகுதலே.

நமது இந்திய மக்கள் நெடுநாட்களாக மெடும் பேய்கருக்கு அமைப்பட்டு அதன் மூலம் தங்கள் அறிவையும் முழுகலைத்து போதாக்குறைக்குத் தங்கள் மூளையையும் உழுவைத்து விட்டார்கள். அழுகிப்போய் இருக்கும் மூளையில் எது ஒன்றும் விரைவில் ஏறமாட்டேனென்கிறது. ஒன்று சொல்ல, அது ஒன்றை செய்கிறது. மனிதாகளுக்கு இன்றியமையாது வேண்டியது மூளையேயாகும். மூளையில் கொஞ்சம் கோளாறு ஏற்பட்டால் சரி. அவ்வளவுதான்! உடனே எல்லா கைபலங்களும் ஒன்றிற்பின் ஒன்றாய் தொடர்ந்து உடன்கட்டை ஆகவே, ஒவ்வொரு ஆணும்பெண்ணும் மூளையை பாதுகாத்துக் கொள்ள வேண்டியதும் நன்னிலையில் வைத்துக்கொள்ள வேண்டியதும் அவசியமாகும். மூளையைக்கலக்க வைத்தால் முறுக்கு ஜோராயிருக்குமென்றெண்ணியே, காரியம் சித்தியாகுமென்றெண்ணியே பார்ப்பனர்கள் சகல பொய்மாயப்புரட்டுகளையும், மூளையில் கொண்டுநிறுத்தி எதையும் அலசக்க முடியாதபடி செய்து விட்டார்கள். நமது மக்களின் மூளையைசீர்படுத்த வேண்டும். சீர்படுத்த முடியாத நிலையிலிருப்பதை, அகற்றிவிட்டுவேறு வைக்கவேண்டும். இது இத்துடன் நிற்க,

நமது மாகாண சுயமரியாதை மகாநாட்டைப்பற்றி சிறிது பேசுவோம். முதல் மகாநாடு, செங்கற்பட்டிலும், இரண்டாவது மகாநாடு சுயமரியாதை இயக்கத் தலைவரின் ஸ்தானமாகிய ஈரோட்டிலும், சிறும் சிறப்புமாக நடைபெற்றது. இரண்டு மகாநாட்டிற்கும் எதிர்ப்புகள் பலமாகவே யிருந்தன. ஈரோடு மகாநாட்டிற்குத் தலைமை தாங்க இசைந்த உயர்திரு எம். ஆர். ஜெயகர் அவர்களையே பயமுறுத்தி சர்காட்டப பார்த்தார்களென்றால் அப்புறம் எதிர்ப்பைப்பற்றி மேலும் என்ன விவரித்துக்கூறுவது? ஜஸாமிகள் என்ன தான் ஆட்டம் போட்டாலும் மூடிவில் கிடைப்பது தோல்வியே தவிர வெற்றியல்ல; மூடியிருக்கும் கண்ணில் மண்ணை அள்ளிப் போட்டுவிடலாம். ஆனால் திறந்திருக்கும் கண்ணில், மண்ணை அள்ளிப்போடுவதென்றால் முடியும் காரியமல்ல. மூடர்கள் இதை உணரப்போவதில்லை. ஆனால், ஒருவிதத்தில் இவர்களைப்பற்றி மகிழ்வடைய வேண்டியதே! எனெனில் எதிர்ப்பெல்லாம்பலமான ஆதரவையே உண்டுபண்ணுகிறது. ஆகவே எதிர்ப்பைப்பற்றிக் கவலைப்படுவது அறியாமை யென்றே யான் கூறுவேன்.

தற்போது விருதுநகர் மகாநாட்டுக்கு வெளிப்படையான எதிர்ப்பு இல்லையென்றாலொரிந்தாலும் மறைமுகமாக ஏதாவது இருந்தே தீரவேண்டும். நமது சுயமரியாதை இயக்கம் தோன்றியதிலிருந்து நாளது வரை நடக்கும் மகாநாடுகளுக்கு எதிர்ப்புகள் இருந்தே வருகின்றன. ஆனால், எம்மகாநாட்டிலாவது எதிர்ப்பிலுல் நின்றது கிடையவே கிடையாது. எதிரிகளின் சூழ்ச்சிகளினும் மகாநாடு விஷயமாக அதிகாரிகளுக்குமேல் செய்த தெவிவுகளினும் பரப்பப்படுத்தப்படுகின்றது. இதன் பொருட்டு தெரியாதவர்களுள்ளும் ஓர்விதமான உணர்ச்சி உண்டாகிக் கூடம மாகி விடுகின்றது. எதிர்ப்புகளினுல் நமக்குக்கிடைக்கும் பலன் இதுவே யாகும் எனவே பெரியோர்களே! எதிர்ப்புகளினுல் எற்படுவது சாதகமே யொழிய, பாதகமில்லை யென்பதை இதிலிருந்து நன்கு தெளிவாகின்றதல்லவா? ஆகவே எதிர்ப்பைப் பற்றி எவரும் கவலைப்படுதல் அழகல்லவே? இனி மகாநாட்டைப்பற்றிப் பேசுவோம்.

மகாநாட்டை ஒரு திருவிழாவிற்கு ஒப்பிடலாம். நமக்குத் திருவிழாவிற்கும், வெகுதூரமாயிருக்கையில் இத்தச்சனியனை என்இழுத்துப் போடவேண்டும் என்று சில அன்பர்கள் கேட்கக்கூடும். ஆம்; கேட்கவேண்டியது அவசியந்தான். திருவிழாவின் அவசியத்தனத்தையும் அக்கிரமத்தையும் ஆகாச்செயலையும் தான் கண்டிகின்றோமேதவிர மற்றபடி அதனை வாயிக்கைசையா வேப்பங்காயாகவோ, எட்டிக்காயாகவோ எண்ணுகின்றோமில்லை. சிற்சமயம் திருவிழா அதிக தூரத்திலில்லாமல் சமீபத்தில் நெருங்கி விட்டது. திருவிழா சிறப்புற நடக்கத்தக்க ஏற்பாடுகளெல்லாம் செவ்வனே நடைபெற்று வருகின்றன. நமது சமூகம் பலநாட்களாக அடிமைவாழ்க்கையிலேயே ஆழ்ந்துவிட்டது. சுதந்தர மென்றால் சுதந்தர வாழ்க்கை யென்றால் என்ன என்று கேட்கும்படியான நிலைமையிலேயேசம்மக்கள் இன்றிருக்கின்றார்கள். உலகம் எப்படக்கமிருக்கின்றதென்பதே அவர்களுக்குத்தெரிய வராது. தாமிருக்கும் இடமே பரந்த உலகமென்றும் அதுவே எல்லாமெபவர்களும் நிறைந்தசென்றும் அந்தோ! பாவம்!! அறியாமல் மனப்பால் குடித்துக்கொண்டிருக்கின்றார்கள். அவர்தம்நிலைமைக்கு இரங்குவதன்றி நாம் எசிக்காட்ட முடியாது.

முடியாதுஎனெனில் அந்நிலைமையில், நமது மக்களைப்பாழும் பார்ப்பனீயம் ஆக்கிவைத்திருக்கின்றதன்றோ? ஆதலால், நாம் எவ்வாறு எசிக்காட்டுவது? நிற்க, நமது இயக்கம் நம் நாட்டில் மட்டுமின்றி மேல்நாட்டிலும் பரவத்தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும். மேல்நாடுகளிலும் நம்பியகச் சொல்லைகள் சிறிது பரவியே வருகிறது. ஆங்குள்ள அறிஞர்கள் சிலரும் இக்கொள்கைகளைத் தழுவியே பேசிவருகின்றனர். அதோடுமட்டுமல்லாமல் சுயமரியாதை இயக்கத்தைப் போன்ற பல இயக்கங்களும் தோன்றி வருகின்றது. அமெரிக்காவில் சாத்திர இயக்கம் தோன்றி அதன் கொள்கைகள் வைதீகருக்கு வயிற்றுக்கடுப்புஉண்டாக்கும்நிலையில் வேலை செய்து வருகின்றது. நம் நாட்டில் தோன்றியிருக்கும் சுயமரியாதை இயக்கத்தைக்கண்டு சுயநலமிகள் கொள்ளும் எடுக்கம் ஈண்டெழுதி முடியாததாகும்.

பல நாட்களாக ஒன்றை எகபோகமாயனுபவித்து வந்தவர்கள் மனம் திடீரென அதைவிட எவ்விதத்தில் சம்மதிக்கும் என்பதை நாமும் சற்று யோசித்துத்தான் பார்க்க வேண்டும். ஆனால், எப்போதும், எக்காலமும் ஏமாந்தவர்கள் தொடையில் கயறு திரிக்கமுடியாதென்பதையும், எக்காலமும் மக்கள் ஏமாந்தவர்களாகவே இருக்க முடியாதென்பதையும் அகர்களுடைய நூதனத்தான் பார்க்கவேண்டும். இருந்தாலும் 'உருகண்டபூனைவிடாது மேலும், மேலும் உரியைத் தாவத்தான் செய்யும்" என்பதற்கேற்ப, அனுபவித்தவர் உள்ளம் மீண்டும் மீண்டும் அதை அநுபவிக்கவே ஆசைப்படும். நிற்க, சுயமரியாதை இயக்கம் ஒரு வகுப்பாரையோ, ஒரு சமூகத்தையோ துவேஷிப்பதற்காக ஏற்பட்டதன்று என்பதை இன்னும் பல பெரியோர்கள் உணர்ந்தாகவில்லை பல அறிஞர்களான கொடுமைகளை அடியோடு ஒழிக்கப்புறப்பட்டதே, சுயமரியாதை இயக்கம். நம்மிந்தியாவில் எதைஎடுத்தாலும், கொலைகள் நிறைந்து காணப்படுகின்றதே யன்றி சற்றுவது நீதியோ, நியாயமோ இருப்பதாகத்தெரிய வரவில்லை. மதமோ, சாஸ்திரமோ, சட்டமோ, யாவும் அநீதி நிறைந்ததாகவே குறிப்பாக ஒரு பாலுக்கொரு நீதி உரைப்பதாகவேக் காணப்படுகின்றது. அநீதிகளை அடியோடு வேரறுத்துப் புறப்பட்டிருக்கும் நமது இயக்கம் வெகுபேர்களின் கண்ணுக்கு கல்லபாம்பாய்த் தோன்றுகிறது. ஆனால், யாமொன்றும் குற்றம் புரிகின்றோமில்லை. கொடுமை செய்கின்றோமில்லை. உண்மையையே எடுத்துக்காட்டுகின்றோம்.

இப்போதுகூட லெசினோதாகன், நமது விருதுநகர் மகாநாட்டைப்பற்றி தாறுமாறுதத் தண்டோப் பிரசாரங்கள் வெளியிட்ட வண்ணமிருக்கின்றனர். சுயமரியாதைக் காரர்கள் மோசடி செய்து வருகின்றார்கள் என்றும் சூழ்ச்சிகள் புரிகின்றார்களென்றும், கொள்ளையடிகின்றார்களென்றும். இன்னும் அவர்களுக்குத் தெரிந்தவையாவற்றையும் கலப்படை கூறி புலம்புகின்றனர். இவை அறியாமைக் காரணமாகவிலும், அகங்காரம் காரணமாக சிலவும், என்றுதான் துணிந்து கூறுகின்றேன். சுயமரியாதைப் பிரசாரங்களைக் கேட்டோர் யாவருக்கும், நாம் கொள்ளையடிக்கும் கூட்டத்தார்தானும் அன்றி, கொள்ளையிலும் கொள்ளை பகற்கொள்ளை, பக்கா கொள்ளை யடிக்கும் கூட்டத்தாரிடமிருந்து, மக்களை மீட்க வழி தேடுபவர்கள்தானும் என்பது தெளிவாய் விளங்கியேயிருக்கும். வீணில் விஷயம் விளங்காமல் தூறறிக்கொண்டிருப்போர், சந்தோஷமாய்த் தூற்றிக்கொண்டே கிடக்க! அது குறித்து எவரும் கவலைபுறவேண்டா! நமது இந்திய சமூகம் இன்றிருக்கும் நிலையில் நாம் தூற்றுதலிலும் போற்றுதலிலும் கவனிக்க நேரமில்லை. நமது கருமத்திலேயே, கண்ணேட்டமாயிருத்தல்வேண்டும். நிற்க,

நமது இயக்கத்தைப்பற்றி சிக்கோட்களாக சிக்கலான அபிப்பிராயங்கள் பல மக்களிடையே நிலவி வருகின்றது. கதருக்கு விரோதமான இயக்கம், காந்தியைத் நிட்டும் கட்சி, சாஸ்திரசை எதிர்க்கும் கூட்டம் என்ற ஒரு சிலரும், சத்தியாக்கிரகம் ஆபத்பிக்கவில்லை, சமத்துவப்போர் தொடங்கவில்லை என்று ஒரு சிலரும் குறைகூறித் திரிகின்றனர். கடவுள் இல்லையென்னும் கூட்டத்தார் என்பது பிறிதொருபக்கம். எனவே இவையாவற்றையும் கன்கு விளக்கி ஒரு முடிவு காணவேண்டியது. விருதுநகர் மகாநாட்டின் முகிய வேலையாகும்.

நமது இயக்கத்திற்கு விருதுநகரில் எதிர்ப்பும் அனைப்பும் சரிசமமாகவே விருக்கிறது. எனினும் மகாநாடு வெற்றியுடனே முடியப்போகின்றது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. தலைவர் உயர்திரு

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.

முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# சாத்தான்குளத்தில் இராமசாமி உபன்யாசம்.

சகோதரர்களே!

இன்று இங்கு கூட்டப்பட்டிருக்கும் ஒரு மதசம்பந்தமான இந்த முக்கியக் கொண்டாட்டத்திற்கு என்னை தலைமை வகிக்க அழைத்ததை உண்மையிலேயே நான் ஒரு பெருமையாய்க் கருதுகின்றேன்.

எனெனில், என்னைப்பற்றி எல்லா மதபக்தர்களும் சொல்லும் குறை தன் உலகம் அறிந்ததேயாகும். அதாவது நான் மதங்களைக் குற்றம் சொல்லுகின்றவன் என்றும், மதமே கூடாதென்று சொல்லுகின்றவன் என்பதோடு மாத்திரமல்லாமல் கடவுளைப் பற்றியே கூடத் தரக்குறைவு சொல்லுகின்றவன் என்றும் சொல்லப்படுகின்றவனுவேன்.

அப்படிப்பட்ட என்னை, உலகத்திலுள்ள மற்ற மதக்காரர்களை யெல்லாம்விட அதிகமான மதபக்தி கொண்டவர்கள் என்று சொல்லப்படுகின்ற இஸ்லாம் மார்க்கத்தை அனுசரிக்கின்றவர்கள் என்பவர்களாகிய நீங்கள், கூப்பிட்டிருப்பது மிகவும் அதிசயமென்று சொல்லப்பட வேண்டியே அல்லவா?

நீங்கள் என்னைக் கூப்பிட்டதுபோல் இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளுகின்றவர்கள் அவர்கள் மதசம்பந்தமான ஒரு நாயன்மாரோ, ஆழ்வாரோ பிறந்த நாள், செத்த நாள "திருநக்ஷத்திரம்" என்று சொல்லப்படும் "விக்ஷேசநாள்" கொண்டாட்டத்திற்கு ஒரு முஸ்லீமையோ, ஒரு கிறிஸ்துவனையோ சுலபத்தில் கூப்பிட்டு விடமாட்டார்கள். அது மாத்திரமல்லாமல் அவர்கள் பக்கத்தில் நீங்கள் இருக்கவும் சம்மதிக்கமாட்டார்கள். உங்களைத் தொட்டுவிட்டால் மறுபடியும் குளிக்காமல் அங்கு போகமாட்டார்கள். அவ்வளவு தூரம் போவானேன்; என்னையே கூப்பிடமாட்டார்கள். மற்றும் எந்த நாயன்மாருக்கும், எந்த ஆழ்வாருக்கும் குரு பூசையும், திருநக்ஷத்திரமும் நடத்துகின்றார்களோ அவர்கள் ஜாதியாரையே கூப்பிடவோ, பக்கத்தில் வைத்து சாப்பிடவோ, தொடவோ சம்மதிக்கமாட்டார்கள்.

எனெனில், அந்தப்படி தொடாமலும், பக்கத்தில் வைத்துச் சாப்பிடாமலும் இருந்து கொண்டு, மற்றவர்களை கேவலப்பார்வையும், இழிவாகவும் கருதுவதுமேதான் அவர்களது மதம் (இந்துமதம்) என்று கருதிக்கொண்டிருக்கின்றார்கள். இப்படிப்பட்டவர்கள்தான் அநேகமாய் என்னை மதத்துரோகி என்று அழைப்பதாக நான் அறிந்து வருகின்றேன்.

பொதுவாகவே உலகத்தில் அநேகமான மக்களுக்கு "மதம்" பிரதானமென்று கற்பிக்கப்பட்டிருக்கின்றதே தவிர மதம் என்றால் என்ன? அது எதற்து? என்கின்ற அறிவே மதபக்தர்கள்-மதத்திற்காக பிராணனைக் கொடுக்க இருக்கின்றவர்கள் என்பவர்களிலுங்கூட ஆயிரத்தில் ஒருவருக்கும் தெரியாதென்றே நான் தைரியமாயச் சொல்லுவேன். என்னைப் பற்றியே மதஞானமில்லாத மக்கள் பலவிதமாகப் பேசுகதையும், எழுதுகதையும் நான் கேட்டுக்கொண்டும், பார்த்துக்கொண்டும்தான் வருகின்றேன்.

அதாவது, பௌத்தமதத்தைப் பற்றியும், இஸ்லாம் மதத்தைப் பற்றியும் அவற்றில் காணப்படும் எதாவது விஷயங்களைப்பற்றியும் பேசுபோது "மதமே தப்பானது, மதமே கூடாது என்று சொல்லுகின்ற சுயமரியாதைக்காரன் எப்படி இந்த மதங்களைப் பற்றி மாத்திரம் பேசலாம்?" என்பதாகச் சொல்லுகின்றார்கள். இப்படிப்பட்ட இவர்களை ஒருவித தெளிவற்றவர்களும், அத்திரத்தால் அதிர்ந்தவர்களும் என்று சொல்லுவதைவிட வேறு ஒன்றும் சொல்லமுடிவதில்லை.

மதத்தைப்பற்றி நான் பேச ஆரம்பித்த காலத்திலேயே நான் நன்றாய் விளக்கிவிட்டே பேசுகின்றேனே யொழிய பேசிவிட்ட பிறகு தத்துவார்த்தம் சொல்ல வருவதில்லை.

அதாவது மதம் என்பது மனிதனின் உலக வாழ்க்கையின் நடப்பிற்கு ஒரு வழிகாட்டியானக் கொள்கைகளைக் கொண்டது. அது நம்மைப்போன்ற ஒரு மனிதனால் ஏற்படுத்தப்பட்டது அக்காலத்தேசவர்த்தமானப்படி மக்கள் சௌகரியத்திற்காக திருத்தியமைக்கக்கூடிய உரிமையுள்ளது. மனிதனுடைய அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் இடம்தரக்கூடியது' என்று சொல்லுகின்ற மதத்தைப்பற்றி நான் எப்போதும் அது கூடவே கூடாது என்று சொன்னதே கிடையாது. அந்தப் பொருளின் மீது இருப்பதாக ஒப்புகொள்ளுகின்ற மதங்களிடம் எனக்கு அதிகத தகராரே கிடையாது.

அப்படிப்பட்ட மதம் என்பது வேண்டியதேதான். அதாவது ஒரு பொது சங்கமோ, ஒரு வாசகசாலையோ, ஒரு வியாபாரச் சங்கமோ, ஒரு வக்கீல் சங்கமோ, ஒரு விளையாட்டுச் சங்கமோ, ஒரு சீட்டாட்டசபையோ என்பதாக ஒரு ஸ்தாபனமிருந்தால் அந்த ஸ்தாபனத்திற்குச் சில விதிகள் இருக்கவேண்டியது அவசியமேயாகும். அத்தவிதி அந்த ஸ்தாபன மக்கள் நன்மைக்கும், ஸ்தாபனம் சரிவர நடந்தேறுவதற்கும் அனுகூலமானதாகவும், அந்தஸ்தாபனக்காரர்களால்எத்பட்டதாகவும் இருக்கவேண்டும் என்பது போலவே கூடி வாழ நினைக்கும் மனிதனின் உலக வாழ்க்கை நலத்திற்கும் எதாவது விதிகள் வேண்டும் என்பதில் குற்றமில்லை. அவ்விதிகளுக்குப் பெயர், கொள்கை என்றாலும், நிட்டம்என்றாலும், மதமென்றாலும் மார்க்கமென்றாலும் ஒன்றேதான்.

நமது நாட்டில் பல பாஷைகள் வந்து சேர்ந்து விட்டதால் கொள்கைகளுக்கு மதமென்றும், சமயமென்றும், மார்க்கம் என்றும் சொல்லப்படுகின்றது என்பதாகப் பண்டிதர்கள் சொல்லுகின்றார்கள். ஆகலால் அந்த அளவில் நான் எந்த மதத்தையும் தரக்குறைவாக்கூடியவனல்ல. இதில் ஒன்றும்ஒளிமறைவோ, சூத்து வார்த்தமோ இல்லை. வெளிப்படையாகவேசொல்லுகின்றேன்.

ஆனால் "மதம் மனிதனுடைய ஆத்மார்த்தத்திற்கு ஏற்பட்டது. அது கடவுளுக்கும், மனிதனுக்கும் உள்ள சம்பந்தத்தை விளக்குவது"---கடவுளைக் காண்பதற்கும் அடைவதற்கும் ஒரு சாதனமாயிருப்பது-அதை உண்டாக்கினதுகடவுள், அல்லது கடவுள் அவதாரம், அல்லது கடவுள் தன்மை, அல்லது கடவுள் மகன் அல்லது மனிதத் தன்மைக்குமேற்பட்ட ஒரு தெய்வீகத்தன்மை,---அதில் என்ன சொல்லியிருந்தாலும் அது மனிதனுக்குப்புரியாவிட்டாலும் அது பயனளிக்காவிட்டாலும் மனிதனால் பின்பற்ற முடியாவிட்டாலும் அதை மனிதன் ஒப்புக்கொண்டிருந்தாலே தீரவேண்டும். அதன் பேரால் ஏற்பட்ட நூல்கள் சாஸ்திரங்கள் என்பனவைகளை எல்லாம் நம்பித்தானாகவேண்டும்--தனக்கு விளங்காததை யெல்லாம் நமபிதானாகவேண்டும்--அதில் ஒரு விஷயத்தைக்கூட கேள்வியிடக்கூடாது---மாற்றவும் கூடாது---புத்தியை சௌகரியத்திற்குத் தகுந்தபடி எதையும் சேர்த்துக்கொள்ளவும்கூடாது'என்பதுபோன்ற நிபந்தனைகளையும், கட்டளைகளையும் கொண்டதுதான மதம்'என்றுசொல்லப்படுமதையும் நான் என்னைப்பொறுத்தவரை சிறிதும் ஒப்புக்கொள்ளாதவன் என்பதோடு அப்படிப்பட்ட மதம் மனித சமூகத்தின் வளர்ச்சிக்கும், சுதந்திரத்திற்கும், முற்போக்கிற்கும், சுயமரியாதைக்கும் விரோதமானது என்று சொல்லுவதோடுகூட மனித சமூக நன்மைபை உத்தேசித்து அவை அழிக்கப்படவேண்டியது அவசியமென்றும் கருதுகின்றேன்.

அன்றியும் நான் எந்த மதம் என்பதைப்பற்றிப் பேசுபோதும் இந்த விஷயங்களுக்கு மாறாக நான் எப்போதும் பேசினதே கிடையாது. நான் பௌத்த மதத்தைப்பற்றியும், இஸ்லாம் மதத்தைப்பற்றியும், இந்து மதத்தைப்பற்றியும் பேசும்போதெல்லாம் இந்த முடிவின் பேரிலேயே பேசுகின்றேன். இந்த உண்மைப்படியுள்ள தாரதம்மியங்களைப்பற்றி தான் ஒரு மதத்திற்கும் மற்ற மதத்திற்கும் உள்ள வித்தியாசங்களைப்பற்றியும், பேசுகின்றேன். இந்த உண்மையின் பேரில் தான் எந்த மதத்தலைவர்களைப்பற்றியும் நான் பேசுகின்றேன்.

திரு. முகமது நபிகளார்களையும் மற்றபடி யார் எப்படி கினைத்துக்கொண்டாலும் நான் அவரை ஒரு மனிதர் என்றும் மனிதரைப்போலவே தாயும் தகப்பனும் (தூணும் பெண்ணும்) கூடிக் கருக்கொண்டு பிறந்த பின்னர் வென்றும் கருதுகின்றேன் அவரால் செய்யப்பட்டதாகச்சொல்லும் விஷயங்களில் நிதானத்தை நான் புகழ்கின்றேன். அதற்காகவே அவரையும் பாராட்டுகிறேன். அப்படிச் சொல்லப்படுபவைகளை அந்த மார்க்கத்திற்கு ஒரு பெருமை என்றும் கினைக்கின்றேன். பௌத்தரும் அப்படித்தான். ஆனால் மற்ற மதக்காரர்களோ தங்கள் மதத்தலைவரை ஒரு மனிதர் என்று சொல்லுவதே கோபித்துக்கொள்ளுகின்றார்கள்.

கழுதையினுடையோ, குதிரையினுடையோ, நாயினுடையவோ வயிற்றிலிருந்து தோன்றினார் என்றாலும் ஒப்புக்கொள்வார்கள். மனிதனுக்கும் மனுஷிக்கும் (கலந்து) பிறந்தது என்றால் அதில் கௌரவமில்லை என்றே கருதுவார்கள். மனிதத்தன்மைக்கும் மனிதன் அறிவிற்கும் மேற்பட்டதாக --மக்களுக்குப் புரியாத எதாவது ஒன்றைசொல்லாமல் ஒரு மதத்தை நிர்ணயிக்க அநேக மக்கள் சம்மதிப்பதேயில்லை.

## இஸ்லாம் இந்து வித்தியாசம்.

இந்த, நான் இந்து மதத்தைப்பற்றியோ இஸ்லாம் மதத்தைப்பற்றியோ பேசுவது என்பதில் இரண்டு மதத்தினுடையவும் ஆதாரங்களை ஆராய்ச்சி செய்து பேசுவதாக யாரும் கருதி விடாதீர்கள். அந்த வேலையை ஒரு பரீக்ஷை மாணவனுக்குக் கொடுத்து விடுவதில், அதில் என்ன இருக்கின்றது என்பதில் எனக்குக் கவலையில்லை. ஆனால் நான் பேசுவது என்பது இரண்டு மதத்தைச் சேர்ந்ததாகச் சொல்லிக்கொள்ளும் பெரும்பான்மையான மக்களிடை இருந்துவரும் பிரத்தியட்சக்கொள்கைகள் சம்பந்தமானக் காரியங்களையும் அதனால் அவர்கள் பிரத்தியட்சத்தில் அடைந்துவரும் பலனகளையும் பற்றித் தான்பேசுகின்றேன்.

பொதுவாகவே மதத்தின் தன்மையை இதிலிருந்துதான் நிர்ணயிக்க வேண்டுமே யொழிய எட்டில் என்ன இருக்கின்றது என்று பார்ப்பதில் பயனில்லை. அதுபோலவே அந்த மதக்காரர்கள் போட்டுக்கொள்ளும் வேஷமே தான் மதம எதாலும் அதிலும் பயனில்லை.

அந்தந்த மதங்களில் மக்கள் எப்படி நடந்து கொள்ளுகிறார்கள? மக்கள் எப்படி நடத்தப்படுகின்றார்கள்? அதனால் அந்த சமூகம் என்ன பலனடைந்திருக்கின்றது? என்பது போன்றவைகள்தான் மதத்தின்மேன்மையை அளக்கும் கருவியாகும். அப்ப

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க.

## சாத்தான்குளத்தில் மிலாதே ஷரீப்

# முகமது நபி பிறந்தநாள் கொண்டாட்டம்.

### ஈ. வெ. இராமசாமி தலைவர்.

திருநெல்வேலி ஜில்லா சாத்தான்குளத்தில் திரு. முகமது நபி அவர்கள் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு ஈரோடு திரு. ஈ. வெ. இராமசாமியை தலைமை வகிக்கக் கேட்டுக் கொண்டதற்கிணங்க திரு. ஈ. வெ. இராமசாமி 26 தேதி ஈரோட்டிலிருந்து புரப்பட்டு 27 தேதி விருதுநகர் சென்று அங்குமகாநாடுசம்பந்தமான விஷயங்களைப் பார்த்து விட்டு 28 தேதிகாலைவிருதுநகரிலிருந்து புரப்பட்டு பகல் 12 மணிக்கு நாசரத் ஸ்டேஷனில் வந்து இறங்கினார். அங்கு ஸ்டேஷனில் திருவாளர்கள் அ. இராகவன், பெரியசாமிநாடார், யூனியன்போர்டு தலைவர் அ. மு. ஆதம்சாயபு, முகலிய 40,50, கனவான்கள் ரயில்மேடையில்வரவேற்றுமாலையிட்டு கார்வழிமேரே சாத்தன்குளத்திற்கு அழைத்துச்சென்றனர். அங்கு ஜனப் மரைக்காயர் முதலாளி அவர்கள் வீட்டில் பகல் விருந்து நடந்தவுடன் மாலை 5 மணிக்கு அங்கு இஸ்லாமிய செக்கண்டரி ஸ்கூல முன் மைதானத்தில் அலங்காரத்துடன் போடப்பட்டிருந்தப்பந்தலுக்குத் தலைவரைக் கூட்டமாக அழைத்துச்சென்றதும் கொண்டாட்டம் துவக்கப்பட்டது.கூட்டத்திற்குசுமார்2000பேர்கள் வரை திசையன்விலை, திருச்செந்தூர், ஆறுமுகநேரி, பேய்க்குளம், சுப்பிரமணியபுரம், காயாமொழி, நாசரேத், திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார்திருநகரி முதலியஊர்களிலிருந்து அநேக கனவான்கள் வந்திருந்தார்கள். சில முஸ்லீம் பெண்மணிகளும் கூட்டத்திற்கு பின் மறைவில் இருந்தார்கள்.

கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் முக்கியமானவர்கள் திருவாளர்கள்--எம். முஹமத் செய்க்மரைக்காயர் பி.ஏ. சப்மாஜிஸ்திரேட்டீசயத்உஸன்சாஹிப், ஆள்வார்திருநகரி கே. எம்.சலிஹ் (ஆசிரியர் நருஸ்லாம்) டாக்டர் எஸ். வி. சுப்பையா, யூனியன் போர்டு தலைவர் அ. மு. ஆதம் சாஹிப், மு. சு. மீ. அசன் மீரா முஹையதீன்மரைக்காயர், அ. மு. செ. அப்துல் காதர்மரைக்காயர், அ. இ. முஹமத்யூசுப்மரைக்காயர், பேட்மர நகரம் நார்தீன் ஃ பிரதர், பஞ்சாயததுக்கோர்ட்டு பிரசிடெண்டு பாரூசோதி நாடார், நாகை மீரான் மரைக்காயர், யூனியன் போர்டு மெம்பர்கள் ந. சு. நமசிவாய நாடார், க. மு. சே. சேக்மூஹமத் மரைக்காயர், அருளப்ப உபாத்தியாயர், ஆறுமுகநேரி துரைபாண்டியர், திருச்செந்தூர் தாலுகா காங்கிரஸ் கமிட்டித்தலைவர் கனகசபாபதி பிள்ளை, திசையன்விலை தோதாத்தி நாதபிள்ளை, திருநெல்வேலி ஜில்லா எஜுகேஷனல் கவுன்சில் மெம்பர் பி. எஸ். களியபெருமாள், நாஸரேத் மரவியாபாரி வெளிக்கண்ணு நாடார், சுடலை முத்துக்கரையான் பிள்ளை, அ. ரு. த. ஆறுமுகம் செட்டியார், அ. ரு. புலமாடன் செட்டியார், க. கு சு. ந. சுடலை முத்து செட்டியார், மரவியாபாரி த. மு. சோமசுந்தரம், ந. கு. பெரியசாமி (குடி அரசு ஏஜண்டு) த. அ. கோபால கிருஷ்ணன், ப. வேலாசாரி, நா. சுடலை முத்து ஆசாரி, க. அ. பண்டார ஆசாரி காசு கடை, பே. க அப்பையா ஆசாரி முதலியவர்களாவார்கள்.

கூட்டம் துவக்கப்பட்டதும் திரு. ஈ. வெ. இராமசாமியை தலைமைவகிக்கயூனியன்போர்டுதலைவர் ஜனப்அ.மு.ஆதம்சாயபுஅவர்கள் பிரேரேபித்ததும் ஜனப் மரைக்காயர் முதலாளிஅவர்கள் ஆமோதிக்க பெருத்த கரகோஷத்தினிடையே அக்கிராசனம் வகித்தார். ஆரம்பத்தில் திரு. நபியவர்களின் ஜீவிய சரித்திர புத்தகம் வினியோகிக்கப்பட்டது. பிறகு ஒரு முஸ்லீம் சிறுவர் திரா ஆத் ஓதினார். அக்கிராசனர் முக உரையாக தனை தலைமை வகிக்க அழைத்ததற்கு நன்றி செலுத்திவிட்டு மற்றதை முடிவுரையிலேயே சொல்வதாகக் கேட்டுக்கொண்டு நிகழ்ச்சிக் குறிப்புப்படி ஜனப் அ. மு. ஆதம் சாயபு அவர்களைக் கூட்டத்தின் நோக்கத்தையும் கொண்டாட்டத்தின் அவசியத்தைப்பற்றியும் பேசும்படி கேட்டுக்கொண்டார். அவர் பேசிய பின் சாத்தன்குளம் பண்டிதர்திரு. அ. இராகவன் அவர்களை திரு. நபி அவர்கள் என்பதுபற்றி பேசும்படி கேட்டுக்கொண்டார். அவர் பேசிய பின் சரியாய் 6 மணிக்கு தலைவர் முடிவுரை சொல்லத்துடங்கி 8, 15 மணிவரை பேசினார். பிறகு எல்லோருக்கும் மாலையிட்டு வந்தேமாதரம் சொல்லப்பட்டு கொண்டாட்டம்8-30 மணிக்கு இனிது முடிந்தது. உடனே ஜனப் மரைக்காயர் முதலாளி அவர்கள் வீட்டில் சாப்பாடு நடந்தவுடன் நேரே நாசரத்திற்கு திரு. இராகவனும்இராமசாமியும்நாசரத்கனவான்களால் அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு நாசரத் ரயில்வேஸ்டேஷனுக்குப் பக்கத்தில் கடைவீதிக்கு முன்புறமுள்ள மைதானத்தில் இரவு 9மணிக்கு மேல் காலையிலேயே ஏற்பாடு செய்திருந்தபடிக்குதிரு. ஈ.வெ.இராமசாமிதலைமையில்ஒருகூட்டம் நடந்தது.இரவுகாலமாயிருந்தாலும்அக்கூட்டத்திற்கும் சுமார் 500, 600போர்கள் வரை விஜயம் செய்திருந்தார்கள். பெரிதும் கிறிஸ்துவர்களாகவே இருந்தார்கள். கூட்டம் ஆரம்பிக்கப்பட்டதும் திரு. அ. இராகவன் 'சுயமரியாதையும் பெண்கள் விடுதலையும்' என்பது பற்றி பேசினார்.

பிறகு மரக்கடை கன்னியப்பநாடார் 'சுயமரியாதையும் காங்கிரசும்' என்பது பற்றி பேசினார். பிறகுஅக்கிராசனர்முடிவுரையாக 'சுயமரியாதை இயக்கமென்பது என்ன சொல்கின்றது' என்பது பற்றி பேசினார். இரவு 12மணிக்கு கூட்டம் முடிவடைந்தது.

ஒரு வேடிக்கை.

கூட்டத்தின் மத்தியில் திரு. இராகவன் பேசும்போது நாசரத் ஸ்டேஷன் மாஸ்டர் ஒரு அய்யர்கொஞ்சம் ஒழுங்குதவறுதலாய்ப்பேசினார். அதாவது திரு. இராகவன் புராணங்களைப் பற்றப் பேசி மூட நம்பிக்கைக்கூடாது என்று சொல்லும்போது அந்த ஸ்டேஷன் மாஸ்டர் (பார்ப்பனர்) "நீர் உம்ம தகப்பனாருக்குத் தான் பிறந்தீர் என்பது உமக்கு த்தெரியுமா? எப்படி உம் தகப்பனார் பெயர்போடுகின்றீர்' என்று கேட்டார். அதற்கு திரு. இராகவன் 'நாங்கள் அதைப்பற்றிக்கவலைப்படுவதில்லை' என்றும், 'தன்னைப்பற்றிய குறியும்அடையாளமும்தெரிவதற்காகஒரு பேர் போடப்படுகின்றதேபொழியதன்யாருக்குப்பிறந்தேன் என்பதை குறிப்பதற்காக அதுபோடப்படுவதில்லை' என்றும், 'தானும் தன் அடையாளத்தையும்,தகப்பனார் அடையாளத்தையும் பார்க்கும்போது அது விஷயத்தில் தன்னைப் பொறுத்தவரை சந்தேகம்இல்லை'என்றும்'உமக்குசந்தேகம் இருந்தால் இனி உம்மை பெயர்எழுதும்போது உமது தகப்பனார் பெயரைப்போடாமல் இருந்து கொள்வதில் எனக்கு ஆட்சேபணையில்லை என்றும் உமக்குத் தெரியாத விஷயத்தைக் கட்டாயப்படுத்திநம்பும்படி நான் சொல்ல வரவில்லை' என்றும் சொன்னார். கூட்டத்தினர்கள் சிரித்தார்கள். அய்யருக்கு வெட்கமும் கோபமும் வந்து சிறிது கூச்சல் போட்டு பார்த்தார். ஒன்றும் முடியவில்லை. பேசாமல் வீடு திரும்பி விட்டார். இந்த சம்பவம் கூட்டத்தில் இருந்தவர்களுக்கு பார்ப்பன தத்துவம் இன்னது என்று விளங்க மிக்க அனுகூலமாயிருந்தது. பிறகு மறுநாட் காலையில் திரு. ஈ. வெ. இராமசாமிதிருநெல்வேலிக்குமோட்டாரில் வந்து நேரே ஈரோட்டிற்குப் போய்விட்டார்.

---

## மூன்றுவது சுயமரியாதை மகாநாடு.

## விருதுநகர்.

## தொண்டர் கமிட்டிக் கூட்டம்.

நமது மாகாண சுயமரியாதைத்தொண்டர்சங்கக் கமிட்டிக்கூட்டம் ஒன்று 1931 வரு ஆகஸ்டு மாதம் 6 ந்தேதி வியாழக்கிழமை மாலை விருதுநகர் சுயமரியாதை "சமதர்மமண்டபத்தில்" மாயவரம் திரு. சி. நடராஜன் அவர்கள் தலைமையின்கீழ் நடை பெறும். அவ்வமயம் நமது இயக்கத்தைப்பற்றி அபிப்பிராய பேதம் உள்ள விஷயங்கள் குறித்தவிவாதித்து 3 வது சுயமரியாதை மகாநாட்டில் தீர்மானரூபமாகக் கொண்டு வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுமாகையால் எல்லாத்தொண்டர்களும் கூட்டத்திற்கு விஜயம் செய்ய வேண்டுகிறேன். கூட்டத்திற்கு ஆஜராகாதத்தொண்டர்களுக்கு மகாநாட்டில் தொண்டர்கள் சார்பாகப்பேசுவதற்கு உரிமை கிடையாது என்று இதன் மூலம் அறிவித்துக்கொள்ளுகிறேன்.

எஸ். வி. லிங்கம்.

உபதலைவன், மாகாண சுயமரியாதைத்தொண்டர்சங்கம்.

குடி அரசு

ஈரோடு 1931 ஆகஸ்டு மீ 2உ

# சிக்கனம்.

## சிக்கனமா? வரிகுறைப்பா?

### உணவுப் பொருள்களின் விலை சுமார்

30 வருஷத்திற்குமுன் இருந்தது போலவும், சிலவற்றிற்கு அதைவிட மலிவாகவும் குறைந்து போய்சர்க்காரார்வரிகட்டுவதற்கு மார்க்கமில்லாமல் குடியானவர்களுக்கும், வியாபாரிகளுக்கும் அதிகக்கஷ்டம் ஏற்பட்டு மக்கள் புழுவாய்த் துடித்துக் கொண்டிருக்கும் இக்காலத்தில், பொது ஜனத் தலைவர்கள் என்பவர்களும், தேசியத் தலைவர்களென்பவர்களும், தேசியஸ்தாபனம் என்பவைகளும் சிறிதும் ஈவு, இரக்கம் யோக்கியப் பொறுப்பு இன்றி உத்தியோகங்கள் பெறவும், பெரும் பெரும் உத்தியோகங்களை சிருஷ்டிக்கவும்முயற்சிகள்செய்வதிலும், அவற்றிற்காகப் போட்டி போடுவதிலும் காலத்தைக் கழித்துக்கொண்டு வருவது இந்திய தேசத்திற்கே பெரிய மானக்கேடானதும், குடிகளுக்கு அதிகக் கஷ்டம் கொடுக்கக்கூடியதுமான காரியமுமாகும் என்பதை நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

இந்தக் கொடுமையையும், அக்கிரமங்களையும் பொது ஜனங்கள் ஒருவாறு உணர்ந்து விட்டார்கள் என்பதை அறிந்த சர்க்காராரும், ஜனத்தலைவர் ஜனப்பிரதிநிதிகள்என்பவர்களும், பொது ஜனங்களை ஏமாற்ற சிக்கனம்,—சிக்கனமென்ற பல்லவியைப் பாடிக் கொண்டு, ஒரு சிக்கன நாடகத்தை ஆரம்பித்து, பொது ஜனங்கள் கண்களில் மண்ணைப் போட முயற்சித்து வருகின்றார்கள்.

இதுவரை நடந்து வந்த எல்லாப் பித்தலாட்டங்களையும்விட இந்தச் சிக்கனநாடகப்பித்தலாட்டமானது மிகவும் மோசமான பித்தலாட்டம் என்றேசொல்லுவோம்.

ஏனெனில், சர்க்காரார் ஆங்காங்கு சிக்கனம் செய்வதற்காக ஏற்பாடு செய்யும் கமிட்டிக்கு பெரிதும் பெரும் பெரும் சம்பளம் வாங்கிப் பிழைக்கும் உத்தியோகஸ்தர்களையே நியமித்து இருக்கின்றார்கள். அவர்கள் சிக்கனத்தின் பேரால் கூடிக்கூடிப் பேசிவிட்டு 100-க்கு 3 ரூ. 4 ரூ, 6 ரூ. குறைக்கலாம் என்று சொல்லிவிட்டு, பாக்கி போறுதற்கு புதிய வரியைப் போடவேண்டியதுதான் என்னும் முடிவுக்கு அனுகூலமாய் இருக்கப்போகின்றார்கள் என்பதில் நமக்குச் சந்தேகமே இல்லை.

இப்பொழுது தேசம் இருக்கும் நிலைமையில் முதலில் சிக்கனக்கமிட்டி ஏற்படுத்துவதைவிட வரி கொடுப்போரின் நிலைமையை நன்றாய் விசாரித்தறிந்து, அவர்களது தேவைக்குப் போக மீதி எவ்வளவு வரி கொடுக்கக்கூடும் என்பதைக் கண்டறிந்து வரியைக்குறைக்க வேண்டியதே முதல் வேலையாகும். பிறகு அந்த வரி வசூல் கணக்கைப் பார்த்து நிர்வாகச் செலவை ஏற்பாடு செய்யவேண்டியதுதான் இரண்டாவது வேலையாக இருக்கவேண்டும். ஏனெனில் நிலவரி கொடுக்க சக்தி இல்லாமல் மக்கள் திண்டாடுகின்றார்கள்.

ஆனால், காங்கிரசும், தேசியமும், ஜனப்பிரதிநிதித்துவமும் ஏற்பட்ட நாள்முதல் முதலில் செலவைநிர்மாணித்துக் கொண்டு,பிறகு அதற்குத்தகுந்தபடி வரி போடப்படுகின்றது. அதாவது செருப்புக்குத்தகுந்தபடி காலை வளர்க்கப்படுகின்றது. இதற்கு இராஜீகம் என்றோ, நிர்வாகமென்றோ சொல்லுவதைவிட (இராஜீகத்தின் பேரால் அடிக்கப்படும்) பகற் கொள்ளை என்றுதான் சொல்லவேண்டும். இதக் கொள்ளை நாளாவட்டத்தில் ஜனப்பிரதிநிதிகள் என்பவர்கள் சம்மதத்தின்பேரில் போடப்பட்டே வந்திருப்பதால் பொது ஜனங்களும் இந்தக் கஷ்டங்களை உணராமல் முட்டாள்தனமாக வைத்த பாரத்தை யெல்லாம் சுமந்து கொண்டே வந்திருக்கின்றார்கள்.

உதாரணமாகக் காங்கிரசு ஏற்படுவதற்குமுன் இந்த நாட்டு அதாவது, இந்தியாவின்வரியெல்லாம்வெரும் ஐம்பது, அறுபது கோடி ரூபாயாக இருந்ததானது இப்போது150, 160 கோடிரூபாயுகு மேலாகப் போய்விட்டது. இதனால் காங்கிரசு ஏற்படுவதற்கு முன் அன்னக்காவடிகளாய் பிச்சைக்காரக் குடும்பமாய் இருந்தவர்கள் மாதம் 1க்கு 500, 1000, 4000, 5000 ரூபாய் வீதம் சம்பளம் பெறும்படியான வர்களாக யானர்களே யொழிய பொது மக்கள் நிலைமை கஷ்டப்பட்டு உழுது பயிர் செய்பவர்கள் குடும்பநிலைமை சிறிதும் உயர்த்தப்பட்டதாகத் தெரியவில்லை.

உழுது பயிர் செய்கின்றவனுடைய குடும்பத்திற்கு எவ்வளவு தேவையோ அதைவிட 10 மடங்கு முதல் 100 மடங்குவரை அதிகமாக நிர்வாக அதிகாரிகள், சிப்பந்திகள், என்கின்றவர்களுக்குத் தேவை ஏற்பட்டு அதற்குத்தக்கவிதமாக நிர்வாகச் செலவு அதிகப்படுத்தப் பட்டிருக்கின்றது. அதுபோலவே நிர்வாக உத்தியோகங்களும் அதிகப் படுத்தப்பட்டு வந்துவிட்டது.

இந்திய மக்களின் மொத்த சராசரி வரும்படி ஆள் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 0-1-7 என்று கணக்குக்கண்டுபிடித்த பிறகும் பொதுஜன சிப்பந்திகளுக்கு க்கொள்ளை கொள்ளையாய் அதாவது, நாள் ஒன்றுக்கு 1-8-0 ரூபாய் முதல் 150 ரூபாய் வரை அள்ளிக்கொடுப்பதென்றால் இது எவ்வளவு கொடுங் கோன்மையான ஆகி என்பதையும், அயோக்கியத்தனமான ஜனப்பிரதிநிதித்துவம் என்பதையும் நாம் எடுத்துக் காட்ட வேண்டுமா? என்று கேட்கின்றோம்.

நாட்டின் நலத்திற்குப் படித்தவர்கள் என்பவர்கள் எப்பொழுதுமுதல்ஜனப்பிரதிநியாகக்கூடியஅக்கிரம நிலைமைஏற்பட்டதோ அன்று முதலே பாட்டாளிகள் பணம் கொள்ளைபோக மார்க்கம் ஏற்பட்டு விட்டது.

இந்த நிலைமையில் இனி இந்திய மக்கள் இவ்வளவு வரி கொடுப்பதென்பது கண்டிப்பாய் முடியவே முடியாது. பகல் கொள்ளைக்குச் சமமான சுயராஜ்யப் புரட்டில் மக்கள் மூட்டாள்தனமாகச் சிக்குண்டு வரிக் கஷ்டம் அனுபவிப்பதைவிட வரிக் கொடுமையிலிருந்து தப்புவதற்கு முயற்சிப்பதுதான் முதன்மையான வேலையாய்க் கருதவேண்டியிருக்கிறது.

ஆகவே, இனி கண்டிப்பாகப் படித்த கனவான்கள்—உத்தியோகத்திற்கு ஆசைப்படும நபர்கள் ஜனப்பிரதிநிதிகளாவதைவிடப் பாடுபடும் குடியானவர்களே பிரதிநிதிகளாகத்தகுந்த முயற்சி செய்யவேண்டியதுதான் தேசிய வேலையாய்ச்செய்யவேண்டியிருக்கின்றது. இந்த நிலைமை அடையாத இராஜீகம் மக்களுகு இனிபெருத்த கஷ்டமாகத்தான் முடியும்.

நிற்க, இப்போதைய சிக்கனக் கமிட்டிகள் சென்னை, பம்பாய் முதலிய மாகாணங்களில் அந்தந்த மாகாண நிர்வாகத்திற்கு வசூலாகும் வரிப்பணத்தைக்கொண்டு, சரி செய்யும் படி ஏற்பாடுசெய்யவேநியமிக்கப்பட்டும் அவர்களாலும் வரவு செலவு சரிக்கட்டமுடியாமல் கஷ்டப்படுவதாகதெரியவருகின்றது. இதனால்அவர்கள் சிறிதும்நாணயமாய், யோக்கியமாய் வேலைசெய்யவில்லை என்றும் தைரியமாய்ச்சொல்லுவோம்.

ஏனெனில், உத்தியோகங்களை குறைக்கும் வகையில் அவர்கள் சிறிதும் கவலை செலுத்தவே இல்லை. இப்போது சம்பளத்தைக் குறைப்பதைவிட அனுவசிய உத்தியோகங்களைக் குறைத்தால் நிர்வாகத்திற்கு குறைவு படும் துகை சுலபத்தில் மீதியாகிவிடும். பிறகு சம்பளத்தைக் குறைத்தால் வரிப்பளுவை ஜாஸ்தியாய்க்குறைத்து விடலாம்.

உத்தியோகங்களை குறைக்கும் விஷயத்தில் முதலாவது யாதொருகஷ்டமும இல்லாமல் மந்திரிகளையும், நிர்வாகசபை அங்கத்தினர்களையும் இப்போது இருப்பதில் பகுதி ஆக்கிவிடலாம். ஏனெனில் இவர்கள் தங்களை ஜனப்பிரதிநிதிகளே யொழிய, சர்க்காரார் உத்தியோகஸ்தர்கள் அலலவென்றுசொல்லிக்கொள்ளுபவர்கள்.

ரெவினியூ போர்டு ஆபீசை அடியோடு எடுத்துவிடலாம்.

சிவில்இலாகாவிலோஹைகோர்ட்ஜட்ஜுகளில்பகுதியை குறைத்து விடலாம்.

சப் ஜட்ஜுகளையும், முன்சீபுகளையும் மூன்றில் இரண்டுபாகம் குறைத்து விடலாம் இல்லாவிட்டாலும் பகுதியைக்குறைத்துவிடுவதில் எவ்வித குந்தகமும் வராது. அதுபோலவே ரெவினியூ இலாகாவில் டெபுட்டி கலக்டர்கள் என்கின்ற உத்தியோகத்தையே அடியோடு எடுத்து விடலாம்.

டெபுட்டி கலக்டர் உத்தியோகம் வெரும்தபாலாபீசு போலவே தான் இருந்துவருகின்றது. இவர்களுக்கு ஆதியில் இருந்தவேலைகள் எல்லாம் குறைந்தும், சில அடியோடு எடுபட்டும் போய் விட்டன.

1. இன்கம்டாக்ஸ் வேலை இல்லை.

2. ஸ்தல ஸ்தாபன மேல் பார்வை வேலை இல்லை.

3. ரெவினியூவேலை மிக மிக க்குறைந்துவிட்டது. தாசில்தார் இடம் இருந்த மேஜிஸ்ட்ரேட் வேலை எடுட்டுப் போனதால், அவரே எல்லாவேலையும் பார்க்கிறார்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்

4. பெஞ்சு கோர்ட்டுகள் ஏற்பட்டுவிட்டதால், கிரிமினல் வேலையும், அப்பீல் வேலையும் 100-க்கு 80 பாகம் குறைந்து விட்டது. மீதி யிருப்பதற்கும் இப்போது தாசில்தாருக்கு முதல் வகுப்பு மேஜிஸ்ட்ரேட் பவர் இருப்பதால் அவர் பார்த்துக்கொள்ளக்கூடும்.

இன்னும் மற்ற இலாகாக்கள் வேலையும் அதாவது சிவாஜி நாம, என்குரோச்மெண்டு முதலிய வேலைகள் கீழ் அதிகாரிகள் மூலமே முடிவுசெய்யப்பட்டு கடைசி உத்திரவுக்குத்தான் டெபுட்டி கலக்டர் ஆபீசு மூத்திரை போட்டு ஜில்லா கலக்டருக்கு அனுப்பப்படுகின்றது. டெபுட்டி கலக்ட்டருக்கு என்று யாதொரு அசல் (Original) வேலையும் கிடையாது. ஆகவே இந்த உத்தியோகத்தை எடுத்து விட்டு கலக்டருக்கு இன்னமும் ஒரு பெர்சனல் அசிஸ்டெண்ட் அதவும் ஒரு தாசில்தார் யோக்கியதையில் உள்ளவராய் வைத்து விட்டால் இதன் மூலம் அதாவது டெபுட்டிக்கலக்டர்கள்எடுத்துவிடுவதும் அவர்கள் ஆபீசு எடுத்து விடுவதும் ஆகிய வகையில் வருஷம் 1க்கு 3500000 முப்பத்தி ஐந்து லக்ஷரூபாய் மீதியாகக்கூடும்.

பொது ஜனங்களுக்கும் இந்த இலாகாவுக்கு என்று கொடுக்கப்படும் லஞ்சம் சப்ளை வக்கீல் பீசு, பிச்சைக்காசு முதலிய செலவு தொல்லைகள் ஒழியும்.

போலீசு

இதுபோலவே போலீசு இலாகாவிலும், டிப்டி சூப்ரெண்டு என்கின்ற ஒரு சிறிதும் உபயோகமும், பயனுமற்ற உத்தியோகம் ஏடுபட்டு விடத்தகுந்த தாகும். அதற்கும் யாதொரு அசல் வேலையும் கிடையாது.

1. போலீசுகாரர்.
2 ஏட்டு.
3 சப் இன்ஸ்பெக்டர்.
4. சர்க்கிள் இன்ஸ்பெக்டர்.
5. டிப்டி சூப்ரெண்டு.
6. ஜில்லா சூப்ரெண்டு.
7. டிப்டி இன்ஸ்பெக்டர் ஜனரல்.
8. இன்ஸ்பெக்டர் ஜனரல்.
9. கவர்ன்மெண்ட் (போலீசு போர்ட் போலியோ) நிர்வாக சபை மெம்பர்.

இந்தமாதிரி ஒவ்வொரு இலாகாவுக்கு ஒன்பது படிகள் இருக்கின்றன. இதைகவனித்துப்பார்த்தால் நாளைக்கே டிப்டி சூப்ரெண்டுகளை எடுத்து விட்டாலும எவ்வித ஆபத்தும் வந்துவிடாது. இதுவும் அநேகமாய் ஒரு தபாலாபீசே யொழியவேறில்லை. ஆகவே இதை எடுப்பதின் மூலம் இந்த இலாகாவிலும் வருஷம் ஒன்றுக்கு சுமார் பத்துலக்ஷ ரூபாயுக்குக் குறையாமல் மிகுதிப் படுத்தலாம். இப்படியே கலால் இலாகா முதலிய அநேக இலாகாக்களில், இலாகா ஒன்றுக்கு ஒருபடியை மாத்திரம் எடுத்து அதை மேல் கீழ் படிகளுக்கு பங்கிட்டு அமைத்து விட்டால் கோடிக்கணக்கான ரூபாய்கள் மீதப் படுத்தப்பட்டு வரி செலுத்துவோருக்கு உதவியும், நன்மையும் செய்யலாம். முக்கியமாக கல்வி இலாகாவும் மிகுதியும் திருத்தி அமைப்பதின் மூலம் எவ்வளவோ பணத்தை மீதம் செய்து கல்வியை இப்போதையைவிடப் பல மடங்கு அதிகமான நன்மையும், பயனும் படக்கூடியதாகச் செய்யலாம். கல்வி அதிகாரிகளுக்கு க்கொடுக்கும் சம்பளம் கொள்ளை கொள்ளை என்றே சொல்லவேண்டும். அதிகாரிகள் எண்ணிக்கையும் அதிகம். அதுபோலவே உபாத்தியாயர்கள் சம்பளம் இரட்டிப்புக் கொள்ளை என்றுதான் சொல்லுவோம்.

அவசியமான கீழ்தரப் படிப்புச் சொல்லிக்கொடுக்கும் உபாத்தியாயருக்கு 15, 20, 25 ரூபாய் சம்பளம் கொடுத்துவிட்டு, மத்தியதரப் படிப்பு, மேல்தரப் படிப்பு, கலாசாலைப் படிப்பு என்பவற்றிற்கு 70, 80 முதல் 1000 ரூபாய் வரை கொடுப்பது என்றால் இது தீவத்திக் கொள்ளையா? அல்லவா? என்று கேட்கின்றோம்.

உபாத்தியார்களுக்கு இந்தச் சம்பளம் கொடுப்பதால் பிள்ளைகளின் பெற்றோர்களிடம் அதிகச் சம்பளம் வாங்க வேண்டியிருக்கிறது. அதனால் அவர்கள் தங்கள் பிள்ளைகளைப் படிக்கவைக்க முடிவதில்லை.

இப்படி எல்லாம் இருந்தும், இன்று பி. ஏ., எல். டி. பாசு செய்தவன், உபாத்தியாயருக்குத் தகுதி யானவன், 40 ரூபாய் சம்பளத்திற்கும், எம். ஏ., பாசு செய்தவன் 35 ரூபாய் சம்பளத்திற்கும் வரக் கெஞ்சுகின்றான். இப்படியிருக்க இவர்களுக்கு 100 200, 500, 1000 என்பது எவ்வளவு அக்கிரமமானதும் மக்களைப் படிக்கவிடாமல் தடுப்பதுமான தான காரியம் என்பதை யோசித்தால் விளங்காமல் போகாது.

எந்தக் காரணத்தை முன்னிட்டும் சர்க்காராா்நிர்வாக அதிகாரிகளுக்கு மாதம் 1000 ரூபாய் சம்பளத்திற்குமேல் போகக்கூடாது என்று சுயமரியாதை மகாநாடு தீர்மானித்துக்கூட இப்போது அதிகம் என்று தோன்றும்படியாக நாட்டின் நிலைமை அதாவது, உணவுப் பொருள்கள், ஆடைப் பொருள்கள் விலை மிகவும் மலிந்துவிட்டது.

ஆகவே சம்பளத் திட்டத்தில் மனிதன் தேவையை நிர்ணயிக்கும்போது பொது ஜனங்களின் நிலைமை அதாவது 100க்கு 75பேர் கள் இருக்கும் நிலைமை அனுபவிக்கும் சௌகரியநிலைமை ஆகியவைகளைப் பார்த்தேதான் நிர்வாகஸ்தர்களை நிர்ணயித்து சம்பளத் திட்டம் போடப்படவேண்டுமே தவிர கனவு காண்கின்ற நிலைமையை யுத்தேசித்து இந்தியமக்களில்1000க்கு ஒருவன்கூட அனுபவிக்கச் சாத்தியமில்லாத நிலைமைப்படி சம்பளம் போடுவது என்பது யோக்கியமான இராஜரீகமாகாது.

கடைசியாக ஸ்தலஸ்தாபனங்களிலும் ஜனங்கள் வரி கொடுக்கச் சக்தி இல்லாமல் கஷ்டப்படுகின்றார்கள். ஸ்தலஸ்தாபனப் பணமெல்லாம் சிப்பந்திகளும், கன்ராக்டர்களுமே கொள்ளை கொண்டு கல்வி, சுகாதாரம், போக்குவரத்து வசதி முதலியகாரியங்களுக்குப்பணம் போறாமல் திண்டாட வேண்டி இருக்கின்றது. அவைகள்செய்யவேண்டிய அளவும்செய்ய முடியாமல் இருக்கின்றன.

ஆகவே இந்தப்படி வரியும் பலுவாகவும், சரியான பலனும் இல்லாமலும் போனதற்குக் காரணம் அந்த ஸ்தாபனங்கள் 'பொதுஜனப் பிரதிநிதிகள்' என்பவர்கள் கைக்கு வந்ததே யாகும்.

அவர்களுக்குக் கண்டிப்பாய் பொறுப்பே கிடையாது. 100க்கு 90 பேர்கள் கொள்ளையடிப்பவர்களும், கூட்டுக்கொள்ளைக்காரருமே யாவார்கள். சிலர் அனுபவ ஞானமற்றவர்களும், அன்னியர் கை ஆயுதங்களுமாயிருப்பவர்களுமாவார்கள்.

இவர்களால் ஏற்படும் வீண் செலவு, தாக்ஷணியச் செலவு ஆகிய வைகளைக் கழித்துப்பார்த்தாலே 100க்கு 25 வீதம் வரியையும் குறைத்து நல்லவேலையையும் செய்யலாம். தனிகொள்ளையும், கூட்டுக்கொள்ளையும் எடுபட்டால் 100க்கு 50 வீதம் வரி குறைக்கலாம். ஆகவே ஸ்தல ஸ்தாபன தற்கால சுயாக்ஷி முறையை எடுத்துவிட்டு, நிர்வாக அதிகாரி ஒருவரை ஒவ்வொரு ஸ்தல ஸ்தாபனத்திற்கும் போட்டு, வேண்டுமானால் அவர்களுக்கு ஆலோசனை சபை ஏற்படுத்தி நிர்வாக முறையை மாற்றினால் அதிலும் எவ்வளவோ பணம் மீதியாகி மக்களுக்குப் பலன் அதிகமுண்டாகும். இந்தக்காரியங்கள் செய்ய வெள்ளைக்காரர்கள் முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள் என்றுசொல்லி விடமுடியாது. இந்தியர்கள், இந்தியப் பிரதிநிதிகள், இந்திய தேசீய வாதிகள், இந்திய பூரண சுயேச்சை வாதிகள் என்று சொல்லிக் கொள்ளுகின்றவர்கள் உண்மையானவர்களாகவும், யோக்கியமானவர்களாகவும் இருந்தாலுமே போதும். பிறகு வெள்ளைக்காரர்களைப் பார்த்து நாம் "போடு கரணம்" என்றால் அவர்கள் "எண்ணிகொள் போடுகின்றேன்" என்று சொல்லுவார்கள். இப்படிக்கில்லாமல் இப்பொழுதுசிக்கனம், சிக்கனம்என்றுபேசுவதெல்லாம் நமது படித்த மக்கள், "தேசீய" மக்கள் கொள்ளையடிப்பதைக்காப்பாற்றவும், வெள்ளைக்காரன் மேல் மாத்திரம் பழி சொல்லி தப்பித்துக்கொள்ளவும் செய்யும் சூக்ஷியே வேறில்லை.

ஆகவே ஒவ்வொரு மாகாணங்களிலும், அடுத்த சட்டசபை கூடும் கூட்டங்களில் 'சர்க்காராா் நிர்வாகத்தில் ஒரு வெள்ளைக்கார நிர்வாக சபை மெம்பரையும் ஒரு இந்திய நிர்வாக சபை மெம்பரையும், 2 மந்திரிகளையும் தேவை இல்லை' என்று தீர்மானம்கொண்டுவருவதுடன், 'மீதி இருக்கும் நிர்வாக மெம்பர் சம்பளமும், மந்திரி சம்பளமும் தாறுமாறாய் குறைக்கப்படவேண்டும்' என்றும் தீர்மானங்களும் கொண்டு வந்தார்களேயால் பொது ஜனப் பிரதிநிதிகள்என்று சொல்லிக்கொள்ள அருகதை யாவார்கள். பிறகு மற்ற பெரிய சம்பளக்காரர்கள் இந்த வருஷத்திலேயே 100க்கு 50 வீதம் தானாகவே குறைத்துக் கொள்ள வருவார்கள். அதில்லாமல் மற்ற சம்பளங்களில் ஒரு காசு குறைத்தாலும் ஒரு உத்தியோகம் எடுத்தாலும் அது வஞ்சகமும், வஞ்சனையுமாகவுமே கருதப்படும்.

ஏனெனில், கீழ்தர சம்பளக்காரர்கள் தங்களுக்கு சம்பளம் போதவில்லை என்று சொல்லுவதின் காரணமே இதர சிப்பந்திகள், நிர்வாக அதிகாரிகள் ஆகியவர்கள் சம்பளங்களைப் பார்த்தேயொழிய 'சாப்பாட்டுக்குப் போதவில்லை, துணிக்குப் போதவில்லையென்றல்ல' என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன் இதை முடிக்கின்றோம்.

ரோஜா முத்தையா
ஆச்சி நூலக அறக்கட்டளை

மற்றபடி நிர்வாக முறையையும், சம்பளத் திட்டத்தையும் சர்க்காரார் நிலவரித் திட்டத்தையும் பற்றி மற்றொரு சமயம் நமது அபிப்பிராயத்தை வெளியிடுவோம்.

---

## மூன்றுவது மாகாண சுயமரியாதை மகாநாடு.

### விருதுநகர்.

### விளம்பர அதிகாரி தந்தி.

மகாநாட்டின் ஏற்பாடுகளெல்லாம் முடிவு பெற்றன. மகாநாட்டுப்பந்தலில் தனியாக ஒரு தபாலாபீஸ் அமைக்கப்பட்டிருக்கின்றது.

தலைவரை ஐந்து யானைகள் கட்டிய ஒரு சாரட்டு வண்டியில் வைத்து ஊர்வலம் நடத்த ஏற்பாடுசெய்யப்பட்டு வருகின்றது. தலைவர் திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்களுக்கு முனிசிபாலிட்டியாரால் ஒரு உபசாரப்பத்திரம் வசித்துக் கொடுக்கப்படும்.

10,000 பிரதிநிதிகள் வரை வரக்கூடுமென்றே எதிர் பார்க்கப்படுகின்றது.

"காந்தி," "கதர்," "ஹிந்தி" முதலிய இயக்கங்கள் வாலிபர்களால் கண்டிக்கப்படுமென்றும், அது சம்பந்தமாய் பலத்த விவாதங்கள் நடைபெறக் கூடுமென்றும் செய்திகளெட்டுகின்றன.

விஷயாலோசனைக்கமிட்டி 7-8-31 இரவு நடைபெறும். முதல் நாளே பிரதிநிதிகள் விஜயம் செய்ய எதிர் பார்க்கப்படுகின்றது.

## ஈரோடு.

### திரு. நபி பிறந்தநாள் கொண்டாட்டம்.

2-8-31 தேதி இரவு 10 மணிக்கு ஈரோடு ஜண்ணத்துல் பாக்கியாத்மதர்சாவில் வேலூர் மௌலானா மௌல்வி ஷர்புதின் சாயபு அவர்களது தலைமையில் திருமுகமது நபி அவர்கள் பிறந்தநாள் கொண்டாட்டம் நடைபெறும்.

3-8-31 மாலை 5-மணிக்குகடை வீதி அலிசௌக்கில் திரு ஈ. வெ. இராமசாமி தலைமையில் நபி அவர்கள் பிறந்தநாள் கொண்டாட்டப்பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறும். அவ்வயம் மௌலானா மௌல்வி ஷர்புதின்சாயபு அவர்கள பேசுவாகள்.

H. பாகூஷா சாயபு,
செக்ரட்டரி
முஸ்லீம் வாலிபர் சங்கம், ஈரோடு.

## மூன்றுவது சுயமரியாதை மகாநாடு.

### விருதுநகர்.

### வரவேற்பு ஏற்பாடுகள்.

மகாநாட்டு முன் ஏற்பாடுகள் எல்லாம் ஏறக்குறைய முற்றுப் பெற்று விருக்கின்றன. டெலிகேட்டுகளுக்குத்தகுந்த குடிதண்ணீர் குளிபபுத்தண்ணீர் வசதிகளும் செய்யப்பட்டு விட்டன. பிரதிநிதிகளை குளிக்கும் இடங்களுக்குக் கொண்டு சேர்ப்பதற்காக விஷேசக்கார் வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. தனித்தனி ஜாகை வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்வூர் கூத்திரியவித்தியாசாலை உள்ள டபல கலாசாலைகளுக்கும் விடுமுறை விடப்பட்டிருக்கிறது. மாணவர்களுக்கு விஷேசசௌகரியங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மகாநாட்டில் தீர்மானிப்பதற்காகப் பலர் அநேக தீர்மானங்கள் அனுப்பியிருக்கின்றனர். அவைகளில் காங்கிரசை எதிர்த்துப் போராட வேண்டுமென்ற தீர்மானம் மிகவும் முக்கியமானது. அத்துடன் திருச்சி ஜில்லா பிரதிநிதி ஒருவர் ஆதிதிராவிடர்களெல்லாம் இஸ்லாம் மதத்தைத் தழுவி வருவதை சுயமரியாதை இயக்கம் ஆதரிக்க வேண்டுமென்று ஓர் தீர்மானம் அனுப்பியிருக்கிறார்கள்.

பெண்கள் மகாநாட்டுத்தலைவி திருமதி இந்திராணி பாலசுப்பிரமணியம் அவர்கள் 7-8-31 மாலையிலேயே இவ்விடம்வந்துசேர்ந்து விடுகிறார்கள். எல்லா மகாநாட்டுகாரியக் கமிட்டிக்கூட்டமும் விஷயாலோசனைக் கமிட்டிக்கூட்டமும் 7-8-31 இரவு நடைபெறும் என்று தெரிகிறதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## சித்தோடு.

2-8-31 தேதி மாலை 5மணிக்கு சித்தோடு சீர்திருத்தச் சங்கத்தினரவில் கோவை திரு. வி. எஸ். செங்கோட்டையா அவர்கள்தலைமையில் திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் "சீர்திருத்தம்" என்னும் பொருள்பற்றி ஒரு சொற்பொழிவாற்றுவார்.

---

## இரண்டாவது மாதர் மகாநாடு.

### விருது நகர்.

நமது இரண்டாவது சுயமரியாதை மாதர் மகாநாடு 1931வது ஆகஸ்ட்மீ 8உ சனிகிழமை மாலை விருதுநகர் சமதர்ம மண்டபத்தில் திருமதி இந்திராணி பாலசுப்பிரமணியம் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெறும் மகாநாட்டு முன் ஏற்பாடுகள் எல்லாம் முற்றுப பெற்றுவிட்டன. மகாநாட்டில் மாதர்களின் முன்னேற்ற விஷயமான பல முக்கிய பிரச்சினைகள் ஆலோசனைக்கு வரும். நமது மகாநாட்டுத்தலைவி அவர்கள் 7-8-31 வெள்ளிக்கிழமை மாலையிலேயே இவ்விடம் விஜயம் செய்கிறார்கள். நம துவிஷயாலோசனைக் கமிட்டிக்கூட்டமும் அன்று இரவு நடைபெறும். எல்லாடபிரதிநிதிகளும் விஜயம் செய்ய விரும்புகிறேன். மகாநாட்டு டெலிகேட்டுகளுக்குக்கட்டணம் இன்றி சாப்பாடும் இலவசமாய் அளிக்கப்படும்.

பத்மாவதி திருவண்ணுமலை
உபசரணைக் கமிட்டித்தலைவி.

---

## சுயமரியாதை இளைஞர் மகாநாடு.

### விருதுநகர்.

நமது மாகாண சுயமரியாதை இளைஞர் மகாநாடு 1931வது ஆகஸ்ட்மீ 9ந்தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை திருவனந்தபுரம் சட்டசபை அங்கத்தினர் திருவாளர் K. நாராயணப்பெருமாள் B. A. M. L. C. அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெறும் மகாநாட்டின் முன்னேற்பாடுகள்எல்லாம்முற்றுப்பெற்றுவிட்டனமகாநாட்டில் நமது இயக்கத்திற்கும் காங்கிரசுக்கும் உள்ள சம்பந்தம் என்ன என்பது போன்ற முக்கிய பிரச்சினைகள் விவாதத்திற்கு வரும். ஆகையால் எல்லா வாலிபர்களும் தவறாது மகாநாட்டிற்கு விஜயம்செய்யவேண்டுகிறேன்.

அன்புள்ள,
ஜெயராம் B. A.
உபசரணைக்கமிட்டித்தலைவர்.

---

## தஞ்சாவூர்.

### மதமாற்றம்.

இந்து ஆதிதிராவிட வகுப்பைச்சேர்ந்த நிசர்வ்போலீஸ்கான்ஸ்டேபிள் குருகிருஷ்ணன் என்னும் பெயருடையவர் தனது இந்துமதத்திற்கு 'மனிதனை மனிதனுப் வாழவைக்கும் சக்தி இல்லை'யெனஉணர்ந்துதமது 28 வது வயதில் 18-7-31 ல் இஸ்லாம் மதத்தைத் தழுவி மனித சுதந்திரத்தைப்பெற்றுவிட்டார். அவருக்கு மகமத்தாஜ்டீன் சாயபு எனப்பெயர்வைக்கப்பட்டதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## திருப்பூர் டி. மு. கோர்ட்டில்

O. S. No. 623 of 193.
I. A. No. 1034 of 1931.
I. A. No. 1035 of 1931.

பல்லடம் தாலூக்கா காங்கயம் பாளையம் செல்லாண்டியம்மன் கோவில் பூசாரிகளுக்காக ஷெயூரில் இருக்கும் சாமி ஆண்டிமகன் செல்லாண்டி—வாதி.

ஷெயூரில் இருக்கும் பொது ஜனங்களால் வாதி வகையராவுக்கு எதிர் கட்சியைச் சேர்ந்தவர்களுக்காக ஷெபார்களை Represent செய்யும் ஷெயூர் அய்யாக்கவுண்டன் மகன் சுப்பணகவுண்டன்-1. ஷெயூர் பெரிச்சிகவுண்டன் தோட்டம் பழனிக்கவுண்டன் மகன் சுப்பணகவுண்டன்-2. ஷெயூர் கருங்காடு காளியப்பகவுண்டன் மகன் சென்னிமலைக்கவுண்டன் 3. ஷெயூர் கவுண்டப்பகவுண்டன் மகன் தேவணகவுண்டன்-4 கலங்கலிலிருந்து வந்திருக்கும் பழனி ஆண்டிமகன் ஷண்முக ஆண்டி-5—பிரதிவாதிகள்.

இதனால் சகல மானவருக்கும் தெரிவிப்பதாவது:—ஷெ வாதி என்பவர் ஷெ காங்கயம் பாளையம்செல்லாண்டியம்மன் கோவில் பூசாரிகளுக்காகவும் அவர்களை ரெப்ரெசண்ட் செய்யவும் ஷெயூர் பொது ஜனங்களால் வாதி வகையராவுக்கு எதிர் கட்சிக்காரர்களை Represnt செய்யவும் பிரதிவாதிகள் பேரில் வாதி தாவா செய்து அதுவும் இக்கோர்ட்டில் 1931 ஆகஸ்டுமீ 21ந்தேதி வாய்தா ஏற்பட்டிருக்கிறது. யாருக்காவது எதாவது ஆட்சேபனையிருந்தால் அதை ஷெ கோர்ட்டில் ஷெ வாய்தாவில் காலை 11மணிக்கு நேரில் அல்லது ஒரு வக்கீல் மூலியமாகவாவது தெரிவித்துக்கொள்ள வேண்டியது.

திருப்பூர் 31-7-31 } S. ராஜம் அய்யர், வாதி வக்கீல்.

---

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

(10ம் பக்கத் தொடர்ச்சி)

டிப்பார்ப்போமேயானால் அநேக விஷயங்களில் இந்து மதத்தைவிட (கொள்கைகளைவிட) இஸ்லாம் மதமே (கொள்கைகளே) மேன்மையான தென்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இஸ்லாமானவர்களிடத்தில் இந்துக்களிடம்இல்லாதபலகல்லகொள்கைகள்இருக்கின்றன. அதனால் இந்து மதத்தில் இல்லாதனவைகள் இஸ்லாம் மதத்தில் இருப்பதாகத்தான் கருத வேண்டும். அதாவது'

இஸ்லாம் மக்களிடத்தில் தங்களுக்குள் சமத்துவம், சகோதரத்துவம் ஒற்றுமை அன்பு முதலிய குணங்கள் இருக்கின்றன. வீரம் இருக்கின்றது. வீரம் என்றால் இலக்கியத்திற்கு உயிரைவிடத்துணிவது என்பதுதான். இஸ்லாம்மதத்தில்ஜாதிஉயர்வு-தாழ்வு இல்லை அவர்களுக்குள் தீண்டாதவன் இல்லை. கிட்ட இருந்து சாப்பிடக் கூடாதவன் இல்லை. அவர்களது தெருவில் நடக்கக்கூடாத மனிதன்-குளத்தில் இறங்கக்கூடாதமனிதன்-கோவிலுக்குள் புகக்கூடாதமனிதன் இல்லை. இதை போக்கியமான இந்துக்கள் ஒப்புக்கொண்டேதான் ஆகவேண்டும்.

இஸ்லாம் மார்க்கக் கடவுளுக்கு ரூபம் கல்பித்து எனவுதிலை. அதற்குப்பெண்டு பிள்ளை வைப்பாட்டி கல்பிப்பதுமில்லை. அதற்குப் பூஜை நைவேத்தியம் உற்சவம் நகை துணிமணி முதலியவற்றிற்குக் கோடிக்கணக்கான பணங்களைச்செலவுசெய்வதில்லை. மற்றும் அவர்களது பெண்களுக்கு சொத்துரிமை கல்யாண ரத்து விதவை மணம் ஆகிய வைகளும் உண்டு. அவர்களுக்குள் அன்பையும் வீரத்தையும பார்த்து நாம் அவர்களை மூறடர்கள் என்கின்றோம். அதுபோலவே இந்துக்களுக்குள் ஒருவருக்கொருவர் உள்ள துவேஷத்தையும் பயங்காளித்தனத்தையும் நாம் பார்த்து அவற்றை நாம் சாதுத்தன்மை என்று சொல்லிக்கொள்ளுகிறோம். ஒரு கிராமத்தில் ஒரு இஸ்லாமானவனை ஒரு இந்து அடித்தால் 100 இஸ்லாமான வாகள் வந்துவிழுந்துவிடுகின்றார்கள். இதைத்தான் நாம் முறடத்தனம் என்கின்றோம். ஒரு இந்துவை ஒரு இஸ்லாமானவன் அடித்தால் மற்ற இந்துக்கள், 'அவன் யாரோ அடிபடுகிறான், நமக்கென்ன கவலை'யென்று சொல்லி சுமமா இருந்து விடுகிறார்கள். இல்லாவிட்டால்அடிக்குப்பயந்து கொள்ளுகிறார்கள். இதைத்தான் சாதுத்தனம் என்று பெருமை பேசிக் கொளளுகிறோம். அன்பும் சகோதரத்தன்மையும் இந்துவிடம் எங்கிருக்கின்றது? 'ஆடுகோழி தின்னுதே' என்று சொல்லுவதில் மாததிரம் இருக்கின்றது. மக்களை இழிவாய்க் கருதுவது பிறவியிற்பேரால் தாழ்த்தி இழிப்பது கொடுமைப்படுத்துவது ஆகிய காரியங்களைச் செய்து கொண்டிருப்பவனதான் 'அன்பு!! ஜீவகாருண்யம்!!! என்றுபேசுகிறான்.' அன்பின் உண்மையை அறியவே இல்லை. இல்லாம் கொள்கையில் வேறு எந்த மதத்திலும் எந்த மதத்திலும் சமூக வாழ்விலும், 'ஆண்டவன்' முன்னிலை என்பதிலும் மனிதனே மனிதனுக்குக் கருதப்படுகின்றது.

இந்துக்கொள்கையில் வேறு எந்த ஒற்றுமையாய் இருந்தாலும் சமூக வாழ்விலும் 'கடவுன்' முன்னிலையிலும் மனிதனை மிருகத்தைவிட மலத்தை வாயில் கொளவிக்கொண்டு செல்லும்மிருகத்தைவிட கேவலமாய் மதிக்கப்படுகின்றது. இதைதான் பிரத்தியகூத்தில் காண்கின்றோம். இதைத்தான் சமத்துவ சோக்கம் கொண்ட மதம் என்று இந்துக்கள் இன்னும் இன்னமும் சொல்லுகிறார்கள்.

'மொண்டி முடம் கூன் குருடு ஆகியவர்களுக்கே உதவி செய்' என்று இஸ்லாம் மதப் பிரத்தியகூத்தில் சொல்லுகின்றது. 'சோம்பேரிகளுக்கே-ஊழார் உழைப்பில் உண்டு களிப்பவர்க்கே உதவிசெய்' என்று இந்துக்களின் கொள்கை பிரத்தியகூத்தில் சொல்லுகின்றது.

இஸ்லாம் கொள்கை மக்களை ஒன்றுசேர்க்கின்றது. இந்தியாவில் கொஞ்சகாலத்திற்கு முன் ஒரு கோடியைவிட குறைந்த எண்ணிக்கையுள்ள முஸ்லீம்கள் இன்று 8 கோடி மக்களாய் சேர்ந்து இருக்கின்றார்கள். இன்றும் யாவரையும் எப்படிப்பட்ட இழிஜானவர் என்று இந்து மார்க்கத்தாரால் கருதப்பட்டவர்களையும் தனக்குள் சேர்த்துக்கொள்ள தயாராயிருக்கின்றது. இந்துக்களின்கொள்கைப் படிப்பட்டமேலானவர்கள் என்றுமதிக்கப்பட்டவனையும் உன்னோடு மறத்து வாசல்படியில் காவல்காக்கின்றது. தன்னையனையும் வெளியில்பிடித்துத் தள்ளுகின்றது.

கள்ளுடிப்பைப்பற்றி வாய்த் தப்பட்டை அடிக்காத இஸ்லாம் கொள்கை முஸ்லீம்களில் 100க்கு 99 பேர்களை குடியிலிருந்து விலக்கியிருக்கின்றது. குடிக்கக் கூடாதென்று சதா வாயில் தப்பட்டை அடித்துக் கொண்டு ஓட்டு வேண்டியபோது கள்ளுக்கடையில் நின்றுமறியல்செய்யும்இந்துகொள்கையானது இந்துக்களில் 100க்கு 51 பேர்களுக்கு மேல் குடிகாரர்களாச்செய்திருப்பதோடு இந்து கடவுளுக்கும் குடி வகைகள்வைத்து கோயில்களில் பெரிய பெரிய ஜாதியார்களின் (பூசாரிகள்) என்பவர்களால் நைவேத்தியம்செய்து பிரசாதமாய் சாப்பிடப்படுகின்றது.

இஸ்லாம் கொள்கையை வலியுறுத்துகின்ற காரணத்தாலேயே இஸ்லாமிபர்கள் அதிகமாயுள்ள நாடுகள் இஸ்லாம் அரசர்களால் ஆளப்படுகின்றன. இந்து கொள்கையை வலியுறுத்துகின்ற காரணத்தாலேயே இந்தியர் அதிகமாயுள்ளநாட்டை 'அன்னியர்கள்' ஆளுகின்றார்கள்.

இத்தப்படியாக வெளிப்படையாய் தினதோரியும் கொள்கைகளாலேயே இந்துக் கொள்கைகளைவிட இஸ்லாம் கொள்கைகள் எவ்வளவோ மேன்மையான பலன் கொடுத்திருப்பதை யாரும் மறுக்க முடியாது. இத்தப்படிதான் சொல்லுவதற்காக சோபிக்கும் சகோதரர்கள் முதலில் தான் சொல்லுவது உண்மையா? அல்லது அடிபோடி பொய்யா? என்று பார்த்துப் பிறகு பேசுகள். பிறகு 'கொள்கைக்காக உயிரை விடுங்கள்'

ஏன் சொல்லுகிறேன்.

ஆதிதிராவிடர்களைநான் 'இஸ்லாம் கொள்கையைத் தழுவுங்கள்' என்று கொன்னதற்காக அநேகம் பேர் என்மீது கோபித்துக்கொண்டார்கள். அவர்களுக்குச்சொந்த அறிவுமில்லை, சொல்வதையும் கிரகிக்கும் சக்தியுமில்லை, சிலருக்குருத்தங்கள் மேன்மை போய்விடுமே, தங்களுக்கு அடிமைகள் இல்லாமல் போய்விடுமே என்கின்ற சுயநல எண்ணம் என்னை நான் கருதிவிட்டேன். எதினாலில் 'மோட்சம் அடைவதற்காக வென்று நான்ஆதிதிராவிடர்களை இஸ்லாம்கொள்கையைத்தழுவுங்கள் என்றுசொல்லவில்லை, அல்லது 'ஆத்மார்த்தத்திற்கோ' 'கடவுளை அறிவதற்கோ' நான் அப்படிச்சொல்லவில்லை. ஆதிதிராவிடர்களின் தீண்டாமையைப் போக்குவதற்கு சட்டம் செய்வது, சத்தியாக்கிரஹம் செய்வது முதலியவைபோலவே இஸ்லாம் கொள்கையைத் தழுவுவது என்பதும் ஒரு வழி என்றே சொன்னேன். இனியும் சொல்லுகின்றேன்.

சட்டம் செய்வது கஷ்டம். செய்தாலும் அமுலில் வருவதும் கஷ்டம். சத்தியாக்கிரகம் செய்வதும் கஷ்டம் செய்தாலும் வெற்றி பெறுவதும் சந்தேகம். இயற்றுல்துன்பமும், தோல்வியுமிடைத்தாலும்மிடைக்கலாம். ஆனால்ஆதிதிராவிடர்களுக்குஇஸ்லாம்கொள்கையைஎற்றுகொண்டேன்என்று சொல்லுதில் என்ன கஷ்டம்? அதில் தோல்வியோ துன்பமோ எதாவது உண்டா? அல்லது அன்னியருக்கு எதாவது கஷ்டம் உண்டா? அவன் ஆஸ்திகளைப் இருந்தால்என்ன? காஸ்தீகளைப் இருந்தால் என்ன? உண்மை இஸ்லாம் ஆனால் என்ன? பொய்இஸ்லாம் ஆனாலென்ன? யாருக்கும் எவ்வித கஷ்டமும் இல்லாமல் வேண்டுமானால் எகவீதமனமாறுதல்கூட இல்லாமல் தன்னுடைய இழிவையும் கஷ்டத்தையும் விலக்கிக்கொள்ள ஆசையும் அனுசரமும்பட்ட ஒரு மனிதன் தான் மாலை 5-மணிக்கு இஸ்லாம் கொள்கையை எற்றுக்கொண்ட தாய்ச்சொல்லி5-30 மணிக்கு 'தீண்டாதவன்' என்கின்ற இழிவிலிருந்து மீண்டு தெருவில் நடக்க உரிமை பெற்று மனிதனுவதில் என்மற்றவர்கள் ஆசேபிக்கவேண்டும்? என்பது எனக்கு விளக்கவில்லை. மேலும் வயிற்றுச்சோற்றுக்காக 100க்கு90 மக்கள் என்னென்னமோ அவரவர்களாலேயே இழிவான குற்றமான காரியம் என்று சொல்லப்படுவதை எல்லாம் செய்கின்றார்கள். அப்படி இருக்க இதில் என்ன இழிவோ குற்றமோ இருக்கின்றது என்று கேட்கின்றேன். உலகில் மதங்கள் அடியோடு ஒழிக்கப்படும் போது இல்லாம்மதமும் ஒழியும். அதுபோது இந்த ஆதிதிராவிடர்கள் எற்றுக்கொண்டதும் ஒழிந்துபோகுமேதவிர அது மாத்திரம் நிலைத்து விடாது. அதற்காக அதிகக்கஷ்டமும் இல்லை. ஆகையால் எது எப்படியானாலும் தீண்டாமை ஒழியவேண்டுமென்றால் தீண்டாதார் எனப்படுபவர்கள் இஸ்லாம் கொள்கையைத்தழுவ வேண்டியது என்பது ஒரு வழியேயாகும்.

ஏன்கிறிஸ்து மதத்தைத்தழுவக்கூடாது? ஜனியசமாஜத்தைதழுவக்கூடாது? என்று கேட்கலாம். கிறிஸ்துமதக்கொள்கைகள் புஸ்தகத்தில் எப்படியிருக்கின்றது என்பது பற்றி நான் சொல்லவரவில்லை. பிரத்தியட்சத்தில் பறக்கிறிஸ்துவன், பார்ப்பாரக் கிறிஸ்துவன், வேளாளக் கிறிஸ்துவன், காயுகி கிறிஸ்துவன், கைக்கோளக்கிறிஸ்துவன், நாடார் கிறிஸ்துவன் என்பதாகத்தமிழ்நாடு முழுவதும் இருப்பதைப் பார்த்து வருகின்றோம்.

இஸ்லாம் மார்க்கத்தில் பார்ப்பார முஸ்லீம், பறமுஸ்லீம், காயுகிமுஸ்லீம், நாடார்முஸ்லீம் என இருக்கின்றதா? என்று கேட்கிறேன்.

இதுகுள்ள கிறிஸ்துசகோதரர்கள் கோபித்துக்கொள்ளக்கூடாது. வேண்மானால் வெட்கப்படுகள் என்று வணக்கமாக தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆரியசமாஜம் என்பதும் ஒருவேஷமேதான். அதுவும் பயன் அளிக்கவில்லை.

உதாரணமாக லக்கும் சத்தியாக்கிரகத்தில் ஆரிய சமாஜத்தியர்களும்கிறிஸ்துவப்புலையர்களும் தெருவில் நடக்கவிடவில்லை. இஸ்லாமானவன் தாராளமாய் விடப்பட்டான். பாலக்காட்டிலும் அப்படியே நடந்தது. ஒருவன் பாலக்காட்டில் ஒரு ஆசாரமான என்ற இழிவுபடுத்தப்பட்ட ஜாதியிலிருந்த தீண்டாதவன் ஒருவன இஸ்லாமாகி நடக்கப்பட்டத் தெருவழியாகப் போனான். அப்போது அவனை ஜவுளிக்கடைப்பார்ப்பனரும் வெறுமலம் கடை நாயரும் எதருவுக்கு வந்து

நின்று பார்த்தார்கள். உடனே அங்கு இருந்த ஒருமாப்பிள்ளை (இல்லாமானகல்) 'என்னடா? பன்னிக்கூத்தச்சி மகனே அவனை நோக்குன்னு" என்று கேட்டான்.

அதாவது "என்னடா? பன்றி தேவடியா மகனே! அவனைப்பார்க்கிறாய்" என்று கேட்டான். சொல்லி முடிக்கு முன்னே இல்லாம் சிரித்துக்கொண்டே போனான். பார்ப்பனனும் நாயரும் தலைகுனிந்து கொண்டார்கள். இது பிரத்தியட்சத்தில் நடந்த சம்பவம்--சந்தேகமில்லாமல் இனியும் நடக்கக்கூடிய சம்பவம்.

ஆகவே இல்லாம் மார்க்கம் செய்கின்ற கல்வியை இந்து மார்க்கம் செய்கிறதைவிட அதிகமா? இல்லையா? என்று பாருங்கள்.

ஆனால் நான் இல்லாம் சமூகக் கொள்கைகள் முழுவதையும் ஒப்புக்கொண்டதாகவோ அவைகள் எல்லாம் சுயமரியாதைக் கொள்கைகள் என்று சொல்லுவதாகவோ யாரும் தீர்மானித்து விடாதீர்கள். அதிலும் பல விரோதமான கொள்கைளை ப்பார்க்கிறேன். இந்து மார்க்கத்தில் எனக்கு எதை எதை குருட்டு நம்பிக்கை மூடப்பழக்கம் பாமரத்தன்மை என்கின்றோமோ அவைபோன்றசில நடவடிக்கை இல்லாம் சமூகத்திலும் பலர் செய்து வருவதைப் பார்க்கின்றோம். சமாது வணக்கம் பூஜை நைவேத்தியம் முதலியவைகள் இல்லாம் சமூகத்திலும் இருக்கின்றன. மாரியம்மன் கொண்டாட்டம் போல் இல்லாம் சமூகத்திலும் அல்லாசாமி பண்டிகை நடக்கின்றது. மற்றும்காகூர்முதலிய 'ஸ்தலவிவேஷங்களுக்கும்தனக்கூதிமிதிமுதலிய உற்சவங்களும் கொடைபெறுகின்றன. இவைகள் குர்ஆனில்இருக்கின்றதா? இல்லையா? என்பது கேள்வியல்ல. சமூகத்தில் பிரத்தியட்சத்தில் நடக்கின்றதா? இல்லையா? என்பது தான்கேள்வி. ஒருசமயம் கலோமுலைத்தது போல்புதிதாகதோன்றினையாகவுமிருக்கலாம். சாவகாசதோஷத்தால் ஏற்பட்டவைகளாகவும் இருக்கலாம். ஆனால் இவைகள் ஒழிக்கப்பட்டபிறகு தான் வந்த சமூகமும் தங்களிடம் மூடக்கொள்கைகள் இல்லை என்று பெருமை பேசிக்கொள்ள முடியும். ஆனால் ஒரு விசேஷம். சென்ற வருஷம் ஈரோடு அல்லாசாமி பண்டிகை வைப்பற்றி ஈரோடுகூட்டத்தில் கான்ஸ்டிதுப்பேசினேன். எனதுஈரோ டுசுயமரியாதை சகோதரர்கள் அதற்கு சிறிதுகோபித்துக்கொள்ளாமல் வெட்கப்பட்டார்கள். அதன்பயன் இந்த வருஷம் அடியோடு அந்தப்பண்டிகை அங்கு நின்றுவிட்டது எனக்கு மிக சந்தோஷம். கோபித்துக்கொண்டிருந்தால் இந்த மாறுதலும் நடத்தியிருப்பார்கள். ஆனால் இந்து மார்க்கத்திலோ எனதுடைய ஆதிக்கத்தில் இருப்பதுபோல பிரத்தியாருக்கு காணப்பட்ட சில உற்சவங்களை நிறுத்த எற்பாடு செய்தேன். கடைசியாக அது இந்த இரண்டு வருடமாய் என்னால் நடத்தப்படுவதாகக்காணப்பட்டு வந்ததைவிட பலமடங்குமேலாக நடத்தப்பட்டுவிட்டது. இத்தக்கூட்டத்தார்தான்தங்களை மேலான மதக்காரர் என்றும் தேசியவாதிகள் என்றும் பகுத்தறிவுக்காரர்கள் என்றும் சொல்லிக்கொள்ளுகின்றார்கள்.

அதோடு மாத்திரமல்லாமல் எம்மீது கோபித்துக்கொண்டு பாமர மக்களைத்தூண்டி விட்டு வையும்படியும் 'சாபம்' கொடுக்கும்படியும் செய்தார்கள். இதன் பயனாகவேஇந்தத்தடவை நாட்டில் எனக்கு ஒரு பஞ்சாயத்து கோர்ட்டு மெம்பர் தேர்தலுக்குக்கூட ஓட்டு கிடைக்காது. அது எப்படியோ போகட்டும். உலகமெல்லாம்ஒரு கொள்கையின் கீழ்வரவேண்டுமானால் இல்லாம் கொள்கையும் இணைந்து வரத்தயாராயிருக்கவேண்டும். உலகம் சீர்திருத்தத்திற்கு அடிமைப்பட்டது என்பதை மதந்தூண்டாதீர்கள். மனித சமூகம் அடையவேண்டிய சீர்திருத்தம் இன்னமும் எவ்வளவோ இருக்கின்றது என்பது உறுதி.

மனிதன் காலதேசவர்த்தமானத்திற்கு கட்டுப்பட்டவனுவான். மனிதனது மார்க்கமோ கொள்கையோகூட அதில்பட்டதேயாகும். ஏனென்றால் மார்க்கம் என்பது மனிதன் வாழ்க்கைக்கு வழிகாட்டி என்பதைத்தான் சொல்லுகின்றேன். வழி என்பது அடிக்கடி மாறக்கூடியதேயாகும். காண்டை வழி, ஆடு, கழுதை, குதிரைமூலம் செல்லும் வழி, கட்டை வண்டிவழி, மோட்டார்வழி, ரயில் வழி, ஓடம் கட்டப் வழி, கடைசியாக ஆகாயவிமானவழி ஆகிய ஒவ்வொரு காலத்திற்கு தகுந்ததுபோல் வழி திருத்தப்படவேண்டும். அதுபோல வேமனிதவாழ்க்கை வழியும் காலத்தின்கோலமாய் தோத்தின் தன்மையாய் சந்தர்ப்பத்தின் அகதியமாய் மாறியே தீரவேண்டும் என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். மாறுதலுக்கு இடம்கொடுக்கும் என்கின்றமார்க்கமே சரியான மார்க்கம்.

உதாரணமாக இல்லாம் மார்க்கத்தை எடுத்துக்கொண்டாலும் திருக்கி இல்லாம் சமூகத்தின் நடவடிக்கையும், ஷரீஆனின்தான் சமூக நடவடிக்கையும் இந்தியா இல்லாம் சமூக நடவடிக்கையும் ஒன்று என்று சொல்லிவிட முடியாது. இந்தியாவிலேயே ஈரோட்டுக்கும் தஞ்சைக்கும் சாத்தங்குளத்திற்குமே அனேக விதநிவாசம் காணப்படுகின்றது. இதைவிட மூன்றும் ஒன்றுபடும்போது யாராவது இருவரோ அல்லது மூன்று பேரும் ஆளுக்குக் கொஞ்சமோ தங்கள் பழக்க வழக்கங்களை நம்பிக்கைகளை மாற்றிக்கொள்ளத்தான் வேண்டும். நான் சொல்லும்மாற்றமெல்லாம் முக்கியமாய் நடை உடை பாவனையைப்பொருத்ததேயாகும். மனமாற்றத்தைப்பற்றி இப்போது சொல்ல வரவில்லை. அவை அவரவர்கள்சொந்த சொத்து. மற்றவர்களுக்குத்தன்மோ தொல்லையோ இல்லாத வழியில் எவ்வித அபிப்பிராயத்தையும் கொள்ள யாருக்கும் உரிமையுண்டு.

(9ம் பக்கத் தொடர்ச்சி)

ஆர். கே. ஷண்முகம் அவர்களைப்பற்றி எதோன்றும் கூறுவதற்கில்லை மீறிக்கூறுதல்மிகைபடக்கூறுதல்என்பதோடு கொல்லன் தெருவில் ஊசி விற்ற கதையாகும். மற்றபடி சுயமரியாதைமகாநாட்டை ஒட்டி முதலியாரவிபர் மகாநாடும், பெண்கள் மகாநாடும் நடைபெறப் போவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

வாலிபர் உள்ளத்தில் சுயமரியாதையுணர்ச்சி உண்டாகவேண்டியது மிகவும் அவசியமென்பதைநாண்டு சுட்டிக்காட்டவேண்டியதில்லை. எதிர்காலத்தந்தையர்களாகப் போகும் வாலிபர் உலகம் அஞ்ஞானத்தில் ஆழ்ந்திருப்பின் நமது இந்திய சமூகம் எக்காலத்தில் ஈடேறப் போகின்றது? வாலிப உலகம் உணர்ச்சி பெற்று விளங்குமேயானால் உலகம் தம் பழம் மூட்டைகளை க்கட்டி வாலாட்ட முடியுமா? இதோ தம் எழுச்சியாலன்றோ மற்ற நாடுகள் யாவும் அதிவிரைவில் முன்னேற்றமடைந்து இன்று நாம் ஆச்சரியப்படும் நிலையில் மேல் நோக்கிச்செல்லுகின்றன.

இனி பெண் மக்களைப்பற்றியோ வெகுநாள்பேசவேண்டியதில்லை. நமது பெண்மக்களின் நிலைமை மனிதவாழ்க்கையாகமதிக்கப்படுவதற்கில்லை. அவர்தம்நிலைமையைப்பற்றி எவ்வாறுவிளக்குவதென்பதே புலப்படவேயில்லை. சுருக்கமாகக் கூறவேண்டுமானால், நமது நாட்டில் பெண்மக்கள், உயிரற்ற பிணங்களிலும் கீழாகவே மதிக்கப்படுகின்றார்கள் எந்தவகையிலும் ஆண்மக்களின் கொடுமைகளுக்குள்ளாக்கப்பட்ட கூட்டம், பெண் மக்கள் கூட்டமேயாகும். சுயநலங் காரணமாகப் பெண்ணுலகிற்கு ஆணுலகம் இழைத்த அநீதி அளவிடக்கூடியதன்று. ஆனால், பெண்ணுலகை அமைத்த ஆணுலகம் அடைந்த நலனும் ஒன்றுமில்லை. நிற்க, ஆண்மக்களின் சூது அறியாத பெண்மணிகள் ஆவர்களிட்டசட்டத்திற்காளான நிலை ஆச்சரியப்படத்தக்கதும் ஒன்றுமில்லை. பெண்மக்களின் உள்ளத்தில் சுதந்தர ஊற்றுகண்டு விட்டால் ஆண்மக்களின் சுயநலம் யாவும் ஆற்றில் கரைத்த புளியாகிவிடும். இதுபற்றியே தற்போது ஆண்மக்களில் சிலர், பெண்மக்கள் முன்னேற்றத்தில் முட்டுக்கட்டையாய் நிற்கின்றனர். ஆனால், இனி எவர் என்ன முட்டுக்கட்டையாய் நின்றபோதிலும் பெண்மக்களை அடிமைகொள்ளும் தர்மம் பலிக்கப்போவது இல்லவே இல்லை; என உறுதி கூறுகிறேன். சிறிது கண்விழிப்புற்ற பெண்மணிகள் கல்விகற்றமாதரசிகள், தம் சமூகத்தை இனி அநியாயமைக்குவிடமாட்டார்களென்பதை சுயநலச் சகோதரர்கள் உணருமாறு வேண்டுகிறேன். எங்கும் சுதந்தர தாகம் பொங்கி யெழும் இக்காலத்தில் எம் சமூகமட்டும் பிறந்தில் வாழ யாங்கள் எவ்வாறு ஒருப்படுவோம்? எனவே எம்மடிமைத்தனம்நீங்கி இன்பச் சுதந்தரம் அடைய யாங்கள் உயிரைத் தரும் பாய் மதித்துப் போராடாத வாளாவிருப்போமா? அருமைச் சகோதரிகளே! நமதுமுன்னேற்றத்திற்கு ஆண் மக்கள் உதவிவேண்டியதே யெனினும், பெண் மக்களாகியநமது உழைப்பு இன்றேல் நாம் கோரும் விடுதலை விரைவில் கிட்டுமா? எனதை சற்றே தயவு செய்து யோசித்துப்பார்க்கும்படி வேண்டுகிறேன். மேலும் பல விஷயங்கள் நம்மைச் சார்ந்ததாகவே காணப்படுகின்ற தன்றோ? நமக்குள் ஒற்றுமையும், ஊக்கமும் இன்றி நாம் ஆண்மக்களுடன் போராட முடியுமா?

சீர்திருத்தத்தை எதிர்கொண்டழைக்கும் சீமாட்டிகளே! நம் சமூகத்தில் நிரம்பியுள்ள மூட நம்பிக்கைகள் எண்ணிக்தொலையுமா? எழுதித் தீருமா? மூடநம்பிக்கையில் உள்ளம் ஊறிய தன் பயனன்றோ அடிமை வாழ்க்கையில் அமிழுமபடி சேரிட்டது ஆண மக்கள் புரிந்த கொடுமைகளை அன்பாய்ஏற்ற இப்போதும் நமது சகோதரிகளிற் பலர் அடிமைவாழ்க்கையையே ஆசித்துவருவது எவ்வளவு வருத்தத்தக்கது? விருதாகர் மகாநாட்டில் பெண்ணுலக நன்மைக்கான பல தீர்மானங்கள் கொணரப்படும். எனவே பெண்மக்கள் யாவரும் தவறாது விருதை மாநகர் விஜயம் செய்துத் தம் சமூக விடுதலைக்கு அடிகோலவேண்டுமெனப் பணிவாய்த் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நமது மகாநாடுகன் யாவும் வெற்றியோடு முடிக.

---

திரு. காளியப்பன்.

---

நாகை திரு. என். பி. காளியப்பன் அவர்கள் மலாய்நாட்டு சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு 30-7-31 ந் தேதி காலை ரோஜு என்கிற கப்பலில் நாகை வந்துசேர்ந்தார் 31-7-31 ந்தேதி மாலை நாகை போலீஸ்ஸ்டேஷன் மைதானத்தில் நடைபெறும் ஒரு பொதுக்கூட்டத்தில் 'காந்தி கதர் காங்கிரஸ்' ஆகியவைகளைக்கண்டித்துப்பேச ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

# ஆதிதிராவிடர்களுக்கு மதத்தைப்பற்றி க்கவலையில்லை—மனித உரிமையைப்பற்றியே கவலை.

(அருப்புக்கோட்டை வீரய்யா)

அன்புள்ள சகோதரி சகோதரர்களே! ட்ஷ தாக்கிவிடப்போலுல் நாறபேர் சேர்ந்து கொண்டு'போகாதே! பறையன். எழுந்திருக்கட்டும்அவனைத்தொடாதே அவன் செய்த பாபத்தினுல் கேவலம் கஷ்டப்படுகிறு'னென்று மறுக்கிறார்கள்.இப்பேர்ப்பட்ட இந்துக்கள் மதத்தில் கவலைகொண்டு பேசுகிறார்கள். மனிதனுல் மதம் உண்டு பண்ணப்பட்டது. அது மனிதன் முன்னேற்றத்தையும், அறிவையும் கெடுக்க ஏற்படுத்தப் பட்டதல்ல. மனிதன் நன்மைக்காக உண்டுபண்ணப்பட்டது. பாபம், மோக்ஷம் என்ற வைபயத்தினுல் உண்டாக்கப்பட்டது. மனிதன் பயம் தெளிவு உண்டாக அரசாங்க தண்டனை ஏற்படுத்தினர்கள். ஆதிதிராவிடர்கள் மதத்தை ஆராய்ச்சி செய்து மோட்சத்தை அடைய வேண்டுமென்று எண்ணவில்லை. மனிதன் தினசரி வாழ்க்கையில் முன்னேற வழியின்றி மனித உணர்ச்சியற்று மிருகத்திலும் கேவலமாய் துன்பத்திலிருப்பதைவிட உலகத்தில் மனிதனுய்ப்பிறந்த ஆதிதிராவிடர்உலகத்தில் மனித உணர்ச்சியுடன் வாழ ஆசைப்பட்டு 'நீங்கள் சகோதரர் என்னைப்போல் சமமாய் வர உனக்கு உரிமை உண்டு' என்று இல்லாம் சகோதரர்கள் கூறி அன்புடன் அழைக்கிற இடத்தில் போய் இருக்க இஷ்டப்படுகிறார்கள். அடிமை போலிருந்த மனிதனை தொப்பியும் கயிலியும் அணிந்த உடனே மனித உரிமையைகொடுக்கத்தயாராகயிருக்கிறார்கள். அதனுல் யாதீகர்களுக்கு வருத்தமில்லையே. அங்கு அவன் எந்தத்தொழிலும் தன்னிஷ்டம் போல் செய்து பிழைக்க வழியுண்டு. மற்ற மனிதனுடன் சரியாய்வாழ போட்டி போட சக்தி வந்து விடுகிறது. மதத்தின் பேரில் இச்சை வைத்து ஆதிதிராவிடர்கள் சேரவில்லை. அதைத் தடுக்க யாராலும் முடியாது. நியாயமும் அதுவே. 'திராவிடன்' பத்திரிகையில் 'ஆரிய சமாஜத்தில் சேருவுகள்' என்று சொல்லுவது வேறும் சமாதானமேயொழிய, ஜாதியென்ற பேயை ஒழிக்க வழியில்லையே. பிரிவினையான பார்ப்பன மதம் கொடுமை செய்ததின் பேரில் தான் முஸ்லீம், கிறிஸ்தவர்கள் பரவ வேதமுண்டாயிற்று. இன்று இந்தியா ஒரே ஜாதி, ஒரே மதம் என்று இருந்தால் அடிமைக்குக்காரணமில்லையே. இந்தியாவின் அடிமைக்குக் காரணம் பார்ப்பனர்கள் செய்த சுயநல மோசமே. மதத்தை விருத்தி செய்ய எமக்கு ஆசையில்லை. மனித உரிமையையடைய அதிக ஆசையுண்டு. அதுவே ஆதிதிராவிடர்களின் நோக்கம். எந்த யாதீகனும் முஸ்லீமுக்கு சலாம் போட்டு மரியாதை செய்கிறான். பறையன் என்றால் 'தள்ளிப்போ' என்று கூவுகிறான். என்ன பேதமை என்று யோசியுங்கள். காலப்போக்கு காரியத்தை நாடுகிறது: பேச்சை நாடவில்லை. ஆதிதிராவிடர்கள் ஆயிர வருஷ காலமாய கஷ்டப்பட்டமக்கள். மனிதனுடைய உரிமையை அடைய ஆவலுடன் இருக்கிறார்கள். மதம் பெரிதல்ல மனித உரிமை பெரிது என்று கருதியே அவர்கள் முஸ்லீம்களுடன் சேர்ந்து சாப்பிட ஆசைப்படுகிறார்கள். பிரசங்கத்திலும் பத்திரிகையிலும பிரமாதமாய் எழுதி ஓய்ந்து விட்டது. சமத்துவ வேலையை முன்னின்று வேலை செய்யப்பாடுபடுங்கள்.இராமநாதபுரம்ஜில்லா தேவகோட்டை தாலூகா திருவாணை சர்க்கிளில் கள்ளர்கள் ஆதிதிராவிடப்பெண்கள் மார்பின் மேல் சேலை அணியக்கூடாதென்று மரியாதைக் கேடு செய்கிற இடத்தில் ஆதிதிராவிடர்கள் உண்மை அபிமானிகளான திரு. ஜான் அவர்களும் திரு. இராமச்சந்திரன் சிவகெங்கை அவர்களும் சேர்ந்து ஒரு கூட்டம் கூட்டஏற்பாடு செய்திருந்ததில் மேற்படி தாலூகா விலுள்ள உத்தியோகஸ்தர்கள் ஆதிதிராவிடர் கூட்டம் கூடாதென்று மேற்படியார்கள் இருவருக்கும் 144 போட்டு கூட்டத்தை நடக்கவிடாமல் தடுத்து விட்டார்கள். பகுத்தறிவும் சுயமரியாதையும் 144 உத்தரவைப் பொறுத்திருக்கிறது. ஏழைகளுக்கு பொறுப்பற்ற கவர்ன்மெண்டை என் மீறுதல் செய்யக்கூடாது? இராமநாதபுரம் ஜில்லாவிலே விருது நகரிலே நாளது ஆகஸ்டு மாதம் 8, 9 தேதிகள் கூடுகிற மாகாண சுயமரியாதை மகாநாட்டில் இராமநாதபுரம் ஜில்லாவில் பல கிராமங்களிலும் ஆதிதிராவிடப்பெண்களை மார்பில் சேலை அணியக்கூடாது என்றகள்ளர்களால் சொல்லுகிற அநீதியை நீக்க விருது நகர் மகாநாட்டில் தீர்மானம் கொண்டு வந்து தொண்டர்படை சேர்த்து வேலை செய்யஉண்மைச்சுயமரியாதை வீரர்கள் கவனிக்கவேண்டுமென்று சுயமரியாதை நண்பர்களை உணக்கமாய்க்கேட்டுக்கொள்ளுகிறேன்.

வீ. சு. பு. வீரய்யா.

——

## எது கொடியது?

தேநீர் ஒரு கொடியபானம். அதை அடிக்கடி உபயோகித்தால் பைத்தியம், மூளைக்கோளாறு, தூக்கமின்மை, மனவியாகூலம், நினைவு தடுமாறல், ஞாபகமறதி, தேகநடுக்கம், புத்திமாறுட்டம், நெஞ்சத்துடிப்பு முதலியவைகள் உண்டாகின்றன. ஆகையால் அது ஒரு சுகவிரோதி என்று 'இந்தியா' தினசரிப் பத்திரிகை எழுதுகிறது.

மதுவைவிட டீ கொடியபானமாயிருப்பதால் இதற்கு மறியல் செய்வார் ஒருவருமில்லையா? இது ஒரு வேளை நம் நாட்டில் உற்பத்தியாகிறது என்று விட்டு விட்டார்களா? ஜனங்களுக்கு கெடுதல் விளைவித்துக் கொண்டிருக்கிற விஷ வஸ்துக்களை முதலில் ஒழித்துவிடாமல் போதை தரும் வஸ்துவையும், அறிவு தரும் பாஷையையும் ஒழிக்க காங்கிரஸ் முயற்சி செயவது நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

இந்து முஸ்லீம்.

பம்பாய் ஜுன்னாட் சமஸ்தானத்தில் வீரவாலில் ஏற்பட்ட ஹிந்து-முஸ்லீம் கலகத்தில் 6 ஹிந்துக்கள் கொல்லப்பட்டனென்றும் 6 ஹிந்துக்கள் காயமடைந்தனரென்றும் தனிப்பட்ட சமாசாரங்கள் கூறுகின்றன.

அ. பிரஸ் "திராவிடன்"

இது உண்மையாயின் இதற்குத் திரு. காந்தியோ காங்கிரசோ என்ன சமாதானம் சொல்லக்கூடும்? சுயராஜ்யம் வந்த பிறகு இந்து—முஸ்லீம் சச்சரவை தீர்த்துவிடலாம் என்று நினைக்கிறார்கள் போலும்! அப்படியாயின் காங்கிரஸ் பிரஜா உரிமைத்திட்டத்தில் "இருசமூகத்திற்குள்ளும் இன்றையதினம இருக்கும் பழக்க வழக்கம், உணர்ச்சி எல்லாம் காப்பாற்றப்படும்" என்று தானே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆகவே கலகம் எப்படி நீங்கும்? (டார்ச் லைட்)


இங்கிலீஷ் 'சிசர் கிட்ச்' குதிரைப் பந்தய லாட்டரி.

14-10-31-ல் சிலுவ் மார்க்கட்டில் 'மியூட்சுவல் பெனிபிட்' சார்பால் நடக்கும் பிரைசுக்கு கொடுப்பது 90,000 பவுன். டிக்கட் 1-க்கு ரூ. 4-8-0. 3-க்கு ரூ. 13. டிக்கட்டிற்கு முன் பணத்துடன் முந்துங்கள்!

அதிகாரம்பெற்ற ஏஜண்டு:—

S. K. வரதராஜுலு,

ஆனந்தநிலயம், நிருச்செங்கோடு S. I.

பஞ்சமா பாதகங்கள்

எவை?

என் நிகழ்கின்றன?

அவற்றை நிறுத்தச் சமய, சமூக, அரசாங்கச் சட்டங்கள் ஆதரவளிக்கின்றனவா?

இதைப்பற்றி நீங்கள் எப்போதாவது யோசித்தீர்களா? இல்லையானால் இன்றே எழுதுங்கள். 52 பக்கங்கொண்ட புஸ்தகம் 0—2—6 அணு ஸ்டாம்புக்கு அனுப்பப்படும். விலாசம்:—

கோவை அ. அய்யாமுத்து

புஞ்சைப்புளியம்பட்டி,

(கோயமுத்தூர் ஜில்லா)


ராஜா முத்தையா
தூலக அறக்கட்டளை

(7ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கும் எல்லாஜீவராசிகளிலும் மனிதனே எவ்வாறுமிக்க உயர்ந்த ஜீவராசியென்பதையும், தன்னுடைய வெளி அவயவங்களாலும், தன்னைச்சுற்றிலும் காணப்படக்கூடிய பொருட்களாலும் மனிதன் எவ்வாறு தன்னுடைய மூளையினுதவியினுலும், இதர உள் அவயவங்களினுதவியாலும் தனது அறிவை விசாலப்படுத்திக்கொண்டு வருகின்றனென்பதையும் ஜீவசாஸ்திரத்தின் மூலாதார உண்மைகளால் பாமர மக்களும் எளிதிலுணர்ந்து கொள்ள முடியும்.

சரித்திர ஆராய்ச்சியின்படி, எகிப்து தேசத்தின் நாகரீகக்காலத்திலிருந்து தான் மனிதன் இவ்வுலகில் தோன்றி எத்தனை வருடங்களாயினவெனக் கணக்கிடப்படுகின்றது. அவ்வாறு நாம் கணக்கிட்டோமானால், இன்றைக்குச்சுமார் 10,000 வருடங்களுக்கு முன்பாகத்தான் மனிதன் நமது உலகில் முதன் முதலாகத் தோன்றியிருக்க வேண்டுமென்றேற்படுகின்றது. ஆனல் மோசஸ், இயேசு, முகமது ஆகியவர்களின் உபதேசங்களின்படி நாம் மனிதன் முதலில் தோன்றிய காலத்தைக்கணக்கிட்டோமானால் அப்பொழுது நமது புராணங்களின்படி ஆதாம் எனக்கூறப்பட்ட ஆதி மனிதன் உலகில் தோன்றிய, அதாவது கிறிஸ்து பிறப்பதற்கு முன் 28—10—4004 தேதியாகிய ஒரு வெள்ளிக்கிழமை காலையென ஏற்படுகின்றது. ஆனல், மேலே இதுவரையிலும் கூறப்பட்டு வந்தவைகளிலிருந்து, இக்காலமானது இன்னும் எத்தனையோ மடங்கதிகமானதென விஞ்ஞான ஆராய்ச்சியின் பாலையேற்பட்டுவிட்டது. மனிதனின் புராதன சரித்திரமானது ஈயோலித்திக் ஏஜ் (Eolithic Age) என்று கூறப்பட்ட காலத்திலிருந்து தான் அதாவது சுமார் 400 வருடங்களுக்கு முன்பாக விருந்து தான் ஆரம்பித்து, புதுக்கல்யுகம் (New Stone Age) என்று சொல்லப்படும் காலத்திலதான் அதாவது சுமார் 1500 வருடங்களுடன் முடிவடைகின்றது. புதுக்கல்யுக (Neolithic Age) ஆரம்ப காலத்திலிருந்து உலோகங்கள் (Age of Metals) கால ஆரம்ப வரையிலும், மனிதனுல் முதன் முதலாக தோற்றுவிக்கப்பட்ட எழுத்துப்பதிவுகள் ஏற்பட்ட, அதாவது கிறிஸ்து பிறப்பதற்கு முன் 4000வருடங்கள்வரை உள்ளகாலமும் மத்தியசரித்திரக் காலத்திலடங்குவதாகத் தர்க்க சாஸ்திர முறையில் வேண்டுமானுல் உரைக்கலாம். கிறிஸ்து பிறப்பதற்கு 4000 வருடங்களுக்கு முன்பிருந்து இயந்திரத் தொழில் புரட்சி யேற்படும் வரையிலும் அதாவது கிறிஸ்து சகாப்தத்தின் 18வது நூற்றாண்டின் மத்திய காலம் வரையிலும் நவீன சரித்திரக்காலமெனக் கூறலாம். மனிதவர்க்கங்களின் சமூகவாழ்விலும், கிருஷித்தொழிலிலும் இதுவரையிலுமேற்படாதிருந்த மகா உன்னத நிலைமையை மனிதன் இப்பொழுது அடைந்திருப்பதினுல், அதாவது இயந்திரத்தொழில் புரட்சிக்குப் பிறகு யேற்பட்டிருக்கக்கூடிய காலந்தான் தற்கால மெனக் கூறப்படவேண்டும்.

சிருஷ்டியின் தத்துவத்தைப் பற்றி மோசஸால கூறப்பட்டுவந்தக்கொள்கைகளை விஞ்ஞான சாஸ்திரிகளென்பவர்கள்சிறிது மொப்புக்கொள்ள மாட்டார்களென்பது, நாம் மேலே கூறிக்கொண்டு வந்த வைகளால் விளங்கியிருக்கும். ஆனல், பூர்வீகத்துவ சாஸ்திரிகளால் கூறப்பட்ட தர்க்க சாஸ்திரத்தின் ஒழுங்கின்படியாகக் காணப்படுவதும் அல்லத் தர்க்க சாஸ்திர தத்துவங்களின்படி ஊகித்துணரப்பட்ட உண்மைகளாகவும் காணப்படுபவைகளான வைகளை அதாவது இப்பிரபஞ்சம் சதாகாலமுமிருந்து வரக்கூடிய தென்பதையும், அடிக்கடி மாறும்படியான இயல்புள்ள தென்பதையும், ஆதியும் அந்தமுமில்லாத தென்பதையு மொத்துக்கொள்ளுகின்றார்கள். இத்தியாதி காரணங்களால் கடவுள் மனிதனையாவது அல்லது எல்லையற்ற இவ்வகண்ட, பெரிய இப்பிரபஞ்சத்தையாவது உண்மையாகவே சிருஷ்டிக்கவில்லையென்றும் தீர்க்கதரிசிகளும், தத்துவ சாஸ்திரிகளும், ஒரு கடவுளையோ அல்லது அநேகக்கடவுள்களையோ தங்களுடைய மனோசக்தியினல் கற்பனை செய்துகொண்டு வந்திருக்கின்றார்களென்பதும் நன்றாய் விளங்குகின்றது.

இப்பிரபஞ்சத்தில் காணப்படும் எல்லாவித ஜீவராசிகளும் தங்களுக்குள்ளாக கிரியா (Kinetic) அல்லது தாமத (Potential) சக்தியை அடக்கிக்கொண்டிருக்கும் சலனதன்மையுள்ள பொருட்களெனவே விஞ்ஞான சாஸ்திரிகள் யெண்ணிக்கொண்டுவருகின்றார்கள். மேலும், இப்பிரபஞ்சத்தின் இதரபாகங்களின் வேகத்தினுலும், ஆவேசத்தினுலும், இப்பிரபஞ்சத்தின் சிலபாகமானது பலவித மாறுபாடுகளடையக்கூடிய தன்மையுள்ள தெனவுமவர்கள் கருதுகின்றார்கள். மக்கள் தீமை செய்தால் கடவுளால் தண்டிக்கப்பட்டு நரகத்திற்குச்செல்ல நேரிடுமென்று பயந்தோ, அல்லது மனிதவர்க்கத்திற்கு நன்மை செய்தால் மோக்ஷலோகம்கடவுளால் ளிக்கப்படுமென்று தினைத்தோ மனிதசமூகத்தில் ஒழுங்காயும், கிரமமாயும் நடந்துகொள்ளுவதற்கு மக்களுக்கொரு கடவுள் வேண்டுமென்ற அவசியமே யில்லையெனவும் அவர்கள் கருதி, மக்கள் யாவரும் மகத்தான சந்தோஷத்தையும், சௌக்கியத்தையும், நன்மையையுமடைந் தின்புறும் பொருட்டு, தங்களுக்கும், பிறருக்கும் உதவிசெய்தலே பெரிய தருமமென்றெண்ணி, அக்காரியத்திலவர்கள் ஈடுபட்டு, இதர ஜன சமூகங்களின் வாழ்க்கைகளையனுசரித்து தங்களுடைய ஒழுக்கங்களையும், நடத்தைகளையும் சீர்திருத்திக்கொள்ளுகின்றார்கள். மக்கள் தங்களுடைய அகம்பாவத்தையும், அகங்காரத்தையும் சுயநலக்கொள்கைகளையும், காமத்தையும் விடுத்து, அதிகப்பணத்திற்கும், அளவிலா அதிகாரத்திற்கும், எல்லையற்ற கௌரவத்திற்கும், வீணாசை கொள்ளுவதையும் விடுத்து அல்லது 'அதிக ஆசை அதிக நஷ்ட' மென்பதையறிந்துப் பேராசையின்றியும், பொறுமையும், குரோதமும் பரஸ்பரசேதமுமில்லாதிருக்கும் படியான ஓர் உயர்ந்த உன்னத மேன்மை பொருந்திய நிலைமையையடைய வேண்டுமானுல் பிறருக்குதவி புரிந்துகொண்டும், நல்லொழுக்க முடையவர்களாகவும், கூட்டுறவுவாய்ந்த உலகப்பொதுஜன அங்கத்தினர்களாக உயிர்வாழ்ந்து கொண்டும் வரவேண்டுமெனவு மவர்கள் கருதுகின்றார்கள்.

கடவுள் என்கின்ற தத்துவ மனோபாவத்திலுள்ள ஒரு விதநம்பிக்கை, ஆன்மாவிற்கெப்பொழுதும் அழிவில்லையென்னும்யெண்ணம், அவரவர்களிவ்வுலகத்தில் செய்த புண்ணிய பாவங்களுக்கேற்றவாறு அவரவர்களிறந்தபின் அவரவர்களுக்களிக்கப்படும மோக்ஷம் அல்லது நரகமாகிய யெண்ணங்கள், அல்லது அவரவர்களின் செய்கைகளுக்கேற்றுப்போலவரவர்களிறந்த பிறகு அவரவர்களுக்கேற்படும் மறு ஜன்மங்கள் ஆகிய நம்பிக்கைகள் மக்களை ஜன சமூக வாழ்வில் சிறிதளவாவது நேர்மையாகவும், ஒழுங்காகவும் நடந்துகொள்ளும்படி செய்கின்றன என்று சொல்லலாம். ஆனலும், மேலே கூறப்பட்ட அதே நம்பிக்கையானது மனிதனே பூர்வாசாரங்களை விடக்கூடாதென்கிற அபிமானமுள்ள பிடிவாதக்காரனாக செய்துவிடுவதுடன், ஜனசமூகசுபாவத்தின் சீர்திருத்தங்களுக்கு விரோதமுடையவனாகவும் செய்துவிடுகின்றது. மேலும் அந்நம்பிக்கை அவனை மனிதர்களின் நன்மையை அதிகப்படுத்தக்கூடியதான மகத்துவம் பொருந்திய இயந்திர, இரசாயன சக்திகளை மனிதன் அடக்கி, ஆளக்கூடிய சக்தியும், அதைத்தன் வசப்படுத்தக்கூடிய சக்தியுமிருக்கின்ற தென்கின்ற யெண்ணங்களையுமவனுடைய மனதினின்றுமகற்றி, அவனைக்கோழையாகவும் செய்துவிடுகின்றது. ஆகையால், இவ்வெண்ணங்களானது பாமர மக்களுக்குப் போதையை (மயக்கத்தை) யளிக்கத் தக்க அபினி கலந்த ஓர் மருந்து போலிருந்து கொண்டு வருகின்றது. மக்களின் இதத்தையு யெண்ணங்களானது அவர்களை மடாதிபதிகளுக்கும், மதகுருக்களுக்கும், மதபோதகர்களுக்கும் பயபக்தியுடன் அடங்கி, நடந்துவரும்படி செய்துகொண்டுவருவதுமல்லாமல், அவர்களை எதிர்த்துப் போராடாதிருக்கும்படியாகவும் செய்துவருகின்றது. மேலும் இதேநம்பிக்கையானது அவர்களை இவ்வுலகில தாங்களனுபவித்துவரும் எல்லா விதக்கஷ்டங்களும தங்களுடைய நன்மைக்கேதான் என எண்ணும்படியாகச் செய்வதுடன், அவ்விதக்கஷ்டங்களும், துன்பங்களும் ஒருவராலும் அறிந்துகொள்ள முடியாதவராயிருப்பவராலும், கருணைக்கடலாக விளங்கிக்கொண்டுவருபவராலும், சர்வதயாபராகவும,சர்வஞானியாகவுமுள்ள கடவுளால்தான் மக்களின் நன்மைக்கே, மக்கள் ஈடேறும் பொருட்டே, மக்கள் உய்யும பொருட்டே அளிக்கப்பட்டுவருவதாகவும்வர்களைக் கருதும்படி செய்துவிடுகின்றது.

சென்னையில் "குடி அரசு" பத்திரிகையும், புஸ்தகங்களும் கிடைக்குமிடம்.

T. சுப்ரமணியம்,
3, செங்கல்வராய முதலி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை

(6-ம பக்கத்தொடர்ச்சி)

ணத்திற்காக வேறு புருஷனைக்கல்யாணம் செய்து கொள்ளலாமென ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். விவாகரத்து என்னும் பதம் சட்டப்புத்தகங்களில் உபயோகிக்கப்படவில்லையானாலுங்கூட சட்டப்படி கல்யாணத்தை தீர்த்துக்கொள்ளுதலும் மறுகல்யாணம் செய்து கொள்ளுதலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது' என்றபேசி இருக்கிறார். இவர் தம் கூற்றுள் நாம் எடுத்துக்காட்டியவை அனைத்தையும் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதை நேயர்களே! கண்டு கொள்ளுங்கள்.

மேலும் இத்தீர்மானத்தை ஆமோதிக்கு முறையில் திரு சிந்தாமணி அவர்கள் கூறிய வீர உரையையும் நோக்குங்கள். 'இது ஒருமுக்கியமான பிரச்சினை. ஆண்கள் கொடுமையினின்றும பெண்கள் விடுதலை பெற வேண்டியகாலம் நெருங்கிவிட்டது. அறிவும் நாகரீகமும் கொண்ட எல்லாரும் இதை அங்கீகரிப்பார்கள்' என்றும்பேசியிருக்கிறார். இவற்றுள்ளும் நம் கூற்றுக்குதக்க ஆதாரம் இருப்பவை கண்கூடு.

அடுத்தபடியாக ஷெ தீர்மானத்திற்கு திருத்தப்பிரேரேபணை கொண்டுவந்த திரு. சுரேந்திரநாத் வர்மா அவர்கள் 'ஒழுக்கமில்லாமை, இரண்டுதாரம், ஒருவரை ஒருவர் விட்டுப்பிரிதல், கொடுமை, ஆகிய இக்காரணங்களையும் சேர்க்கப்படவேண்டும்'மென்ற திருத்தப்பிரேரேபணையும் நோக்கிலுல் நாம் எழுதிய 'விவாகரத்துவேண்டியதே' என்பவை எந்த வகையிலும் ஒப்புக்கொள்ளப்பட்டதே என்பது நான் சொல்லாமலே விளங்கும்.

மேலும் கொஞ்சநாட்களுக்கு முன்னுல் கூடிய ஆந்திர மாகாண பெண்கள் மகாநாட்டில் பெண்களாலேயே 'விவாகரத்து' என்னும் ஒரு தீர்மானம் கொணர்வுவந்து நீண்ட கேரவிவாதத்திற்குப் பின்பு ஒரே ஒரு ஓட்டில்லாது மேற்படி தீர்மானம் தோல்வியுற்றது என்பதை வாசகர்களே அறிந்திருப்பீர்கள்.

அறிவும், நாகரீகமும் கொண்டவர்கள்டமிருந்து சிறிது ஆதரவு கிடைத்தாலும் தேவைக்குத் தக்கவாறு ஆதரவு இலலாததற்காக வருந்துகிறோம். சுயராஜியம் வேண்டுமென்பவர்களோ, சீர்திருத்தம வேண்டுமென்பவர்களோ, சுயமரியாதை வேண்டுமென்பவர்களோ, நாகரீகம் வேண்டுமென்பவர்களோ கண்டிப்பாய் 'விவாகரத்தை' ஒப்புக்கொண்டுதானுக வேண்டும். எனெனில் மேலே சொல்லிய சுயாராஜியம், சீர்திருத்தம், சுயமரியாதை, நாகரீகம் முதலியவற்றிற்கெல்லாம் அஸ்திவாரம் போன்றவை 'விவாகரத்தே'. அது ஒப்புக்கொள்ளப்படாவிடில் மேலே சொல்லியவைகளெல்லாம் அஸ்திவாரமற்ற கட்டடம் போலாகுமென எச்சரிக்கை முறையில் சொல்லுகிறோம்.

## "தமிழ் நாட்டின் வெற்றி."

அன்பார்ந்த சகோதரி! சகோதரர்களே!

நானும், எனது நண்பர் திரு. எஸ். குற்றாலலிங்கம் அவர்களும் ஒரு பெரியாரைப் பார்க்கப் போயிருந்தோம். போனவிடத்தில் பெரியாரின் தாயார் அவர்கள், தன் புத்திரன் ஊரில் இல்லையென்று தெரிவித்து வந்த விஷயமென்னவென்று விசாரித்தார்கள். நாங்கள் "சுயமரியாதை இளைஞர் சங்க"த்தைச் சார்ந்தவர்களென்றும், மேற்படி சங்க சார்பாகத் தங்கள் புத்திரர் அவர்களைப் பார்வையிட வந்தோம் என்று தெரிவித்தோம்.

அதற்கு மேற்படி பெரியார் அவர்களின் தாயார் சுமார் 6: வயதிற்கு மேற்பட்ட திருமதி ஆர். தாயம்மாள் அவர்கள் (ஸ்ரீவைகுண்டம்) எங்களிடம் "சுயமரியாதை இளைஞர் சங்கம்" விஷயமாகச் சில குறிப்புகள் விசாரித்தார்கள். நாங்கள் விடைபகர்ந்ததோடு மேற்படி சங்கத்திலிருந்து 5—7—31ல் வெளியான (விதவா விவாகம், கலப்பு மண அறிவிப்பு) "பொதுஜனங்களுக்கு ஓர் வேண்டுகோள்" என்னும் பிரசுரத்தையும் அவர்களிடம் சமர்ப்பித்தோம். அவர்கள் மேற்படி பிரசுரத்தை வாசித்தறிந்து மிக்க மகிழ்ச்சியுடன் கால் மணி நேரம் ஆரிய சொற்பொழிவாற்றியதோடு, தானும் இது விஷயமாக ஊக்கத்துடன் முயற்சி யெடுக்கத்தயாராகயிருப்பதாவும், இப்பவே தன் சொல் வருஷிக்குள்பட்ட, விசால அறிவும், நற்குணமும், கல்வியறிவும், அழகும் பொருந்திய சில பெண்மணிகள் இருப்பதாகவும், இவர்களுக்கு எற்றபடி ஆடவர்களைக் கவனித்துத் தெரிவித்தால் மணம்நிறைவேற்றி விடலாமென்றும் தெரிவித்தார்கள்.

எதிர் பாராத ஆச்சரியத்தால் நாங்கள் பிரமைகொண்டு ஒன்றும் பேசுவதற்கு வன்மையற்று சந்தோஷத்தில் அமிழ்ந்திருந்து பின் அவர்களிடம் சில ஆடவர்களின் குறிப்புகளை எடுத்துச்சொன்னோம், நிற்க.

---

இப்பாரிலுள்ள மக்கள் யாகரும் கட்சி பேதமற்று, மதபேதமற்று, சாதிபேதமற்று மக்கள் முன்னேறுவதற்கான சட்டமாம் 'விவாகரத்து' என்னும் சட்டத்தை சட்டப்பூர்வமாய் அமைத்து மக்களை முன்னேற்றுவதில் முனைந்து நிற்கவேண்டுமாய்க்கேட்டுக் கொள்ளுகிறோம்.

---

ஜாதித்திமிர், மூடப்பழக்கவழக்கங்கள் தலைவிரித்தாடுமிந் தென்னாட்டில், பகுத்தறிவிற் சிறந்தகம், கல்வியறிவு பெற்றும், சீர்திருத்தத்தில் ஆர்வங்கொண்டும், முயற்சியில் தீவிர ஊக்கங்கொண்டுமுள்ள ஓர் உத்தமி, குணவதி, புனிதவதி, அதிலும் 50 ஆண்டுகள் நிறைவுபெற்ற தலைவிதோன்றிய முறையில், தென்னாடு சமத்துவ சகோதரத்துவம் பெற்று வெற்றி பெறுதும் போகுமோ?

நாம் இவர்களுக்கு வணக்கம் செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம்.

ஆகையால் சகோதரி சகோதரர்களே! சுயநலக்காரணமாகவுள்ள மூடப்பழக்க வழக்கங்களை உதறித்தள்ளிவிட்டு, சமத்துவ சகோதரத்துவ நிலைமைக்கு வேண்டும் முயற்சிகளை வீரத்துடன் (வாய்காப்போடாமல்) விரைவில் செய்து வெற்றிபெறுமாறு பணிவுடன் பிரார்த்திக்கிறேன்.

மா. கா. வேலாயுதம்,
திருநெல்வேலி டவுன்,
12-7-31

---

## வியாசப்போட்டியில் வெற்றி பெற்றவர்கள்.

உடல்வளம், உடற்கட்டு, உடல்வன்மை ஆகிய வியாசப்போட்டியில் திருவாளர்கள் கீழ்சிவற்பட்டி வெ. சோமசுந்தரன், திருப்பத்தூர் அ. இரத்தினசபாபதி வலையபட்டி, அள. சித. சொக்கலிங்கம் செட்டியார் ஆகியவர்கள் வெற்றி பெற்றார்கள். வெற்றி பெற்றவர்கட்கு முறையே தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம் ஆகியவைகள் பரிசளிக்கப்பட்டதென கீழச்சிவற்பட்டி அழகாபுரி உடற்பயிற்சிசாலைக் காரியதரிசி எழுதுகிறார்.


# வியாதியா? விதியா?

வியாதியே ஆலசியத்தால் விதியாய் முடியும்.

நாம் தூங்கினாலும், நோய் தூங்காது சுருசுருப்புள்ளது.

மேகநீர், இரத்தி, குட்டம், தடிப்பு,
திமிர்ப்பு. மதமதப்புக்கும்

திருவாரூர், டாக்டர். ஜீ. கண்ணுசாமியவர்களின்

**ரசதாம்பிர சுண்ணம்.**

சாப்பிடுங்கள்.

40 நாள் மருந்து ரூ. 100.

ஏழைகளுக்குப் பாதிவிலை.

ஷண்முகானந்த வைத்தியசாலை திருவாரூர்.

S. I. R.

# ராஜசித்தாதி லேகியம்.

ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

இந்த லேகியத்தைச் சுண்டக்காய் பிரமாணம் காலை, மாலை இரு வேளையும் சாப்பிட்டு வந்தால் தாதுபுஷ்டி, ஜீரணசக்தி இவைகளைக் கொடுத்து நாம்புகளுக்குப் பலத்தைத் தரும். சீதக்கடிப்பு, நெஞ்சுக்கரிப்பு, வயிற்றுப்போக்கு, வயிற்றுவலி, வயிற்றில் கட்டி, மலச்சிக்கல், பாலியருக்குண்டாகும் சொர்ப்பன வ்யாதிகம் இவைகளைக் குணப்படுத்தும்.

| | | | |
|---|---|---|---|
| 1-ரு. ஒரு சேர் | ரூ. 4-0-0, | அரை சேர் | ரூ. 2-0-0 |
| கால் சேர் | ரூ 1-0-0, | அரைக்கால் சேர் | ரூ. 0-8-0. |
| 2-ரு. ஒரு சேர் | ரூ. 3-0-0, | அரை சேர் | ரூ. 1-8-0, |
| கால் சேர் | ரூ. 0-12-0, | அரைக்கால் சேர் | ரூ. 0-6-0, |

T. A. ரூலிங்க முதலியார், ஷண்முகானந்த வைத்தியசாலை.
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

மலாய்காடு பூரூவுக்கும் சோல் ஏஜண்டு:—

P. M. வெள்ளாச்சாமி,
ரு. 616 டத்தோகீரூமட் ரோடு, பினாங்கு. S. S.


ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

(5ம் பக்கத்தொடர்ச்சி)

வர்கள் என் குறை சொல்லமாட்டார்கள்?

வேறுபாடசாலையென்று வைத்து ஒரு சாதியாருக்கு மட்டும் உடைகளும், ஆகாரங்களும், தெட்சணைகளுங்கொடுக்கச்செய்வதின்மூலம்அவர்கள் சுகமாய் வாழ்ந்து வருவதைத் தவிர அதுமூலமாக நாட்டுக்கானது, அந்தஊருக்காவது, அல்லது பணம் கொடுத்து உதவியவருக்காவது மிடைத்திருக்கக்கூடிய நன்மைகள் என்ன வென்பதை யாருஞ்சொல்லவேமுடியாது. இப்படிப் பிரயாசையில்லாமல் காலக்கழிப்பவர்களெல்லாம்தொழில் செய்வதாலும் நாட்டில் ஒரு பர்லாங்குக்கு ஒரு கிணறு வீதம் வெட்டி விவசாயத்தை எவ்வளவோ மேன்மைக்குக்கொண்டு வரலாம்.

கோவில்கள் மூலமாகவும், உற்சவங்கள் மூலமாகவுந்தான் பெரும்பாலும் கலகங்களும், கச்சரவுகளும், தொல்லைகளும், கோர்ட்டுவியகாரங்களும் உண்டாகிறது.

மேல்நாட்டார்கள் தங்களுடைய தேவைகளுக்குமேல் அதிகப்படுத்தி மாதிகளின் பாலையும் சவுனித்தினுசுகளையும் சூடத்தையும் இந்தியாவில் கொண்டுவந்து விற்பனை செய்து பணங்களைக்கொண்டு போகிறார்கள். இந்தியர்களாகிய நாம் இந்தியாவிலுள்ள மாடுகளின் பாலைப்பெரும்பாலும் சாமிகளின் மேல் அபிஷேகஞ்செய்து சாக்கடைகளில் போகவிட்டும் சவுனிச்சிப்பங்களைப்போட்டு அவைகளில் நெய்யையும்விட்டே தீவைத்துச்சோதியை உண்டாக்கியும் சூடத்தைக்கொளுத்திப்புகையையுண்டாக்கியும் வரக்கூடியதாயிருக்கிறது. மேல் நாட்டார்களைப்போல் நாமும் நம்முடைய சாமான்களை அன்னிய நாடுகள் கொண்டுபோய் விற்று அவர்களுடைய பணங்களைக்கொண்டு வரக்கூடியமாதிரியாயில்லாவிட்டாலும் நம்முடைய சாமான்களை வீணுக்காலும் நமக்கு வேண்டியதை நாமே தயார்செய்து கொள்ளக் கூடிய தன்மைகளாவது வேண்டாமா?

'எல்லாம் மனிதச்செயலால் மூடியும்'என்றபடி மேல்நாட்டார்கள் தங்களுடைய பிரயாசைபாலும் முயற்சியாலும் நூதனமான காரியங்களைச் செய்தும் மேன்மையாய் அனுபவித்தும் வரக்கூடிய இக்காலத்தில் "எல்லாம் தெய்வசெயல்" என்றும் "பூர்வீகஜன்மாந்திரவினை"என்றுஞ் சொல்லிக்கொண்டு வழக்கமென்ற அறியாமைகளையும் மைதீக்கொடுமைகளையும் விடப்படாதென்ற பிடியோடிருந்தால் அன்னியநாட்டார்கள் நம் தோள்களில் ஏறி மிதித்துக் கொண்டு போகாமலிருப்பார்களா? விழிகண் குருடர்களாயிருந்து கொண்டு நம்முடைய நாட்டுப்பணங்களைக் கொண்டு போகிறார்களேயென்று சொல்லிமற்ற நாட்டார்களைக்குறை கூறிஓலமிடுவதில்பிரயோஜனமில்லை.

சுமார் 10 வருஷத்திற்கு முன் எழுதிய பூமி சாஸ்திரத்தில் தருக்கியின் அதேகை ஊர்களின் வீதிகளில் பெண்களைப்பார்க்கவே முடியாதென்றும் அவர்கள் ஒரு இடத்திலிருந்து மறு இடத்திற்கு வீதியைக்கடந்து போகவேண்டுமானால் தலை முதல் கால்வரைக்கும் துணியால் மூடப்பட்டு சன்களுக்குமட்டும் வலிபோல் வைத்திருப்பதின்மூலம்பார்த்துக்கொண்டு போகிறார்களென்றும்எப்பொழுதும்அவர்கள் வீடுகளின் மச்சுகளில் அடைபட்டுக்கிடக்கிறார்கள் என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இப்படியிருந்த இவர்கள் இப்பொழுது முகமூடியை யெடுத்துவிட்டு வெளியேறி சகல வகைகளிலும் தங்களுக்குச் சம உரிமைகள் வேண்டுமென்று ஆடவர்களோடு போட்டிபோட்டு எல்லாவகைகளிலும் அவர்கள் சமத்துவம் பெற்று மேன்மைகளை அனுபவித்து வருகிறார்கள். இனி எழுதும் பூமி சாஸ்திரத்தில் இவர்களைப்பற்றி முன் எழுதியிருப்பவைகளை மாற்றிதான் எழுத வேண்டும்.

தக்ஷிணமிருகங்களைக்கூடுகளில் அடைத்து வைத்திருப்பதுபோல் அக்காலத்தில் அடைபட்டுக்கிடந்த பெண்களெல்லாம் காலப்போக்கின்படி வெளியேறி முன்னேற்றம் அடைந்துவந்திருக்கும் இக்காலத்தில் சுமையைப்பற்றியும் உலக சரித்திரத்திலே மாற்றி யெழுதும்படி நடந்து கொள்ள வேண்டாமா?

ஒரு சாதியாரின் எமாற்றுக்காகவும், இவர்களின் பிழைப்புக்காகவும் கோவில்களின் பெயராலும் சுவாமிகளின் பெயராலும் செய்து வருகிற சகலசெலவுகளும்நிறுத்தப்படுமானால் அப்பொழுது ஜனங்கள்சகலத்திலும் முன்னேற்றம்அடைந்துமேல்நாட்டார்களைப்போல நூதனமான காரியங்களைச்செய்து அவைகள் மூலம் அன்னிய நாட்டார்களுடைய பணங்கள் நம்முடைய நாட்டுக்கு வரக்கூடிய தாகி நம்முடைய நாடுஞ் செழிப்படைத்து நாமும் மேன்மையை அடையலாம்.

---

## வருணக.

நமதுநண்பரும், சுயமரியாதை இயக்க அபிமானியும், தீவிர பிரசாரகருமாகிய திரு. கே. எ. பண்டிதர் அவர்கள் செவ்வ வாரம் மலேயாவிலிருந்து இந்தியா திரும்பி வந்திருக்கிறாரென்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்

---

## சென்னை முஸ்லீம்கள்.

சென்னை பிரபல முஸ்லீம்களொன்றுகூடி, பத்து வருஷங்கள்வரை தனித்தேர்தல் தொகுதியே இருக்க வேண்டுமென்றும், ஜனத்தொகையின் பேரிலேயே ஸ்தானங்கள் ஒதுக்கப்படவேண்டுமென்றும் அதற்குப் பிறகும் ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்படவேண்டுமென்றும், அதற்குப் பின்னால் கூட்டுத்தொகுதி யேற்படுத்தவேண்டுமென்றும், ஐகிய சட்டசபையில் 100க்கு 80-பேர் சம்மதத்தின் பேரிலேயே மூலாதார (பிரஜா) உரிமையை மாற்ற வேண்டுமென வும் தீர்மானித்திருக்கின்றார்கள்.

---


கோடையிலே இளைப்பாறிக்கொள்ளும் குளிர்தரு எது?

எஸ். தருமாம்பாள் தயாரிக்கும்

சித்தர் மகா சந்தனதித் தைலம்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி M. B. & C. M.

கூறுவது:—

"சுதேசிகளி தருபம்பாள் அவர்களால் தயாரிக்கப்பட்ட சித்தர் மகா சந்தனதித் தைலத்தின் குணாதிசயத்தைப்பற்றி நான் முன்னமே பலமுறை பரிசோதித்திருக்கிறேன். இந்தத் தைலம் நரம்புகளுக்கு மிகவும் குளிர்ச்சியைத்தருவதில்லையென்று நிரூபணமாகி யிருக்கிறது. கூர்க்குலுக்குச்சிறந்தது. இதமடி னை யாயிருக்கிறதென்றும், கல்லை மணையும் உடைகளும்.....மை சூழ்னையையும், கூந்தலை கல்லை நிலையில் வைத்திருக்க விரும்புவோர் தாங்கள் இதனை உபயோகிக்கும்படி கூறுகிறேன்.

கொடிய வெய்யிலாலும், அதிக வேலையாலும், இன்பதுகார்ச்சியாலும், மூளை கொதிப்புற்று சுழல்கண்ட நிரேகங்கட்கு இரண்டு, மூன்று ஸ்நானங்களில் உடனே குணமில்லா விடில் பணம் வாபீஸ். வழுக்கைத்தலையிலும் கூந்தல் வளரும், கை கண்டது.

6 அவுன்சு 1—0—0, 12 அவுன்சு 1—14—0, 24 அவுன்சு 3—12—0

சித்தானந்த வைத்திய சாலை, 35, அண்ணா பிள்ளை தெரு, சென்னை.

# பெண்மக்களும் சுதேச சமஸ்தானங்களும்.

[திருமதி S. நீலாவதி.]

முன் தொடர்ச்சி.

அன்பர்களே! சுதேசமஸ்தானங்களில் சென்ற கட்டுரையில் குறிப்பிட்ட மூன்றும் பெண்மக்கள் விஷயத்தில் தாராள நோக்குடன் நடந்துகொள்கின்ற தென்பதை சிறிது விளக்கினேன். இக்கட்டுரையில், திருவிதாங்கூர், பரோடா ஆகிய இரண்டு சமஸ்தானங்களைப் பற்றி, மேலும் சற்று விரிவாகக்கூற வேண்டியது அவசியமெனத்தோன்றுகிறபடியால் எனது விருப்பத்தில், நீங்கள் எல்லீரும் சலிப்புறாதிருக்க வேண்டிக்கொள்ளுகின்றேன். முதலாவது, திருவிதாங்கூரை எடுத்துக்கொள்ளுவோம். பெண்கல்வி, விஷயத்தில் திருவிதாங்கூர் சமஸ்தானம் மிக முற்போக்கடைந்திருக்கின்ற தென்றே சொல்லவேண்டும். சொல்லவேண்டும் என்பதுதான் என்ன? சொல்லியே தீரவேண்டும். அச்சமஸ்தானத்திலுள்ள பெண்களில் நூற்றுக்கு மூவர் கல்வியறிவில்லாதவர்களாக விருக்கலாமோ? என்னவோ? எதக்குறைய எல்லாருமே பெண்களும் கல்விகற்றவர்களாகவே காணப்படுகின்றார்கள். சுருக்கமாகக்கூற வேண்டுமானால் நூற்றுக்கு ஐம்பது பெண்மணிகள் பட்டதாரிகளாகவே விளங்குகின்றார்கள். பெண்கல்வியின் பொருட்டு திருவிதாங்கூர் சமஸ்தானத்திலேயே வேலுன்றி யிருக்கிறது. ரீஜெண்டு மகாராணியார் திரு மிகு. சேது லட்சுமிபாய் அவர்கள் சீர்திருத்த தாகம் மிக்குடையார். ஆனதினால் தான், திருவிதாங்கூர் சமஸ்தானம் சீர்திருத்தப் போக்கில் சிறந்து விளங்குகிறதென சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சிலவுட்களுக்கு முன்னே திருவிதாங்கூரில் உயிர்ப்பலி யிடுதலை ஒழிக்கச்சட்டம் செய்யப்பட்டது அநேகருக்குத் தெரிந்திருக்கலாம். கல்லுச்சாமிகள் பலி கேட்கிறதென வாயில்லா ஜென்மங்களாகிய உயிர்ப் பிராணிகளை யதையெய்யும் கொடுமையை நிறுத்தியது சில மடபக்தி மாக்களுக்கு மஹாகோபத்தை உண்டு பண்ணியிருக்குமென்பதில் சந்தேகமில்லை. மூடநம்பிக்கையை மக்கள் உள்ளத்தில் பதியச்செய்து அதன் மூலம் உழைப்பின்றி வயிறு கழுவும் வைதீகர் தம்மினமும் மலையளவுமூண்டெழுந்திருக்கும். ஆம்! என்னும் என்ன? அவர்கள் ஜம்பம் பலிக்கவழியில்லை. அத்தோடு நிற்காமல் சீர்திருத்தக்காற்று மேலும் வீசியடிக்கவே தொடங்கி விட்டது. சமீபத்தில் தேவதாசி அர்ப்பணம் சட்டமூலம் ஒழிக்கப்பட்டது எவ்வளவுமகிழ்ச்சிகரமானது. எச்சிறு கூட்டம் போற்றிற்று? எப்பெருங் கூட்டம் தூற்றிற்று? தூற்றுதலைக் கண்டார், கவனித்தார் யார்? இவ்வளவுக்கும் காரணம் திடமான சீர்திருத்தமனமேயன்றோ? நிற்க.

அநியாயக்கொடுமைகள் அழிந்தன.

அடுத்தபடியாக பரோடாவை எடுத்துக்கொள்ளுவோம். உற்று நோக்குமிடத்து பரோடாவைப் போல் பெண்மக்கள் விடுதலையில் பேரார்வம் கொண்டு கருமமாற்றி வரும் ஒரு சமஸ்தானம், வேறில்லை யென்றுதான் துணிந்து சொல்லவேண்டியிருக்கிறது. பெண்மக்கள் மிகவிரைவில் முன்னேற்ற மடைந்து மற்ற மேல் நாட்டுப் பெண்களோடு சமநிலையடையத்தக்க வழியில் பரோடா சமஸ்தானம் கங்கணம்கட்டி உழைத்து வருகின்றதானது பெண்விடுதலையில் கருத்துள்ள பெரியார் யாவருக்கும் அளவிடமுடியா ஆனந்தத்தை அளிக்குமென்பதில் ஐயப்பாடில்லை. பெண்ணுலகு அமைதிக்கப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு, கூறுறுணை கொடுமையில் நடத்தப்பட்டு வரும் இந்தியாவில் பரோடா நிலைமையைக் காணுந்தோறும், காணுந்தோறும் சீர்திருத்த உள்ளம்படைத்த சகோதர சகோதரிகளுக்கு செப்பொணா மகிழ்ச்சியை உண்டாக்கு மன்றோ? அநியாயக்கொடுமைகள் பலவற்றை பரோடா சமஸ்தானம் அழித்துவிட்டதானது பெண்கள் உலகிற்கே ஒருபுத்துயிர் அளித்தது போலாகும். பாலிய விவாகம், விதவா விவாகம் இவைகளுக்குச் சட்டம் ஏற்பட்டதோடு சமீபத்தில் விவாகரத்துச்சட்டமும் நிறைவேற்றப்பட்டாய் விட்டது. பெண்மக்களின் உண்மையான முன்னேற்றத்திற்கு, பாலியவிவாக மொழித்தல், விதவா விவாகம் வேண்டுதல் சொத்துரிமை அளித்தல், விவாக ரத்துரிமை கொடுத்தல் ஆகியவைகள் யாவும், இன்றியமையாது வேண்டப்படுவனவாதலால் முன்னர் செங்கற்பட்டு மகாநாட்டில் சுயமரியாதைக்காரர்கள் மேற்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றினார்கள். அதைக்கண்டு வைதீகர்களும், பெண்கள் விடுதலையில் கவலைகொண்டவர்களாக அன்று வரைக் காணப்பட்டவர்களும் சிறிய சிற்றம் செப்புந்தரமல்ல. அதன் பின்னர் சென்னையில் கூடியபெண்கள் மகாநாட்டிலும் அதே தீர்மானங்கள்தான் நிறைவேற்றப்பட்டன. சும்மாவிருக்க முடியுமா சுயகலக் கூட்டத்தால்? ஆய்! ஊய்!! என்று துள்ளிக்குதித்தார்கள். பத்திரிகைகளில் பத்திபத்தியாய் வரைந்தார்கள். பெண்களுக்குக் கூடவா விவாகரத்துரிமை என பெருமூச்செறிந்தார்கள். வந்ததே மோசமென வாய்விட்டலறினார்கள். மேல் நாட்டு நாகரீகப்பித்து பெண்களையும்பிடித்துக்கொண்டதே? இனி யென்செய்வதென எவ்கினூர்கள். சுயகலக்கூட்டத்தார் யாதும் புலம்பியும், என்ன ஒப்பாரி வைத்தும் ஐயோ! பாவம்! சுயமரியாதைக்காரர்கள் மனமும், தீர்மானத்தை ஆதரித்தப் பெருமாட்டிகள் உள்ளமும், ஒருசிறிதுகூட அசைந்தபாடில்லை. ஆட்டங்கொடுத்தபாடில்லை. போதாக்குறைக்குப் பெண்களே முன்வந்து, அவ்வன்பர்களுக்குச் சவுக்கடி கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். எனவே பெண்கள் விஷயத்தில் இந்தியா, குறிப்பாகத் தமிழ்நாடு இவ்வளவு பிற்போக்கான நிலையிலிருக்கையில், பரோடா சமஸ்தானம், ஒன்று மட்டும் என்னவோ, எனிப்படி எறுவதுபோல் மள மள வென்ற மிக முற்போக்கில் போய்க்கொண்டிருப்பது ஆச்சரியப்படக்கூடியதும், ஆசைப்பட வேண்டியதும், ஆனந்தங்கொள்ளவேண்டியதும் அல்லவா? நிற்க, விவாகரத்து என்றதும் நம்நாட்டில் சில மக்களுக்குப் பெருங்திகில் உண்டாகிறது. கூர்ந்து நோக்கும் பட்சத்தில் திகில்கொள்ள எவருக்கும் இடமிருக்காது. ஆழ்ந்த யோசனையின்றி அவசரப்பட்டால் எப்பேர்க்கொத்தவர்களுக்கும் அறிவுருப்பு உண்டாவது இயற்கையே? பரோடாவில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் நிபந்தனைகளைப் பார்த்தாலே உண்மையாவும் உள்ளங்கை நெல்லிக்கனியென கொள்ளிநிற்புலனாகும். விவாகரத்துரிமை இன்றி நம் நாட்டில் பெண்கள்படும் கஷ்டம் சொல்லிமுடியாது. எதோ ஒருவனுக்கு மாலையிட்டு மணவாளனாகக் கொண்டுவிட்டால், அதன்பின் அவன் இறந்தாலும், அல்லது உயிரோடிருந்து, மாண்டவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டு நிரிந்தாலும், அப்பெண்ணானவள் விதவையாகவோ, வாழாவெட்டியாகவோ தான்தன் ஆயுட்காலத்தைக் கழிக்கவேண்டுமென்னும் வைதீக நீதிக்கொள்கை, நியாயமென மககுத் தோன்றவே யில்லை-தர்மவான்களுக்குத் (தன்னலக்காரர்களுக்கு) தகுதியாயிருக்குமானால் அதுபற்றி நாம் கவலைப்படவோ, கருத்தை மாற்றவோ போவதில்லை.

பரோடாவைப் பின் பற்றுவர்களா? வைதீகத்திற்குச் சாவுமணியடித்து பெண்ணுலகிற்குப்பேருதவியளித்த பரோடாசமஸ்தானத்தைப் பார்த்தாவது மற்றவர்களுக்குப்புத்தி வருமா? என்றுகேட்கின்றேன். மதம், சாஸ்திரம், வைதீகம், தர்மம், கல்வி, பூதம் எல்லாம் பரோடா சமஸ்தானத்தின் முன்பதற்றோடினவே? ஆங்குள்ள மக்கள் எவ்விதக்குறையுமின்றி சுகமே வாழ்ந்துவருகின்றனரன்றே? பெண்கள் விடயத்தில் பரோடாவை விட வேகத்தில் செல்ல இனி எவராலும் முடியாதென்றன்றே எண்ணவேண்டியிருக்கின்றது. பரோடா அரசர் பெருமானின் நிடமான சித்தமும், தாராள நோக்கும், விரிந்த மனப்பான்மையும் என்றென்றும் போற்றி மகிழக்கூடியதன்றே? ஆம்! அதில் சிஞ்சித்தும் ஐயமில்லை. ஆனால், அம்மனப்பான்மை இங்கு யாருக்கு வரும்? என்பதே கேள்வி. அவ்வளவு தாரம் வருவதற்கு இங்குள்ள பெண்கள் அவ்வளவு அதிர்ஷ்டம் பெற்றவர்களா? என்றே சிந்திக்கின்றேன். மற்ற சுதேசசமஸ்தானங்களும், பெரியார்களும் குறிப்பாக பிரிட்டிஷ் சர்க்காரும் பரோடாவைப் பின்பற்றுவார்களா? பரோடா சமஸ்தானத்தைப் பார்த்தாவது நிடசித்தம் கொண்டு சீர்திருத்த சட்டங்களைச் செய்யத் துணிந்து முன்வருவார்களா? ஆனால் சுயலமே உருவெடுத்த மகன் மட்டும் எக்காலும் முன்வரப்போவதில்லையென உறுதி கூறுகிறேன். முன்வந்து உதவி செய்யாவிடினும் மூலையிலிருந்தே தன்பம் விளைவிப்பார்க்க வென்பதையும் மறவாது உள்ளத்தில் பதிய வைத்துக்கொள்ளுதல்வேண்டும். பாலிய விவாகத் தடைச் சட்டமாகிய சாரதா சட்டம் உயிரற்றபிணமாகி விட்டது. பிரிட்டிஷ் சர்க்கார் தங்கள் வலிமையை இதில் காட்டா தொழிந்தனர். இந்து முஸ்லீம் வைதீக வெறியர் தம் வாய்ப் புலம்பலுக்குப் பயந்து பெண்ணுலக நிர்தாட்சண்யத்தை பெருமையாய் ஏற்றுக்கொண்டு மகிழ்ச்சியுற்றிருந்த மக்களை துக்கத்திலாழ்ந்தச்செய்தனர். பிரிட்டிஷ் அரசாங்கத்தால், பெண்கள் சிறிது முன்னேறுவர், என்று எண்ணிய புண்ணியவான்கள், எதிர்பார்த்த மாதரசிகள் ஏமாற்றமடைந்து ஏங்கினர். போதாக்குறைக்கு செத்த பாம்பை ஆட்டுவதுபோல் இன்னும் பார்ப்பனப்புலிகள் தங்கள் ஜாதி வழக்கத்தைக் காட்டிய வண்ணமேயிருக்கின்றனர். திருத்தத்தீர்மானங்கள் நீட்டியது போதாதென்று, மேலும் இன்று புதிதாய்த் தீட்டித்தங்கள் மதத்தையும் சாஸ்திரத்தையும் காப்பாற்ற முற்பட்டின்றனர்.

வைதீகத்திற்குச் சாவு மணி.

அந்தோ! கொடுவினையே? வைதீகத்திற்கு இந்தியாவில் என்று சாவு மணி அடிக்கப்படும்? படித்த பெண்கள் தங்கள் அறிவையும் சேர்த்தையும், தம்மின் உயர்விற்காக செலவழிக்க முன்வருவது எப்போது? பெண்கள் சிலரின்புத்தி இவ்விஷயத்தில் செல்லாது வேறு விஷயத்தில் சென்றுவிட்டதானது வருந்தத்தக்க தென்பதில் குற்றமென்னும்? நிகழ் காலத்தில் பெண்கள் சிறிது உயர்வு பெற்றதாகக்காணப்படினும், நிருப்தியளிக்கத்தக்க நிலை எப்படவில்லை யென்பது மறுக்கமுடியாத உண்மையன்றே? இன்றைய நிலைமையில்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

திருடன் தடிக்கும் வேற்றுமை தெரியாமல் போய்விடும் என்பதைச்சொல்லவந்திருக்கும் சுயமரியாதை இயக்கத்தையாரும்பகைக்கஇயாயமேயில்லை

சுயராஜியமும் சுதேசியமும் வேண்டாமென்று யாரும் சொல்லமாட்டார்கள். அதற்குப்பகையாக சுயமரியாதை இயக்கம் உண்டாகவுமில்லை. மேற்நாட்டாரிடமிருந்தகாங்கிரசையும், சுயராஜியத்தையும்நாம் கற்றுக்கொண்டதுபோலவே நியாயத்தையும் சௌகரியத்தையும் பிரிக்கும் வழியையும் பழகிவருகிறார்கள். அதேடு முன்காலம் முதற்கொண்டே நமது நாட்டு உயர்ந்த ஜாதிகளென்னப்பட்டவர்கள் நியாயத்தைத் தங்கள் சௌகரியத்திற்கு மெருகுபண்ணிக்கொண்டதும், கூடிக்கொண்டு நியாயமான தருமங்களைத் தடுத்துவிடுகிறார்களே. அதற்குநாம் 'இடம் கொடுக்கக்கூடாமா? சுயராஜ்யம் வந்தபின் எல்லாம் சரிப்பட்டுவிடும்என்று சொல்லுகிறார்கள். சுயராஜ்யம் வராமலிருக்கும் இப்பொழுது சரிப்படுவதற்கு வந்த தடைஎன்ன? கப்பல் ஏறக்கூடாத பார்ப்பான், சமைக்கப் போகவும், மதுமாம்சமுண்ணக்கூடாத பார்ப்பான் கிடைத்த மாம்சங்களை உண்டு சமைச்சாராயங்களைக் குடிப்பதற்கும், ஆசிரமங்களில் வாழவேண்டிய பார்ப்பான் அரண்மனை போன்ற பங்களாகளில் வாழ்வதற்கும், சாஸ்திரியாகவும், ஆச்சாரியாகவுமிருந்து வேதம் படிக்கவேண்டிய பார்ப்பனன் வட்டமேஜை மகாநாட்டில் விளக்குவதற்கும், அவர்களுடன் அவர்கள் சமூகங்கள் கூடி சுகவாழ்வு வாழுவதற்கும், அதுபோலவே மற்ற உயர்ந்த ஜாதியென்னப்பட்டவர்கள் தங்கள் சுக சௌகரியங்களுக்கு தங்கள் முன் வழக்கங்களைவிட்டு இஷ்டம்போல் நடப்பதற்கும், சுயராஜ்யம் தேவையில்லை. சுயராஜ்யம் வந்தபின் என்கிற தடையுமில்லை. ஒரு காடார் தண்ணீர்குடிக்கஇணைத்திற்குப் போனால்மண்டையுடைக்காமலிருக்கச் சுயராஜ்யம் வரவேண்டும். இது என்ன நியாயமய்யா? தன்னைப்போல பிறரை முழுதும் பார்க்காவிட்டாலும் தண்ணீரில் கூடப் பார்க்கக்கூடாதா? இப்பேர்ப்பட்டமன எண்ணமுடைய சமூகங்கள்பிறர்காலின்கீழ் நசுக்குண்டு கிடப்பதுயென்று தான் போகும்? சுதந்திரத்தைக் கொடுப்பதற்கு தயாராக இல்லாத எவனும் சுதந்திரத்திற்கு அருகனல்லவன் என்பது உண்மைதானே? இதில் சுயராஜியம் வந்தபின் மண்டையடியை நிறுத்துவேன் என்பது மடமைகன் அடிமைகளை உண்டாக்குவதற்கு அதிகாரத்தை விரும்பும் ஆசாட பூதிவேஷமல்லவா? பொதுப்பள்ளியில், வீதியில், இணற்றில் எல்லாருக்கும் உரிமையுண்டு என்ற நினைப்பதற்கு எந்த சுயராஜ்யம் குறுக்கே நிற்கிறது? இதை உங்களில்சிலர் ஆலோசித்துப்பார்க்கட்டும்.

இத்தனை பெரிய தேசத்து ஜனங்களை தாழ்த்தப்பட்டவர்களென்றும், ஒதுக்கப்பட்டவர்களென்றும் வைத்துக்கொண்டு வீரம்மிகுந்த ஜாதியார்களின் மனம் புண்பட்டு அன்னிய மதத்திற்குப்போக எதுவாயிருந்து தண்ணீரைத்தடுத்து, படிப்பைத்தடுத்து, பாதையைத்தடுத்து, பக்க பலத்தை யெல்லாம் போக்கி ஒன்று சேர்ந்து ஒரு முகப்பட்டுப் பழகவழியில்லாமல் ஆசாரமென்றும் அதற்குள் நுழைந்துகொண்டிருக்கும் சமய ஒழுக்கமென்றும் சொல்லி அந்நிலையிலேயே நமது சனங்களை வைத்துக்கொண்டிருந்தால், ஆபத்துகாலத்தில் அவர்களால் உதவியில்லாமல் போய்விடும். அவர்களுடைய ஜடத்தன்மையின் பாரம் பொருக்க முடியாததாய் விடும். தோணியின் அடியில் சிறு துளைக்கு ஒப்பாகும். காற்று சரியாக இருக்கும்வரை தண்ணீரை இறைத்திறைத்து விட்டுத்தோணியைச் செலுத்தலாம். ஆனால் பெருங்காற்றில் எல்லாரும் தண்டையும் சுக்கானையும் பாயையும் கவனித்துக் கொண்டிருக்கையில் சிறிய துளை பெருங்கேடாம். அந்தக்கேடுதான் நமது நாட்டைப் பல வன்னியருக்கு அடிமையாக்கினது. இன்று சுயராஜியம் வந்தாலும் நமது நாட்டு வருணாச்சிரமக் கொடுமையை அம்மா வீட்டு வினாக்கெண்ணை என்று வைத்துக்கொண்டிருந்தால் நாளை பக்கத்து வீட்டுக்காரன் பறித்துக்கொண்டு போய்விடுவான் என்றுதான் சுயமரியாதை இயக்கம் சொல்லிவந்திருக்கிறது. ஆனதால் இந்த சங்கத்தை உலகனித் சிலர் கோபிக்கவேண்டிய அவசியமேயில்லை என்பதைத் தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன். நாடார்குலமித்திரனை எல்லாரும் ஆதரித்து அதைஉன்னத நிலைமைக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். அதில் எழுதப்படும் விஷயங்களில் பல உண்மையான அவசிய விஷயங்களினிடத்தில் இருதயத்தைப்போட்டு எழுதின வைகளாக விருக்கின்றன.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

யத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு மனிதராம் வீளங்கும் இந்தியராகிய நாம் மாத்திரம் இன்னும் சமயத்தின் சூழ்ச்சியிலும், சுயலிலும் அகப்பட்டு அதோகதியுறுகின்றோம். நாம் 'சாமி'களாகவும் 'முனி'களாகவும் முயல்கின்றோமே யன்றி கருமவீரராக முயல்கின்றோமில்லை. எனவே சோம்பலில் நாம் கிடந்தழல்கின்றோம். நம்நாட்டு 'முற்றுந்துறந்தமுனி' வரையும் கண்டித்துத்தொழில்புரியுமாறு வேண்டிய அந்த அமைச்சுத் தொழிலாளியின் ஆலோசனை யின்படி நாம் இனியேனும் தொண்டாற்றுந்தீரராக விழைவோமாக. ஆசியாகண்டத்துச் சோம்பற்றனமும் இந்தியாட்டுத்தடிச்சோம்பலும், ஒழியும் வண்ணம் நாம் முனைந்து பாடுபடுவோமாக.

## சுயமரியாதை சங்கம் நாகபட்டணம்.

20-7-31 ல கூடிய நாகபட்டணம் சுயமரியாதை சங்க அங்கத்தினர்களின் பொதுக் கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானம் ஏகமனதாய் நிறை வேறியது.

"லண்டனில் கூடப் போகும் வட்ட மேஜைமகாநாட்டிற்கு R. K.ஷண்முகம் M.L.A.கோவை S. ராமனுதன் M. A. B. L. மாயவரம், S. ராமச்சந்திரன் B: A. B. L. சிவகெங்கை இவர்களைச் சுயமரியாதை இயக்கத்தின் பிரதிநிதிகளாக அனுப்பவேண்டுமாய் கவர்னர் ஜெனரல் அவர்களையும் சென்னை கவர்னர் அவர்களையும் கேட்டுக்கொள்ளுகிறது."

இத்தீர்மானத்தின் நகல் கவர்னர் ஜெனரல் அவர்களுக்கும், சென்னை கவர்னருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது என S. P. கிருஷ்ணன் பொதுக் காரியதரிசி எழுதுகிறார்.


## ரூவின் மேரி பட்டுப் புடவை.

இது விலை யுயர்ந்த பட்டில் உடல் முழுவதும் 2," 3" அளவுள்ள தங்கச் சரிகைப் புட்டாக்கள் நிறைந்ததும், கரை, முகதலை தங்கச் சரிகையினால் கொடி, செடி வேலைப்பாடுள்ளது. பல அழகிய வருப்பமுள்ள கலர்களில் செய்யப்பட்டது.

18 முழம் X 45" புடவை ஒன்றுக்கு விலை ரூ. 75, 85.

மற்றும் உடல் சாதா கரை, முகதலை சரிகை வேலைப்பாடுள்ளதும், பட்டு வேஷ்டிகள், துப்பட்டாக்கள், பச்சாலுக்கள். சில்க் பார்டிங் பீஸ், கோட்டிங் பீஸ் முதலானதுகள் விலை நயமாய்க் கிடைக்கும்.

ஆர்டர்களை கனிவுத்து வி. பி மூலமாய் அனுப்பப்படும்.

எமது விலாசம்:—

V. Raja Ram & Co., Silk Merchants,
38|203 Ramapura, Benares City. (India.)

தயவு செய்து எமது விலாசத்தை ஆங்கிலத்தில் எழுதவும்.
வியாபாரிகளுக்கு விலை பிரத்தியேகமாய் கொடுக்கப்படும்.

இனிது இனிது, இன்ஜெக்ஷனிலும் இனிது
R. K. பழனிஸ்வாமிகள்

## இன்டியன் சக்தி முக்தி ஆயில்.

இவ்வற்புத சஞ்சீவினியை, எந்த ஜீவராசிகளுக்கேனும் உடல் வாதுனேயேற்பட்ட காலத்தில், டைரகஷனில் கூறியவண்ணம் மேல்பிரயோகமாக, சகல வியாதிகளுக்கும் உபயோகிக்க, உடனுக்குடனே கற்புணமளித்து, ஆபத்ரக்ஷணைப்போல் நன்கு குணப்படுத்துவதால் ஒவ்வொரு குடும்பங்களிலும் பல ஆயில், மிக்சன், பற்பல இஞ்சின் சகலடிரைவர்களினிடமும், மிஷின்கள் ஓட்டுமிடங்களிலும், நானுவித ஆயுதங்கள் புழங்கும் கிடங்கு, பட்டரை, ஒர்க்ஷாப், மூலானவிடங்களிலும், பல மிருக ஜாதிகளினிடமும் பழகுபவர்களினிடமும், காலரை, தோட்டம், மலை, மரம், மண், கவலேச கவரத்திலுள்ளவுபரசக்கனிகளில் தொழில் புரிபவர்கள் முதலான மகாஜனங்கள் ஒவ்வொருவர்களினிடமும், முக்கியமாய் இத்தைல மிருக்குமானால், உலகத்தில் பம்பரம்போல் சுழன்றாடி ஓடிக்கொண்டிருக்கும் பற்பல அபாய விபத்துகளினால் இம்சைகளினின்றும் பல அபமிர்த்துக்களினின்றும், சில கண்ம நோய்களினின்றும் விஷக்கடி, வெட்டுக்காயம், ரண வியாதிகளினின்றும் மீட்கப்படலாமென்பது யிதவும் உறுதி. இதின் முழு விபரகளைப்பற்றி நமது கேட்லாக் மூலமாய் சகல உண்மைகளும் அறியலாம். கேட்லாக் இலவம்.

1 அவுன்ஸ் சக்தி முக்தி ஆயில் விலை ரூ. 2—0—0
1/4 அவுன்ஸ் ... ... விலை ரூ. 0—8—0

கோ. கோவிந்தராஜுலு செட்டியார்,
மனிசை அண்டி வரப் வியாபாரம்,
(தாரையூர்) முசிரி தாலூகா, திருச்சி ஜில்லா.


(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஏதோ சிறிதளவு மாறுதல் காணப்படுவது ஒருவிதத்தில் சந்தோஷப்படவேண்டியதே?

முடிவாக பரோடா சமஸ்தானம், மாட்சிமைதங்கிய மகாராஜா அவர்கள் கீழேஜாப்பிராரத்தித்த வாசகர்களிடமும் விடைபெற்று இக்கட்டுரையை இத்துடன் முடிக்கின்றேன்.

## குடி அரசு புத்தகாலயம்.

கைவல்யம் அல்லது கலிக்கியானம். இது கைவல்யசாமியார் கட்டுரைத்தொகுதி. ... 0—8—0
மனு நீதி மருமம் ... 0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ... 0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு. ... 0—2—0
சோதிடப் புரட்டு. ... 0—2—0
திரு ஈ. வெ ராமசாமியின் சிர்திருத்தமணாடாட்டு சொற்பொழிவு (2-பதிப்பு) ... 0—2—0
சுயமரியாதைப் பாடல் ... 0—2—0
தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம். ... 0—3—0
பங்கமும் அல்லது பார்ப்பனக்கொடுமை ... 0—4—0
தோலஞரியன் ... 0—4—0
இராமாயணத்தின் ஆராய்ச்சி பாலகாண்டம் 0—4—0
ஷை 2-ம் பாகம் அயோத்தியாகாண்டம் ... 0—8—0
மேயோ கூற்று மெய்யா பொய்யா (2-பதிப்பு) 0—3—0
அகத்தியர் ஆராய்ச்சி ... 0—2—0
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்? ... 0—2—0
* குறள் ... 0—8—0
* இயற்கைமதம் ... 0—8—0
* சிதம்பர ரகசியம் ... 0—8—0
* சுதந்திரப் போர் அல்லது உப்பள முற்றுகை. 0—4—0
* சுயமரியாதைத்தத்துவகீதங்கள் ... 0—4—0
* பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை—[சித்ரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் கொண்டது] ... 0—6—0
* ஆராய்ச்சி அணிகலம் 0—12—0
* சென்னை லோகல் போர்டு ஆக்ட் ... 2—0—0
* மோட்டார்கார் இயந்திரசாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிர்ச்சியும் 50படங்களுடன் 200 பக்கங்களடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 2—0—0. ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

* இந்தப்புள்ளி உள்ளபுத்தகங்கள் விற்பனைக்காக நமக்கு அனுப்பப்பட்டவைகள்.

புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

ஏனெனில் புதிய உத்திரவுப்படி வி. பி. கள் 3 நாள்களில் வாப்பீஸ் செய்யப்படுவதால் அநேக வி. பி, கள் வாப்பீசாகிவிடுகின்றன. ஆதலால்தான் ஆர்டருடன் பகுதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும் என்று விரும்புகிறோம்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

ஆர்டருடன் 1 ரூபாய் முன்பணமனுப்பவேண்டும்.

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,**
**ஈரோடு**

## "குடி அரசு" ஏஜண்டுகள்.

R. ராமலிங்கம், வியாபாரம் தோட்டார்.
*ராஜாத்னம், தமிழன் ஆபீஸ், ஆண்டர்சன் பேட்டை.
*காஸ்மாபாலிட்டன் கிளப் விருதுநகர்.
*A. V. பாலசுப்ரமணியம் 23, எடய தெரு, திருவாரூர்.
பி. சாமுவேல் பிள்ளை, ஜெனரல் நியூஸ் ஏஜண்ட் தாத்துக்குடி.
*எஸ். மாசிலாமணி பிள்ளை நியூஸ் ஏஜண்ட், பாலக்கரை திருச்சி.
S. குற்றாலலிங்கம் பிள்ளை நியூஸ் ஏஜண்ட் மீனாக்ஷிபுரம் திருநெல்வேலி.
S. P. திருஷ்ணசாமி, நாகப்பட்டணம்.
P. பழனியாண்டி செட்டியார், நாகூர்.
T. சேத்துராயடு சித்திரக்காரத் தெரு, மதுரை.
K. கணபதி, சாக்கோட்டை கும்பகோணம்.
மானேஜர், 'புதுவைமுரசு' புதுச்சேரி.
P. R. C. எல்லப்பன், மரக்கடை வியாபாரம், கொசததெரு, காஞ்சீபுரம்:
A. S. முருகேசம், பஜார் திண்டுக்கல்.
*T. சுப்பாமணியபிள்ளை, 3, செங்கல்வராய முதலி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.
A. R. M. சுந்தர பாண்டியன் கடை வீதி, அருப்புக்கோட்டை.
G. V. ராமசாமி பெரிய கடைவீதி, கரூர்.
*B. தங்கசாமி, டைலர் பெரிய கடைவீதி, கோயமுத்தூர்.
ஹாஜி முகமது ஷேக் உசேன், 57. சுண்ணாம்புக்காரத்தெரு, காரைக்கால்.
*M. ரத்னம், கிரோசினுயில் டிபோ, நெல்லிக்குப்பம்.
K. N. தங்கவேலு, காரியதரிசி சமூகசீர்திருத்த சங்கம் கல்லிடைக்குறிச்சி.
C. S. ஜோசப் 159 சேவல்ரி ரோடு, பெங்களூர் Cant.
M. N. M. பாவலர், நியூஸ் ஏஜண்ட், விழுப்புரம்.
S. ராமசாமி செங்குந்தர் தெரு, சினாபுரம்.
முத்துசாமி ஸ்டோர் ஹைஸ்கூல், பொறையார்.
P. S. ஜீவரத்னம் பிள்ளை, 2. மலாய்வீதி, ஸ்லேவ்ஜுலண்டு, கொளம்பு.
A. S. பரமசிவம் நியூஸ் ஏஜண்ட், பம்பலபிட்டியா, கொளம்பு.
எட்வர்ட்பால் திருமலாபுரம்.
செல்வராய கவுண்டர் திருப்பத்தூர்.
S. அப்பாதுரை மண்டி, ராசிபுரம்.
M. N. M. பாவலர் நியூஸ் ஏஜண்ட், திருப்பாபுலியூர்
S. C. கந்தசாமி, 26, குமாரசாமி செட்டி வீதி செவ்வாய்ப்பேட்டை, சேலம்
சிதம்பரம்.
எம். கலியாணசுந்தர முதலியார் கதரஸ்டோர் மேலவீதி சாத்தான் குளம்.
பெரியசாமி ஸ்டோர் ஷாப் வியாபாரம் பட்டுக்கோட்டை.
கே. சாரங்கபாணி கொண்டப்பநாயடுபாக்கியம் ஸ்ரீவில்லிப்புத்தூர்.
பி. ஞானதேசிகம் மாயவரம். எம். கலியாணசுந்தர முதலியார் கதர்ஸ்டோர்,

* இந்த புள்ளியுள்ள வியாபாரிகளிடம் குடி அரசு பதிப்பான புஸ்தகங்களும் கிடைக்கும்.

கீழ்க்கண்ட நகரங்களிலுள்ள ஹிகின்பாதம் புஸ்தகசாலைகளில் குடி அரசு பிரதிகள் கிடைக்கும்.

காட்பாடி.
திருநெல்வேலி.
அரக்கோணம்.
சென்ரல் ஸ்டேஷன்.
மதுரை.
மாயவரம்.
நாகபட்டணம்,
சேலம்.
தஞ்சாவூர்.
பௌரிங்பெட்.
எக்மூர்.
ஜோலார்பேட்டை.
திருச்சி.
போத்தனூர்.
ஈரோடு.

## குடி அரசு வெளிநாட்டு ஏஜண்டுகள்

சிங்கப்பூர்.

Mhd. Dulfakir & Co.,
34, North Bridge Rd.
India Novel depot
73, Serangoon Road.
கோலாலம்பூர்.
R. . Naidu,
86, Ampang St.
O. M. Ali Saiboo & Co,
27, Java Street
The Selanger Stamp Co.,
Market Street.
S. S. Abdulkadir,
South Indian Boookstore,
122, Pitty street, penang
Sorojini Vilas Coffee Club,
85: Paul Street,
Seramban N. S.
The Central stores
61, Jalan Ibrahim,
Johore Bharu
C. Kandiah,
85, Sultan street, Klang.
S. G. Sami Agency,
3, Jalan roya,
Sungei Pattani
Kedah, F. M S.

## சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

### 'குமரன்'

வாரப்பத்திப்பு

உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0
மாதப்பத்திப்பு.
உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0
ஆசிரியர்: சோ. முருகப்பா.
விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

### 'முன்னேற்றம்'

வாரப்பத்திப்பு

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 3—0—0
இந்தியாவுக்கு ரூ. 5—0—0
ஆசிரியர்: கோ. சாரங்கபாணி
விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

### 'புதுவைமுரசு'

வாரப்பத்திப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: S. குருசாமி B.A.
மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

### 'நாடார் குலமித்திரன்'

வாரப்பத்திப்பு

உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு ,, 5—0—0
ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்
விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

### 'தமிழன்'

வாரப்பத்திப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

### 'சண்டமாருதம்'

வாரப்பத்திப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: அ. பொன்னம்பலம்
மானேஜர், "சண்டமாருதம்"
கோட்டையூர்,
ராமனாதபுரம் ஜில்லா.

## சிங்கப்பூரில் குடி அரசு பதிப்பகப்புஸ்தகங்கள் கிடைக்குமிடம்.

"முன்னேற்றம்" ஆபீஸ்,
152, சிலிகி ரோட்,
சிங்கப்பூர்


## சித்தர் பார்மஸி

விஷகடிகளினுலுண்டான ஊரல் தடிப்பு பத்து குணமடையும். 3 நாள் சாப்பிடும் விஷமை ரூ. 2. சூத்பத்பம், நாட்பட்ட வயிற்று வலி, வாய்வு ரோகங்கள் 7 வே ளையில் குணமடையும். ரூ. 3-8-0. கேட்லாக் இலவம்.

Dr. P. M.
சங்கரலிங்கம் பிள்ளை,
சோவிற்பட்டி, S. I. R.

எழு தலைமுறைகளாய் கையாண்டனுபவம் வாய்ந்ததும், வைத்திய மகாநாடுகளிலும், கண்காட்சிகளிலும் மதிப்பு பெற்றதுமான சிறந்த ஒளஷதங்கள் எங்களுடையது. எவ்வகை வியாதிக்கும் ஏற்றது. எல்லோராலும் புகழ்பெற்றது. உண்மையும் உத்திரவாதமுமான மருந்து.

நீங்கள் என்றுமழியாத இளப்பருவத்தை அடையவேண்டுமானல் பழனி சி. எம். சாமி

# மகா வீரிய தங்க பஸ்பம் சாப்பிடுங்கள்

தாதுபுஷ்டியில் மன்மதனுக்கோப்பாவீர்கள். பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்

வயோதிக தசையாலும், வாலிபபருவதுர்க் கிருத்தியங்களாலும் நீங்கள் இழந்த பலம், தாதுநஷ்டம், போகசக்திக்குறைவு, மனஉற்சாகம் இவைகளை திரும்பக்கொடுத்து, இல்லற ஒற்றுமை, வீரிய விர்த்தி முதலியவைகளைக் கொடுப்பதில் இணையற்றது: 24 நாள் பஸ்பம் விலை ரூ 10

## காமரூபிலேகியம்

தாதுபுஷ்டிக்கு மிக உயர்ந்தது
இதில் தங்கபஸ்பம் வைத்துச் சாப்பிடலாம் சேர் ரூ 15.

குருதாளக பஸ்பம்—இருமலுக்கு

காசம், சூலயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி, 8-விதகாசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. 24 நாள் புட்டி 1க்கு ரூ. 8.

## குருநாக பஸ்பம்—மூலத்திற்கு

ஆப்ரேஷன் அவசியமில்லை. மூலை தானே கரையும், கீழ்மூலம், பத்தமூலம், குத்தல், மூலமூலை மலபந்தம் முதலிய ஒன்பதும் அதிசீக்கிரத்தில் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஒளஷதம். புட்டி 1-க்கு ரூ. 4.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

## மாதர்களுக்கு

இது தான் வேண்டியது

## கேர்ப்ப எண்ணெய்

மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனேநிறுத்தும். சரியாய் பலிஷ்டையாகும். கேர்ப்பாசயம், சின்னப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கேர்ப்பம் உண்டாகும். மிக அருபவமானது. புட்டி 1க்கு ரூ. 2

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன் பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, S. I.


உண்மை விளக்கம பத்திபகத்தில அச்சிடபபடதது